பக்கங்கள் : பதினாறு + II

Registered as a Newsp.

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை (10.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 256

# வவுனியா வடக்கில் 3 முனைகளில் 2 நாள்களாகக் கடும் மோதல்கள்

## முன் நகர்வுகளை முறியடித்ததாகப் புலிகள் அறிவிப்பு

வவுனியா, ஓகஸ்ட் 10

வவுனியா வடக்கில், பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் ஆகிய மூன்று முனைகளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும் நேற்றும் அரச படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் விட்டுவிட்டு கடும் மோதல்கள் நடைபெற்றன.

அந்த மோதல்களின் போது இராணுவத்தினரின் முன்னகர்வுகள் முறியடிக்கப்பட்டதாகவும், அவர்கள் விரட்டப்பட்டனர் என்றும் விடுதலைப்புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மும்முனை நகர்வு படை நடவடிக்கையை எதிர்த்துத் தாம் நடத்திய முறியடிப்புத் தாக்குதல்களில் 15 படையினர் பலியானதாகவும் 29 பேர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் மேலும் அறிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற மோதல்களில் தாம் முன்னேறியதாகத் தெரிவித்த இராணுவத் தரப்பினர், சனிக்கிழமைக் கள நிலைமை குறித்து நேற்று நள்ளிரவு வரை எந்தவித தகவலையும் வெளியிடவில்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க)




முதலாவது போட்டியில் செக் குடியரசு வீராங்கனை தங்கப்பதக்கம் பெறும் போது..



ஒலிம்பிக்கின் இந்திய வீரர்களின் மோதல்களின்போது.....

## எமது படையினர் இப்போது விடுதலைப்புலிகளின் கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறார்கள்

மெதிரிகிரிய, ஓக. 10

நாம் இப்போது விடுதலைப்புலிகளின் கதவுகளை தட்டிக்கொண்டு இருக்கிறோம். அவர்களின் இதயபூமியான முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் வரைக்கும் அவர்களை ஒடுக்கிவிட்டோம் - அடைத்து விட்டோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கா. மெதிரிகிரியவில் நேற்று நடைபெற்ற வடமத்திய மாகாணசபை தேர்தல் கூட்டத்தில் பேசுகையிலேயே இவ்வாறு சொன்னார்.

எல்லாவற்றுக்கும், முன்னதாக இந்த நாட்டில பயங்கரவாதம பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும். அதற்குப் பின்னரே பேச்சு வார்த்தை என்ற பேச்சை எடுக்கலாம்.



விடுதலைப்புலிகளின் இதய பூமியெனக் கருதப்படும் முல்லைத் தீவுக்குள்ளும் கிளிநொச்சிக்குள்ளும் தாம் நுழைந்துவிட்டதாக எமது படையினர் அறிவித்துள்ளனர். இந்த இரு மாவட்டங்களிலுமே அவர்களின் நிர்வாகத்தலைமையகங்கள் இயங்கி வந்தன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பிமலை கிளைமோர் தாக்குதல்களில் அதிரடிப்படையினர் 10 பேர் பலி!

### விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 10

மட்டக்களப்பு, குடும்பிமலைப் (தொப்பிகலப்) பகுதியில் வெள்ளிக்கிழமையன்று தாம் படையினர் மீது இரண்டு தடவைகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் பத்து விசேட அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் என்று இரண்டு தடவைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் -

அந்தத் தாக்குதல்களில் காயமடைந்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## "டாடா" காரில் பயணம் செய்துகொண்டிருந்த 6 இலங்கைத்தமிழர்கள் திருமங்கலத்தில் கைது!

சென்னை, ஓக. 10

தமிழ்நாட்டில், திருமங்கலம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வாகனம் ஒன்றை திடீர் சோதனை நடத்திய பொலிஸார் அதில் இருந்த இலங்கைத் தமிழர்கள் ஆறு பேரைக் கைது செய்துள்ளனர்.

அண்மையில் பெங்களூர், அகமதாபாத் ஆகிய இடங்களில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து, தமிழகத்திலும் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

அதன் ஓர் அங்கமாக வாகனங்கள் மற்றும் விடுதிகள் அதிரடியாக சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் சோதனையின் போது சந்தே

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இருந்து இடம் பெயர்ந்தவர் வன்னேரியில் ஷெல் தாக்குதலில் பலி

வவுனியா, ஓக. 10

கிளிநொச்சி, வன்னேரிப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் திருகோணமலையைச் சேர்ந்த அகதி ஒருவர் மரணமானார். வன்னேரிப் பகுதி மீது வெள்ளிக்கிழமை பரவலாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் சின்னத்தம்பி அருளானந்தம் (வயது 48) என்பவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. இரணைப்பாலைக் குண்டு வீச்சில் ஆசிரியரும் பெண் ஒருவரும் பலி!

வவுனியா, ஓக. 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரணைப்பாலையில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று காலை 9.50 மணியளவில் விமானப்படையினரின் விமானங்கள் கடும் தாக்குதலை நடத்தின.

இத் தாக்குதலில் ஆசிரியர் உட்பட இருவர் கொல்லப்பட்டனர்; மூவர் காயமடைந்தனர்.

ஆசிரியரான சு.தயாபரன் (வயது 45), க.பசுங்கிளி (வயது 35) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

இருவரும் படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்கள்.

தாக்குதலில் காயமடைந்த மேலும் மூவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

**புலமைப்பரிசில் பரீட்சை**
**விசேட மாதிரி வினாத்தாள்**

*கண்டி மாவட்டத்தின்*
*பிரபல ஆசிரியர்*
**திரு.சண்.சுதர்சன்**
*தயாரித்தது*

**உள்ளே** I + II ஆம் பக்கங்களில்

## மடுமாதா அன்னையின் திருச்சொரூபம் நேற்றுத் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது

மன்னார், ஓக.10



மன்னார், மடுமாதா வின் திருச்சொரூபம் நேற்று மாலை 4.30 மணியளவில் மீண்டும் மடுத்திருத்தலத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நாளை திங்கட்கிழமை திருத்தலத்தில் இடம்பெறவிருக்கும் புனிதப்படுத்தும் சடங்கு பூர்த்தியடைந்த பின்னர் விசேட பூசைகளும் வழிபாடுகளும் இடம்பெறும்.

மடுத்தேவாலயப்பகுதியில் நிலவிய போர் சூழலை அடுத்து பாதுகாப்புக் கருதி அங்கிருந்து எடுத்துச்செல்லப் பட்ட திருச்சொரூபம் தேவன்பிட்டி தேவாலயத்தில் வைக்கப் பட்டிருந்தது. அங்கும் போர் சூழல் ஏற்பட்டதை அடுத்து மன்னார் ஆயர் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு (16 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் நலனுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு எவ்வித சவாலையும் எதிர்கொள்ளத் தயார்

### வடக்கு மாகாண ஆளுநர் விக்ரர் பெரேரா

திருகோணமலை, ஓக. 10

அர்ப்பணிப்புடன் செயற்பட்டு எந்தவித சவாலையும் எதிர் கொண்டு, வடக்கு மாகாண மக்களின் நலனுக்காக - அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த - பாடுபடுவேன்.

வடக்கு மாகாண ஆளுநராக பதவியேற்றுள்ள விக்ரர் பெரேரா தெரிவித்தார்.

திருகோணமலை வரோதய நகரில் உள்ள மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பதவியேற்பு நிகழ்வில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சபையின் உயர் அதிகாரிகளும் அலுவலர்களும் கலந்து கொண்ட இந் நிகழ்வில், வடக்கு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிக்கப் வாகனம் விற்பனைக்குண்டு

## மிற்சுபிசி ஸ்ராடா

யப்பான் தயாரிப்பு

அதி நவீன வடிவமைப்புக் கொண்ட பிக்கப் வாகனம் விற்பனைக்குண்டு.

விளம்பர இல.: 3125,

(சி-554105) மே/பா, உதயன்.

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

### பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார். மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவரமுடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே தொலைபேசியில் (0777-569205, 0652224019) தொடர்பு கொண்டால் அவர்களுகேற்றவாறு மருந்துகளை கொண்டுவருவார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபோகுதல், குழந்தைப்பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம்,நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்கமுடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**Sexual Disorders(ஆண்மைச் சக்தி குறைவு)**

(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எவ்வித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ பாலாஜி இன்

293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Contact No.: 0777 569205





## மரண அறிவித்தல்

### செல்லத்துரை இராஜேஸ்வரி

தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாவும் கொண்டசெல்லத்துரை இராஜேஸ்வரி நேற்று(09.08.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் செல்லத்துரையின் (முன்னாள் நடத்துநர், இ.போ.ச.) அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி வல்லிபுரம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருகளும் உருத்திரபூபதி, பாஸ்கரன்(ஜேர்மனி), மனோகரன்(பிரான்ஸ்), மகேந்திரன்(லண்டன்), சக்கரவர்த்தி (கனடா), சகாதேவன்(ஜப்பான்) ஆகியோரின் அன்புத் தாயும் குணசீலன்(டோகா, முன்னாள் இ.போ.ச. ஊழியர்,பருத்தித்துறை சாலை), சங்கரி, இந்திரவதனா, றஜனி, தர்சினி, காலஞ்சென்ற மாக்கி(ஜப்பான்) ஆகியோரின் அன்பு மாமியும் சாந்தன்(அமெரிக்கா), நிருந்தன்(டோகா), அசோக், வனிதா, லக்ஷன், லனுஜன், விற்சா, விபிஷா, தாரிணி, ஆர்த்திகா, குறுமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருமதி யோகேஸ்வரி(முன்னாள் காப்புறுதி கூட்டுத்தாபன அதிகாரி), அமரர் சிவப்பிரகாசம், திருமதி புவனேஸ்வரி(உபதபாலதிபர், சங்கத்தானை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருச்செல்வம்(முன்னாள் கிராம சேவையாளர்), கோவிந்தபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் தயாளவதனி, யாழேந்திரன், அபர்ணா, அர்ச்சுனன்ஆகியோரின் அன்புப் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
உருத்திரபூபதி,
குணசீலன்.


## விற்பனைக்கு

அமெரிக்கன் அம்பிளிபயர், ஸ்பீக்கர் Box, மெட்டல் மியூசிக் Horn, சோபா, கட்டில், சாப்பாட்டு மேசை, கதிரைகள், செஸ்ர றோயர் (அலுமாரி), புதிய முதிரைக் கதவுகள், காஸ் குக்கர், இரும்புக் கேற், கொங் கிறீற் டிசைன் தூண்கள், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.

இல.9, றக்கா றோட், யாழ்ப்பாணம்.
(மில்லுக்கு முன்பாக, ICRC இற்கு அடுத்த வீடு)

## மணமகன் தேவை

1977 ஆம் ஆண்டு, றோகினி 3ஆம் பாதமுடைய, 5அடி 11 அங்குல உயரமுடைய, லக்கினத்தில் செவ்வாய், 21 பாவமுடைய அரச வேலையிலுள்ள, இந்து கௌரவ குடும்ப மணமகளுக்கு மணமகன் தேவை. வேலை பார்ப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: இனிதா திருமண சேவை,
இலங்கை வங்கி முன்பாக, சுன்னாகம்.
குறிப்பு: எம்மிடம் வேறு குறிப்புகளும் உண்டு.

## விற்பனைக்கு

Sun TV நாடகங்கள், பழைய படங்கள் DVD, இடைக்காலப்படங்கள் VCD, இடைக்கால ACD, VCD பாடல்கள், பழைய, புதிய, இடைக்கால நகைச்சுவை VCDக்கள்

டோறா மல்ரிக்கொம்ளெக்ஸ்,
பிரதான வீதி, நெல்லியடி. T.P. 021 226 3432


## தவறிவிட்டது

மாணிக்கம் மதிதாசன்,வரகுசாட்டி ஒழுங்கை, நவாலி வடக்கு, மானிப்பாய் என்னும் பெயரும், விலாசமும் உடைய தேசிய அடையாள அட்டை (651542553V) மானிப்பாய், ஆலடிசந்திக்கும் வரகுசாட்டி ஒழுங்கைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையில் உள்ள விலாசத்திற்கு அல்லது 021 222 7511 என்னும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## வேலை ஆள்கள் தேவை

1) எழுதுவினைஞர் (ஆங்கில அறிவுடைய ஓய்வூதியர்கள்)

2) கணனி ரைப்செற்றிங் (TYPE SETTING) செய்வதில் தேர்ச்சியுடையவர் உடன் விண்ணப்பிக்கவும்.

விள. இல.: 3126
மே/பா உதயன்.








## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா சின்னன்

கைதடி தெற்கைச் சேர்ந்த திருமதி கந்தையா சின்னன் நேற்று(09.08.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பன் - சின்னப்பெட்டை தம்பதியரின் மகளும் சர்வசக்திவடிவேலுவின் (மானார்) தாயும் தவத்தின் மாமியும் கஜனி, சுகந்தன், சுதர்சன், சுகந்தினி, சிவச்செல்வன்(சவூதி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கைதடி தெற்கு, சர்வசக்திவடிவேலு,
கைதடி. (A)

## மரண அறிவித்தல்கள்

### கதிரேசு மயில்வாகனனார்

(ஓய்வுபெற்ற அதிபர், கலாபூஷணம், நாற்கவிராசன், புலவர் மணி, பண்டிதர்)



சிந்துபுரம், வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரேசு -வள்ளியம்மை தம்பதியரின் மகனும் அமரர் முருகுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகளான பத்மாசனியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு, மாணிக்கவாசகர், முருகுப்பிள்ளை, கனகம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நல்லம்மா, தெய்வானைப்பிள்ளை மற்றும் இராசாத்தியம்மா, அமரர் வல்லிபுரம், நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் இந்திரா, சாரதாதேவி(திரு), தயானந்தன்(பாபுஜி), சிவானந்தன் (சிவா), திருக்கேதீஸ்வரி(உமா), முருகானந்தன்(ரவி), மகேசானந்தன் (சந்திரன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகானந்தசிவம், தங்கவடிவேல், ஜெயலக்சுமி, ராகினி, கணேஸ்வரன், ஜெயரஞ்சினி, சந்திரகலா ஆகியோரின் மாமனும் சேந்தன், சுலோசினி, குமரன், விசாகன், சிவகௌரி, சங்கர், கஜானந்தன், தீபா, கதிரேசன், கோபிரமணா, நித்தியா, நிஷாந்தன், தமிழினி, ராம்கிருஷ்ணா, பாக்கியா, தாட்சாயினி, விதுசன், மயூரேசன், பவித்திரன், ஜெயகரன், கோபிநாத், அரவிந்தன் ஆகியோரின் பேரனும் கர்சனா, கர்சினி, சிவானுசன், சிவதர்சி, மயூரி, கோபிகன், கிருஸ்ணிகா ஆகியோரின் பூட்டனுமான-

**ஓய்வுபெற்ற அதிபரும் கலாபூஷணம், நாற்கவிராசன், புலவர்மணி, பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார்**

அவர்கள் நேற்று (09.08.2008)சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிய ளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.08.2008 திங்கட்கிழமை முற்பகல்11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ம.தயானந்தன்
(மகன்- பாபுஜி- கிராம உத்தியோகத்தர்,
பிரான்பற்று, சில்லாலை தெற்கு).

(A)

### மாசிலாமணி பாலசுந்தரம்

(ஓய்வுபெற்ற அதிபர்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி பாலசுந்தரம் நேற்றுமுன்தினம் (08.08.2008) வெள்ளிக்கிழமை அதிகாலை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் வாலாம்பிகையின் அன்புக் கணவரும் றமணன் (ராஜா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற வாணி மற்றும் வத்ஸா (ஜேர்மனி), சிறிகரன் (ஜேர்மனி), வசிகரன் (மலேசியா), உமா (லண்டன்), ராதா, ஜெயகரன் (உதவிச் செயலர், பொதுநிர்வாக அமைச்சு, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பராணி, சிவசுப்பிரமணியம், (ஜேர்மனி), கிருபாகரன் (லண்டன்), பாலமுருகன் (வராகி வைத்தியசாலை, திருநெல்வேலி), கலைவதனி ஆகியோரின் மாமனும் லக்ஷன், சியானி, லக்ஷிகா, ரஜீவன், ரமீனா,தாரகா, மதுஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.08.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

லோட்டன் வீதி,
மானிப்பாய் தெற்கு. (77051)

தகவல்: -
மனைவி,
பிள்ளைகள்.

### பேரம்பலம் பாலசுப்பிரமணியம்

(கோமதி பாலன்)



காரைநகர், மல்லிகையைப் பிறப்பிடமாகவும் விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் பாலசுப்பிரமணியம் நேற்று (09.08.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் வசந்தகுமாரி, வசந்தகுமாரன்(நெதர்லாந்து), மங்கையர்க்கரசி, கோமதி(ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி, ஜேர்மனி), சுமதி(ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி, மாணவி, M. ED 2007/2008, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா(கமலேஸ்வரி ரெக்ஸ், கொழும்பு), சுமதி (நெதர்லாந்து), கருணாகரன், உதயணன்(ஜேர்மனி), ஸ்ரீசுந்தர ராஜா(மருந்தாளர்) ஆகியோ ரின் மாமனும் காலஞ்சென் றவர்களான நடராசா, கனகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோ தரரும் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற A/O ஊர்காவற்றுறை), திருவா திரை(ஓய்வுபெற்ற தபாலதிபர், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற வள்ளியம்மை ஆகியோரின் மைத்துனரும் துளசி (மாணவி, 3 ஆம் வருடம் விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்), ரவி ராஜா(கொழும்பு), கிஸ்ணராஜா (மாணவன், கொழும்பு பம்பலப் பிட்டி இந்துக் கல்லூரி), பிரியங்கா, யசிக்கா, சுஜிந்தன் (நெதர்லாந்து), பிரணவன் (மாணவன், யா/கொக்குவில் இந்துக் கல் லூரி), சுபாநந்தி(மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி), சிறிகணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.08.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளானை,
காரைநகர். (77088)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க நீச்சல் வீராங்கனை ஒலிம்பிக்கில் இருந்து நீக்கம்

ஊக்க மருந்து சோதனையில் சிக்கிய அமெரிக்க உலக சாதனை நீச்சல் வீராங்கனை பீஜிங் ஒலிம்பிக்கில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சீனத்தலைநகர் பீஜிங்கில் நடைபெறும் ஒலிம்பிக்கின் பதக்க பட்டியலில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் அமெரிக்க அணிக்கு சற்று பின்னடைவாக உலக சாதனை நீச்சல் வீராங்கனை போட்டியில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவரது பெயர் ஜெசிகா ஹார்டி. 21 வயதான ஜெசிகா, பீஜிங் ஒலிம்பிக்கில் 100 மீற்றர் பிரஸ்டி ரோக் மற்றும் 50 மீற்றர் பட்டர்பிளை ஆகிய நீச்சல் பிரிவுகளில் பங்கேற்கத் தகுதி பெற்றிருந்தார்.




ஜெசிகாவுக்கு கடந்த மாதம் ஊக்க மருந்து சோதனை நடந்தது. இந்த சோதனை முடிவுகள் தற்போது வெளியாகி உள்ளன. இதில் அவர் தடை செய்யப்பட்ட கிளென்புடெரோ என்ற ஊக்கமருந்தைப் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. இந்த முடிவை அவரும் ஏற்றுக் கொண்டுவிட்டார்.

இதைத் தொடர்ந்து அமெரிக்க ஒலிம்பிக் அணியில் இருந்து ஜெசிகா நீக்கப்பட்டுள்ளார். ஊக்கமருந்து சோதனையில் சிக்கி இருப்பதால் அவருக்கு 2 ஆண்டுகள் விளையாடத் தடைவிதிக்கப்படும்.

இதன் மூலம் ஒலிம்பிக்கில் பங்கேற்க வேண்டும் என்ற அவரது கனவு தகர்ந்து போய்விட்டது. இருப்பினும் 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியின் மூலம் அவரது கனவு நிறைவேறும் என்று அமெரிக்க நீச்சல் பிரிவின் நிர்வாக இயக்குனர் சக்வெயில் ஹஸ் கூறினார். ஜெசிகா 100 பிரஷ்டிரோக்கில் உலக சாதனை படைத்தவர். மேலும் 50 மீற்றர் பிரீஸ்டைலில் உலக சாதனை தற்போது அவரது வசம் இருப்பது குறிப்பிடத்தக்கது. 50)



பீஜிங் ஒலிம்பிக்கில் முதலாவது தங்கத்தை வென்ற செக்குடியரசின் இமோன்ஸ் கத்தலினா வெற்றிப் பெருமிதத்துடன்......



# சீனாவில் ஒலிம்பிக் குழாமில் வயது குறைவானவர்களுக்கு வாய்ப்பு?

கனிஷ்ட விளையாட்டுப் போட்டிகளில் வயதைக் குறைத்துக்காட்டி சிரேஷ்ட வீரர்கள் கலந்து கொள்வதாகச் சர்ச்சை எழுவது வாடிக்கை. பீஜிங் ஒலிம்பிக் போட்டியிலும் இதுபோன்ற சர்ச்சை எழுந்துள்ளது. சீன குழாமில், நிர்ணயிக்கப்பட்ட வயது பூர்த்தி அடையாத வீரர், வீராங்கனைகளுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதால் பிரச்சினை ஏற்பட்டுள்ளதுதான் வேடிக்கை.

ஒலிம்பிக் விதிமுறைகளின்படி போட்டியில் கலந்துகொள்ள 16 வயது நிரம்பியிருக்க வேண்டும். ஆனால், சீன ஜிம்னாஸ்டிக் அணியில் இடம்பெற்றுள்ள இரண்டு வீராங்கனைகளுக்கு 14 வயதுதான் ஆகிறதாம். தேசிய சாம்பியன்களுக்கே அதிர்ச்சியளித்த இந்த சிறுமிகளின் அபார திறமையால் அசந்து போன ஒலிம்பிக் தேர்வுக்குழு. சீன குழாமில் அவர்களுக்கு இடம் கொடுத்து விட்டது.

இது குறித்து சீனப் பத்திரிகைகளும் இணையத்தளங்களும் பெரியளவில் செய்தி வெளியிட்டது தப்பாகியுள்ளது. பதக்க வேட்டையில் சீனாவுடன் போட்டி போடும் அமெரிக்க அணி நிர்வாகிகள், சம்பந்தப்பட்ட வீராங்கனைகள் ஒலிம்பிக்கில் கலந்துகொள்ள கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். வயது குறைவா? அதிகமா?



என்பது பிரச்சினையல்ல. விதிமுறை மீறப்பட்டிருக்கிறது என்பதை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது அமெரிக்காவின் வாதம்.

ஜிம்னாஸ்டிக் மட்டுமல்லாது வேறு சில விளையாட்டுக்களிலும் குறைவான வயது வீரர், வீராங்கனைகளை சீனா களமிறக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. கரணம் தப்பினால் மரணம் என்ற அபாயத்தையும் பொருட்படுத்தாமல், அந்தரத்தில் பறந்து ஜிம்னாஸ்டிக் சாகசம் நடத்தும் அந்த சிறுமிகள் தங்களுக்கு ஒலிம்பிக் வாய்ப்பு கிடைக்குமா? கிடைக்காதா? என்ற கேள்வியால் குழம்பிப் போயுள்ளதுதான் பரிதாபம். (50)

# ஒலிம்பிக் டென்னிஸ் ஷரபோவா விலகல்



பீஜிங்கில் நடைபெறும் ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிகளில் இருந்து, ரஷ்யாவின் மரியா ஷரபோவா விலகியுள்ளார். உலகத் தர வரிசையில் மூன்றாவது இடத்திலுள்ள இவர், காயம் காரணமாக ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மான்ட்ரீலில் புதன்கிழமை நடந்த டென்னிஸ் போட்டியின்போது, ஷரபோவாவின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, அப்போட்டிகளில் இருந்து விலகித் தீவிர சிகிச்சையை எடுத்துக் கொண்டார் மரியா.

அவருக்கு எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுக்கப்பட்ட நிலையில், அடுத்த சில மாதங்களுக்கு தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டும் என்றும், ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியதும் அவசியம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினர். இதைத் தொடர்ந்து, ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியாத நிலையை அறிவித்த ஷரபோவா, தனக்குத் தற்போது ஏற்பட்டுள்ள நிலை மிகவும் துரதிஷ்டமானது என்று கூறினார். (50)

# ஒலிம்பிக்கில் சானியாவுக்கு கடுமையான போராட்டம்



பீஜிங் ஒலிம்பிக் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா தங்கம் வெல்ல கடுமையாகப் போராட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். அட்டவணைப்படி சானியா, பெண்கள் ஒற்றையர் முதல் போட்டியில் செக் குடியரசின் இவேடா பெனிசோவாவை சந்திக்கிறார்.

இதில் வெற்றிபெறும் பட்சத்தில் இரண்டாவது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். இரட்டையரில் இந்தியாவின் சானியா, சுனிதா ஜோடி, பிரான்ஸின் கோலோவின், பர்மென்சியர் ஜோடியைச் சந்திக்கிறது. ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி முதல் போட்டியில் பிரான்ஸின் மோன்பில்ஸ், சைமன் ஜோடியைச் சந்திக்கிறது. (50)

**ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்**
(நேற்றுப் பிற்பகல் வரையான போட்டிகள்)

| | |
|---|---|
| **துப்பாக்கி சுடுதல் (பெண்)** | |
| தங்கம் | - செக்குடியரசு |
| வெள்ளி | - ரஷ்யா |
| வெண்கலம் | - குரோசியா |
| **துப்பாக் சுடுதல் (ஆண்)** | |
| தங்கம் | - சீனா |
| வெள்ளி | - தென்கொரியா |
| வெண்கலம் | - வடகொரியா |
| **பளு தூக்குதல் (பெண்)** | |
| தங்கம் | - சீனா |
| வெள்ளி | - துருக்கி |
| வெண்கலம் | - தைய்வான் |

# தினம் தேநீர் குடித்தால் மூளைத் திறன் அதிகரிக்கும்



தேநீர் குடிப்பது உடல் நலத்திற்கு தீங்கு என்று சர்ச்சை நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. சிங்கப்பூரை சேர்ந்த டாக்டர்கள் இது தொடர்பாக ஓர் ஆராய்ச்சி மேற்கொண்டனர். இந்த ஆராய்ச்சியின் முடிவில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது:-

தேநீர் குடிப்பதால் தீங்கு ஏதும் இல்லை. தேநீர் குடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் அதை நிறுத்தத் தேவை இல்லை. தினம் 2 கோப்பை தேநீர் குடிப்பவர்களுக்கு டிமென்ஷியா என்ற நோய் வருவதைத் தடுக்கும் ஞாபக சக்திக் குறைபாடு ஏற்படுவதையும் இது தடுக்கும். தேநீர் குடிப்பதால் மூளையின் திறன் அதிகரிக்கும். மூளை செல்கள் சுறு சுறுப்பு அடையும். இவ்வாறு அந்த ஆய்வு முடிவில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2500 பேரிடம் டாக்டர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

# சூரிய மண்டலத்துக்கு வெளியே மேலும் ஒரு புதிய கோள்



சூரியமண்டலத்துக்குவெளியே மேலும் ஒரு புதிய கோளை ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வியாழனைப் போன்ற அளவு கொண்ட இந்தப் புதிய கோள். சூரியனைவிட சற்றுப் பெரிய நட்சத்திரக் குடும்பத்தைச் சேர்ந்தது.

இந்தக் கோள் கடந்த ஜூலை 3 ஆம் திகதி கண்டுபிடிக்கப் பட்டது.

இந்தப் புதிய கோள் 9.2 நாள்களில் தனது நட்சத்திரத்தைச் சுற்றிவிடுகிறது.

சுற்று வேகமும் அதன் எடையும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இந்தக் கோளுக்குரிய நட்சத்திரமும் இந்தக் கோளும் கிட்டத்தட்ட ஒரே வேகத்தில் சுற்றுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதிய கோள்களின் கண்டுபிடிப்பு பூமியைத் தவிர மற்றொரு கிரகத்தில் உயிரினம் வசிக்கலாம் என்ற எதிர்பார்ப்பை அதிகப்படுத்தி உள்ளது.

சூரிய மண்டலத்துக்கு வெளியே உள்ள கோள்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக, கோரட் என்ற செயற்கைக் கோளை ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கடந்த 2006 ஆம் ஆண்டு செலுத்தினர்.

இந்தச் செயற்கைக் கோள் 555 நாள்கள் விண்வெளியில் பயணம் செய்து இதுவரை 50 ஆயிரம் நட்சத்திரங்களை ஆய்வு செய்து வந்துள்ளது.

இதுவரை 307 புதிய கோள்கள் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

# அதிக மன அழுத்தம் ஆண்களில் நீரிழிவு நோயை ஊக்குவிக்கிறது

மன அமைதியின்மை, மன அழுத்தம் மற்றும் நித்திரையின்மை ஆண்களில் குறிப்பிடத்தக்க அளவுக்கு நீரிழிவு வகை 2 (Type 2 diabetes) நோய் ஏற்படுவதை ஊக்குவிப்பதாக ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

மன அழுத்தம், மன அமைதியின்மை மற்றும் மனச்சிக்கல் உள்ள ஆண்களிடத்தில் பிற ஆண்களைவிட 2.2 மடங்கு அதிகமாக இந்த நோய் தாக்கி இருப்பது ஆய்வுகளினூடு தெரியவந்துள்ளது. இதற்கு ஓமோன்களின் சமநிலைக் குழப்பமும் நடத்தை மாற்றங்களும் அதிகம் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இவை மட்டுமன்றி வயது, உடற் திணிவுச் சுட்டி, பாரம்பரியம், புகைப்பிடித்தல், உடற்பயிற்சியின்மை மற்றும் சமூக பொருளாதார நிலை என்பனவும் நீரிழிவு நோய் ஏற்படுவதில் செல்வாக்குச் செய்கின்றன என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பெண்களில் மன அழுத்தம், மன அமைதியின்மை,



மனச் சிக்கல் இந்த விளைவைக் காண்பிப்பதாக இன்னும் ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. என்றாலும் பிற காரணிகள் பெண்களிலும் நீரிழிநோய் ஏற்படுவதில் துணை போகின்றன என்பது ஏலவே அறியப்பட்டுள்ளது.

இதற்கிடையே மனிதர்களில் மன அழுத்தம், மனச்சிக்கல் மற்றும் மன அமைதியின்மை போன்றன இதய நோய்களை அதிகரிக்கின்றன என்பது உறுதியாகி உள்ள நிலையில் தற்போது அவை மூளை, மனித உடலில் சுரக்கப்படும் ஓமோன்களின் செயற்பாட்டில் செய்யும் செல்வாக்கைப் பாதிக்கச் செய்கின்றமை அல்லது உணவுப்பழக்கம் மற்றும் பௌதீக உடற்தொழிற்பாட்டிலும் (உடற்பயிற்சி போன்றவை) பாதிப்பை உண்டுபண்ணக் கூடியதாக அமைந்திருக்கின்றமை ஆண்களில் இந்த நிலைக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையும் அது தாக்கும் வயதெல்லையும் அதிகரித்து வருகின்றமை மருத்துவ உலகில் [illegible] விட [illegible] இருக்கின்றது.

# சனிக்கிரகத்தின் நிலாவில் நீர்



சனிக்கிரகத்தின் நிலாவில் நீர் நிரம்பிய குளம் இருப்பதை நாசா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். விண்வெளியில் பூமிக்கு அடுத்த படியாக வேறு ஒரு கிரகத்தின் தரைப்பரப்பில் நீர் இருப்பது தற்போதுதான் முதல் முறையாக கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்கா - ஐரோப்பா இணைந்து கடந்த 2004 இல் சனிக்கிரத்தை சுற்றி வந்து ஆய்வு செய்வதற்காக ''காசினி'' என்ற விண்வெளி ஆய்வுக் கலத்தை அனுப்பியது.

இந்த விண்கலம் இதுவரை 3, 500 கோடி கிலோ மீற்றர் தொலைவு பயணம் செய்து புகைப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளது. அதில் சனிக்கிரகத்தின் நிலாவான டைட்டனில் நீர் நிரம்பிய குளம் இருப்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா வெளியிட்டுள்ள செய்தியில் ''டைட்டனில் திரவப் பொருள் நிரம்பிய பெரியகுளம் உள்ளது. எனினும் புகைப்படங்களை வைத்து அங்கு இருப்பது நீர் தான் என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. நீர் போல இருக்கும் வேறு திடப்பொருளாகவும் இருக்கலாம். தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஆய்வில் முழு விபரமும் தெரியவரும் என்று கூறியுள்ளது. டைட்டனின் தென் துருவப்பகுதியில் புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. சுமார் 7, 800 சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவில் இந்தக் குளம் அமைந்துள்ளது.

# புகையிலையிலிருந்து புற்றுநோய்க்கு நிவாரணி



புற்றுநோய்க்குகக் காரணமாக இருக்கின்ற புகையிலையில் இருந்து கூட குறிப்பிட்ட வகை புற்று நோய் ஒன்றுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் நடத்தியுள்ள ஆய்வில் இருந்துகண்டறிந்துள்ளனர்.

புகையிலையில் கண்டறியப்பட்டுள்ள குறிப்பிட்ட ஒரு வகை இரசாயனத்தைக் கொண்டு குருதிப் புற்றுநோய் வடிவம் ஒன்றுக்கு (follicular B- cell lymphoma) (இது Non - Hodgkin lymphoma வகைகளில் ஒன்று) எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் தோற்றுவிக்க முடியும் என்று விஞ்ஞானி கள் இனங் கண்டுள்ளனர். எனினும் இந்த ஆய்வு இப்போது ஆரம்பப் படிநிலை யிலேயே இருக்கின்றது. மேலும் பல நிலை ஆய்வுகள் இது தொடர்பில் தொடரப்பட வேண்டி இருக்கின்றது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே ஆண்களை அதிகம் தாக்கும் புரஸ்ரேட் புற்றுநோய்க்கு (Prostate cancer) எதிராக Abiraterone எனும் மருந்தைப் பாவனைக்கு அனுமதிப்பது குறித்து இறுதிக் கட்ட சோதனைகள் நடைபெற்று வருகின்றன. இந்த மருந்து குறிப்பிட்ட புற்றுநோயை உருவாக்கத் தூண்டும் ஓமோனை நிரோதித்து புற்றுநோய்த் தாக்கத்தைத் தடுக்க உதவுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த மருந்து இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில் மாத்திரை வடிவில் மருத்துவ சந்தையில் கிடைக்க இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணையில் நாய்களுக்குச் சத்திரசிகிச்சை

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு கர்ப்பத் தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

வேலணை பிரதேசசபை செயலாளர் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வேலணை கால்நடை வைத்தியஅதிகாரி பணிமனையிலும்- எதிர் வரும் 20 ஆம் திகதி புங்குடுதீவு உப-அலுவலகத்திலும் மேற்கொள்ளப் படும்.சத்திரசிகிச்சையினை மேற்கொள்ள விரும்புவோர் முன் கூட்டியே உப-அலுவலக பணிமனைகளில் பதிவுகளை மேற்கொள் ளுமாறு கால்நடை வைத்தியர் டாக்டர்.ரி. பிரபாகரன் அறிவித்துள்ளார்


## சர்வதேச இந்துமத குருபீடாதிபதி அதிவந்தனீய, பிரம்மஸ்ரீ. ஐ. மகேஸ்வரக் குருக்களின் அருளாசியுடன்

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும் கருத்தரங்கமும், சமஸ்கிருத இறுவட்டு அறிமுகமும்

காலம்:- இன்று (10.08.2008) ஞாயிறு பிற்பகல் 1.30 மணி
இடம்:- தலைமைக் காரியாலயம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தலைவர்:- பிரம்மஸ்ரீ. ப. கோபாலகிருஷ்ண ஐயர் (வாழ்நாள் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்)
வாழ்த்துரை:- பிரம்மஸ்ரீ.தா.மகாதேவக் குருக்கள் (இணுவில்)
கருத்துரை:- பிரம்மஸ்ரீ.ப.சிவானந்தசர்மா *(கோப்பாய் சிவம்)* இணுவில்
விடயம்:- யாகமண்டப பூஜை.

தொடர்ந்து அமரர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளின் 10 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு பிரம்மஸ்ரீ.சு.நவநீதகிருஸ்ணனின் உருவாக்கத்தில் ''ஸ்வபோத நவநீதம்'' இறுவட்டு முதலாம் பாகம் அறிமுக நிகழ்வு இடம்பெறும்.

அறிமுக உரை:- பிரம்மஸ்ரீ. சு. நவநீதகிருஸ்ணன்
நயப்புரை:- பிரம்மஸ்ரீ. ஸ்ரீபதி. கிருஸ்ணானந்த சர்மா-நல்லூர்.
முதற்பிரதி பெறுநர்:- பிரம்மஸ்ரீ. கு. வைத்தீஸ்வரக் குருக்கள்-நல்லூர்
சிறப்புப் பிரதி பெறுநர்:- இலக்கியக் கலாநிதி வி. சிவசாமி (ஓய்வு பெற்ற பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

* 2006, 2007 ஆம் வருடங்களில் சிவாச்சாரிய அபிஷேகம் செய்த அந்தண குருமார்கள் தங்கள் பெயர் விவரங்களை குருகுல காரியாலயத்தில் பதிவு செய்யவும்.
* 2008 மார்கழியில் நடைபெறவிருக்கும் வேத, ஆகம பரீட்சைக்குரிய பாடவிதானங்கள் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை எடுக்க விரும்பும் அந்தண மாணவர்கள், சிவாச்சாரியார்கள் தங்கள் பெயர் விவரங்களை குருகுலத்தில் பதிவு செய்யவும்

இந்த நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைத்து அந்தண குருமார்கள், கல்வியியலாளர்கள், மாணவர், பெற்றோர், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.**



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 . 07 . 1964



உதிர்வு 23 . 07 . 2007

### அமரர் அருளம்பலம் அருளானந்தம்

*(உரிமையாளர்- முருகன்.பேக்கரி, வட்டுக்கோட்டை)*

திதி: நவமி

பாரினிலே எம்மை பரிதவிக்க விட்டுவிட்டு
பாதி வயதினிலே பறந்து சென்றீரே
ஓராண்டு ஓடி மறைந்தாலும் உயிர் உள்ள மட்டும்
உங்கள் எண்ணம் எங்கள் இதயங்களில்.... இருக்கும்

உங்கள் ஆத்மா சாந்திபெற நாம் யாவரும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துணைவி, வட்டுக்கோட்டை. (77067)
பிரிவால் துயருறும்: **குடும்பத்தினர்.**



## 16 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்: 19.07.1982
ஆண்டவன் அடியில்: 06.08.1992

### செல்வி சர்விழி (கிளி) தம்பிராசா

திதி: நவமி 10.08.2008

பதினாறு ஆண்டு போனாலும் உந்தன்
அன்பு முகம் எம்மைவிட்டுப் பிரியவில்லை கிளியே!
தேடிவந்து பார்ப்பதற்கு சென்ற இடம் தெரியலையே!
பார்த்து பார்த்து காத்திருந்தோம்
பார்வை கூட மங்கிறதே எந்தனுக்கு
மீண்டும் காட்சி தந்து பிறந்திடுவாய்
என நிதம் ஏங்கித் தவிக்கின்றோம்.

என்றும் உன் நினைவுகளோடு
*கோட்டைக்காடு, மல்லாகம்.* (77072) *அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், அத்தான்மார்.*


## அரச கருமமொழி தேர்ச்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக10

அரசாங்க அலுவலர்களின் அரச கரும மொழித் தேர்ச்சிப்பரீட்சை எதிர்வரும் செப்ரம்பர் 17 ஆம் திகதி நடத்தப் படவுள்ளது.

அரசகரும மொழிகள் திணைக்களத் தினால் இப் பரீட்சைக்கான விண்ணப் பங்கள் அரச சேவை, மாகாணஅரச சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் ஆரம்பத் தேர்ச்சி, இரண்டாம் நிலைத் தேர்ச்சி, விசேட தேர்ச்சி ஆகியவற்றுக்கும் ஆங்கில மொழியில் அடிப்படை அல்லது உயர் இறுதிப்பரீடசைக்கும் விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை நிறுவனத் தலை வரின் சிபார்சுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அரசகரும மொழிகள் ஆணையாளர், அரசகரும மொழிகள் திணைக்களம், 341/7, கோட்டே வீதி, இராஜகிரிய என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202-207)


## கண்ணீர் அஞ்சலி



கனடாவில் காலமான
**யோசவ் எட்மன் செபஸ்ரியாம்பிள்ளை**
ஈச்சமோட்டை
முன்னாள் கிராம சேவகர்
அவர்களின் மறைவையொட்டி
துயரத்தில் ஆழ்ந்திருக்கும்
குடும்பத்தினருக்கு எங்களுடைய
ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக் கொள்கிறோம்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
கடவுளை பிரார்த்திக்கின்றோம்.

கிராம சேவகர் J/66- திரு. மா. சுந்தரலிங்கம்,
திரு.த.சோமசுந்தரம் (ஈச்சமோட்டை),
திரு. ந. தருமலிங்கம்(ஈச்சமோட்டை),
திரு. சி. சிவராஜேஸ்வரன் (ஈச்சமோட்டை).

*(77076)*



## தவறிவிட்டது

நல்லூர் கொடியேற்றத்தின் (6.8.2008) போது ஏழுபவுண் நிறையுடைய தாலிக்கொடி சனநெரி சலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**M. செல்லத்துரை**
*102, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.* (சி/554096)



## மணமகள் தேவை

1978 இல் பிறந்த சுவாதி நட்சத்திரம் 1 ஆம் பாதம் கொம்பியூட்டர் டிப்ளோமா கற்றுவிட்டு கொழும்பில் சொந்தமாக எலக்றோனிக் விற்பனை நிலையம் நடத் தும் எவ்வித தீய பழக்கங்களுமற்ற மணமகனுக்கு அழ கிய நல்லொழுக்கமும், நற் பண்புகளும் நிறைந்த மண மகளைப் பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் முக்கியமல்ல.

*விளம்பர இல 3124,*
*மே/பா உதயன், யாழ்ப்பாணம்*(77068)


### 'சிப்தொற' புலமைப் பரிசிலுக்கு மாணவர் தெரிவுத் தேர்வு

யாழ்ப்பாணம்,ஓக10

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து சமுர்த்தி 'சிப்தொற' புலமைப்பரிசில் உதவு தொகைக்கு விண்ணப்பித்த ஜி.சீ.ஈ.உயர்தரவகுப் புகளில்கற்கும் மாண வர்களுக்கான நேர் முகத் தேர்வு நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை முற் பகல்10 மணிக்கு பிரதேச செயலத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த மாணவர்கள் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்,தேசியஅடை யாளஅட்டை,சமுர்த்தி முத்திரை, குடும்பப் பங்கீட்டு அட்டை, ஜி.சீ.ஈ சாதாரண பரீட்சை பெறுபேற றின் மூலப்பிரதி, சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரின் நற்சான் றிதழ் ஆகியவற்றுடன் சமூகமளிக்குமாறு பிரதேச செயலர் செ ந்திவாசன் கேட்டுள் ளார். (202-207)


## நெஞ்சகலா நினைவலைகள்

| 2 ஆம் ஆண்டு | 70 ஆம் நாள் |
| --- | --- |
|  |  |
| அமரர் யோசப் பற்றிக் (ராசா) | அமரர் பற்றிக் டிவின்சன் (மில்ரன்) |
| மண்மகிழ : 21.03.1946 | மண்மகிழ : 26.08.1976 |
| கண்நெகிழ: 10.08.2006 | கண்நெகிழ: 02.06.2008 |

**அன்புத் தெய்வங்களே!**
**உண்மையான உங்கள் மறைவு**
**பொய்யாகிப் போகாதோ!!! என எம் மனம் தவிக்கின்றதே!**
**விழிகள் கரைகின்றன வேதனை முடியுதே இல்லை**
**ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்தியது போல்**
**எம் இதயங்கள் வலிக்கின்றனவே**
**தேடித்தான் வந்திடுவோம் வழி எமக்குத் தெரியவில்லை**
**நூலறுந்த பட்டமாய் அந்தரத்தில் தவிக்கின்றோம்**

(77074)

*குறிப்பு: நாளை (11.08.2008) திங்கட்கிழமை மரியன்னை பேராலயத்தில் காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.*

*149/ 2, கதீற்றல் லேன், யாழ்ப்பாணம்.*
*பிரிவால் துயருறும்*
**குடும்பத்தினரும், உறவினர்களும்.**



## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி செல்லத்துரை இராசமணி

**(சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு)**

*எமது அன்புத் தாயார் திருமதி செல்லத்துரை இராச மணி அவர்கள் 12.07.2008 இல் இறைபதம் எய்திய செய்தி கேட்டு, எமது இல்லம் வந்து அனுதாபம் தெரிவித் தோர்க்கும், இரங்கல் செய்திகள் மற்றும் நேரிலும் வந்து உதவிகள் அளித்தோருக்கும், தொலைபேசி மூலம் தமது துயரைப் பகிர்ந்தோருக்கும், அனைத்து வழிகளிலும் உதவிய நல்ல இதயம் கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயல வர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு,இன்று (10.08.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும்மதியபோசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

சில்லாலை மேற்கு,
சில்லாலை,
பண்டத்தரிப்பு. (சி/554097) **குடும்பத்தினர்.**



## CARE INTERNATIONAL - SRI LANKA

**CARE International Sri Lanka is an INGO actively involved in addressing issues of social marginalization throughout the country. It implements a diverse portfolio of programmes in governance, gender equity and power analysis, peace building & reconciliation, sustainable livelihoods and emergency and disaster risk reduction.**

### 3. ADMINISTRATIVE ASSISTANT – Jaffna (01 Position)

The administrative Assistant will be responsible for different types of administrative supports to the Area/Field Office. Responsible for proper maintenance of personnel files, logistic support, filing system, service contracts, vehicle operations, as well as repair and maintenance works of the office. He/ She is also responsible to look after the security and cleanliness of the office.

The candidate should possess G.C.E. A/L with certificate in Secretarial studies with 02 to 05 years' progressive experience in a similar capacity. computer literacy, accuracy, attention to details, ability to meet deadlines, moderate working knowledge in English, and ability to speak Sinhala/Tamil are the required competencies.

Appointment will be on renewable Contract basis.

Suitably qualified candidates are encouraged to apply with names, addresses, and telephone numbers of three non-related referees within 07 days of this advertisement. The post applied for should be indicated on the top left-hand corner of the envelope. We thank all applicants, but only the short-listed candidates will be notified.

**Women are highly encouraged to apply.**
**CARE is an equal opportunity employer**

**Project Director**
**CARE INTERNATIONAL SRI LANKA**
**No 15, Kandy Road,**
**Jaffna.**

(C/554098)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் மீள்நிர்மாண நடவடிக்கைகள்

வவுனியாவில் நீண்டகாலமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கி வாழும் பூந்தோட்டம் நலன்புரி முகாமில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாகப் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்த நிலைமையைச் சீர்செய்வதற்காக அரச அதிகாரிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பல உடனடி முயற்சிகளை மேற்கொண்டன. வவுனியாவில் உள்ள பல உள்ளூர் அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவரும் SEED நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியுமான சிங்கத்தை மேலதிக விவரங்களை அறிந்துகொள்வதற்காக நேர்கண்டுள்ளோம்.

*வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கு அரசு மற்றும் அரசசார்பற்ற ஸ்தாபனங்களால் ஆற்றப்பட்ட சேவைகள் எவை?*

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடியாகச் சமைத்த உணவு, உடை மற்றும் தற்காலிக தங்குமிடம் என்பவற்றைச் செய்து கொடுத்துள்ளோம். அதையடுத்து அவர்களுக்கான மருத்துவ வசதிகள், பால்மா பொருள்கள், பெண்களின் சுகாதாரத் தேவைகளுக்கான பொருள்கள் என்பனவும் உடனடியாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த விடயங்களை மேற்கொள்வதற்காகத் தினமும் காலையிலும் மாலையிலும் குழு சந்திப்பை மேற்கொள்வதோடு பாதிக்கப்பட்ட மக்களுடைய பொதுக் கலந்துரையாடல்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களும் தேவைகளுக்கேற்ப ஒவ்வொரு நாளும் நடத்தி வருகின்றோம்.

*பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நிரந்தர வதிவிடங்களை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகோள் விடுத்திருப்பதாக அறிகிறோம். அது தொடர்பில் எத்தகைய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன?*

இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழுவிற்கு இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது என்பது உண்மை. பாதிக்கப்பட்டவர்களின் யதார்த்தமான கோரிக்கையாகவே நாங்கள் இதைக் கருதுகிறோம். ஏனெனில் பல வருடங்களாக நலன்புரி நிலையங்களிலே வாழ்பவர்கள் சுயமாக வாழ்வதற்கான எத்தனிப்பை ஊக்குவிக்கவேண்டும். அதோடு அது அவர்களுடைய அடிப்படை உரிமையாகும். ஆனால் தற்போது எங்களிடம் இருக்கின்ற வளங்கள் முக்கியமாக நலன்புரி நிலையங்களில் வசிக்கின்ற மக்கள் வேறு இடங்களில் குடியேற்றப்படக்கூடாது என்கின்ற ஓர் அரசின் நிலைப்பாடு. அதேபோன்று வளங்கள் அனைத்தும் தற்போது



மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இந்தக் கோரிக்கைகளை அந்த மக்களுடன் இணைந்து பரிசீலித்தோம். அதனடிப்படையில் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்திற்குள்ளே இருக்கக்கூடிய இட வசதிகளைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட மக்களுக்கான தனிப்பட்ட குடிசைகளை அமைப்பது எனவும் குறிப்பிட்ட மக்கள் ஏற்கனவே இருந்த நலன்புரி நிலைய செயற்பாடுகளுக்கு அமைவாக இருக்கின்ற வாழ்விடங்களில் வாழவேண்டிய தேவையும் தவிர்க்கமுடியாமல் ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒரு பொது இணக்கப்பாடு காணப்பட்டு தற்போது ஏற்கனவே இருக்கின்ற தங்குமிட வசதிகள் புனரமைக்கப் பட்டு வருகின்றன. அவற்றில் கிட்டத்தட்ட 70 குடும் பங்கள் குடியேறத் தயாராக இருக்கின்றன. அதோடு தற்காலிக குடிசைகளும் அமைக்கப் படவுள்ளன.

*திருத்தியமைக்கப்பட்ட குடிசைகளும் ஏற்கனவே இருந்த குடிசைகளுக்கும் இடையே அமைப்பு ரீதியிலே வேறுபாடு இருக்கின்றதா?*

முற்றிலும் எரிந்த கட்டடங்கள் திருத்தியமைக்கப்படுவதில்லை. அவை முற்றிலும் அழிக்கப்பட்டு அவ்விடங்களில் தனிப்பட்ட குடிசைகள் அமைக்கப்படவிருக்கின்றன. எரியாமல் பாவனையற்று ஏற்கனவே நலன்புரி நிலையத்தில் இருக்கின்ற வாழ்விடங்களே சிறு சிறு திருத்தங்களுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அங்கு மக்களை வாழும்படி கேட்டிருக்கின்றோம். ஏற்கனவே பல வாழ்விடங்கள் நலன்புரி நிலையத்தில் வெறுமையாக இருப்பதால் அவற்றை உடனடியாகத் திருத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றோம். அவை பழைய வதிவிடங்களைவிட எவ்விதத்திலும் வித்தியாசமானவை அல்ல.

*இத்தகைய அனர்த்தம் எதிர்காலத்தில் ஏற்படாத வண்ணம் தடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளீர்கள்?*

எதிர்வரும் காலங்களில் பல விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள், தீயை எப்படி தவிர்த்துக்கொள்வது, தீ விபத்து ஏற்படும்போது எவ்வாறு அழிவுகளையும் இழப்புகளையும் தவிர்த்துக்கொள்ளலாம் என்பது போன்ற பயிற்சி வகுப்புகளையும் நாங்கள் நடத்த இருக்கின்றோம்.

அதேபோன்று அரச நிர்வாகத்தினரும் மின்சார ஒழுக்கு போன்ற விடயங்களைப் பார்ப்பதாக உறுதியளித்துள்ளார்கள். ஆனால் இவை எல்லோருடைய கூட்டு முயற்சியினூடாகவே திறம்பட செயற்படமுடியும்.

(*நன்றி: மீண்டும் வாழ்வோம்* - Inter News)

## யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களை நினைவுறுத்தும் நல்லூர் சங்கிலியன் தோப்பு

**1907 ஒகஸ்ட்**

1907ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சங்கிலியன் தோப்பு பராமரிப்பை அரசாங்கம் (பிரிட்டிஷ் அரசாங்கம்) பொறுப்பேற்றது. நல்லூரிலுள்ள சங்கிலியன் தோப்பு யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னனான சங்கிலி என அழைக்கப்படும் ஏழாம் செகராசசேகரனின் ஆண்டினை அல்லது கோட்டையின் வாசல் முகப்பு (Gate Way) என நம்பப்படுகிறது. 1617ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் சங்கிலியன் கோட்டையையும் இந்துக் கோயில்களையும் இடித்துத் தள்ளியபோதும் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை இந்த அரண்மனை வாயில் முகப்பை மட்டும் இடிக்காமல் விட்டுவிட்டனர்.

**யாழ்.மாநகர சபை அதனை பாதுகாத்துப் பராமரிக்கவேண்டும்**

1907ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சங்கிலியன் தோப்பு என அழைக்கப்படும் இந்த சங்கிலியன் அரண்மனை வாயில் முகப்பைப் பராமரிக்கும் பொறுப்பை அப்போதைய பிரித்தானிய அரசாங்கம் பொறுப்பேற்றது. யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சின்னமாக, யாழ்ப்பாணத்தில் அரசர்கள் இருந்து ஆட்சி செய்தமைக்குச் சான்றாக விளங்குவது இந்தச் சங்கிலியன் தோப்பு மட்டுமே. தற்போது தூர்ந்த நிலையில் காணப்படும் சங்கிலியன் தோப்பில் மாநகர சபை கவனம் செலுத்தவேண்டும். இலங்கை அரசாங்கமும் சங்கிலியன் தோப்புப் பராமரிப்பில் கவனம் செலுத்தவேண்டும். பிரித்தானியர் வருகைக்கு முன் பல்வேறு அரசர்கள் ஆட்சி செய்த இந்தியா, இந்தியா சுதந்திரமடைந்த பின் ஒன்றாக இணைக்கப்பட்டது. முன்பு இந்தியாவை ஆட்சி செய்த அரசர்களின் அரண்மனைகள் தற்போது சுற்றுலா மையங்களாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஜெய்ப்பூர் அரண்மனை, மைசூர் அரண்மனை, திப்பு சுல்தான் மாளிகை என்பன இதற்கு உதாரணம். இதேபோல் சங்கிலியன் தோப்பு பராமரிப்பிலும் மாநகர சபையும் இலங்கை அரசும் கவனம் செலுத்தவேண்டும்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

- தாண்டவன் -




## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக.10

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று பிற்பகல் 3 மணிக்குத் 'திருமுறையும் வாழ்வும்' என்னும் தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் பா.[illegible]ாலசிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

மூளாய் ஞானஒளி அறநெறிப் பாடசாலை, சில்லாலை முத்துமாரி அம்மன் அறநெறிப் பாட சாலை மாணவர்களின் [illegible] பிரார்த்தனையும் இடம்பெறும்.

(203)

## நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.

- யோகர் சுவாமிகள்.

### நல்லூரானே....!

*நல்லூரானே நல்லூரானே என்று நாம் பாடிடுவோமே*
*நல்லவரங்கள் தந்தருளும் நாயகனை வாழ்த்திடுவோமே*
*ஏறுமயில் ஏறிவந்து காட்சிதரும் கந்தனவனே*
*ஏழை எங்களுக்கு வாழ்வழிக்கும் தெய்வம் அவனே*

*வெற்றி வேலுடன் சேவற்கொடியும் தாங்கி நின்றானே*
*வெவ்வினைகள் தீர்த்திடவே ஓடி வருவானே*
*அழகுக் கோல காட்சியுடன் என்றும் மிளிர்வானே*
*அன்பு கொண்டு அரவணைத்து ஆறுதல் தருவானே.*

சி.ஜமுனாதேவி, *மானிப்பாய்.*

### வந்தேனென்பான்

கந்தா குகாவென்று கைகூப்பு வார்தம்மை
எந்தைநல் லூரான்வந் தேனென்பான் - சிந்தை
உரு[illegible]ியே அன்னானைச் சேவித்து நாளும்
கருதியே ஏத்திடுவீர் கண்டு.

ஒழுக்கத்தில் நின்றே உயர் நல்லூர் சென்றே
பழுத்த மனத் தாருடனே பற்றி - விழுப்பமாய்
ஆரா தனைசெய்தவ் ஆறுமுகனை வணங்கின்
சீராக வைத்திடுவான் சேர்.

*முதுபெரும் புலவர்* வை.க.சிற்றம்பலவனார்.

### வாட்டத்தைப் போக்கடிப்பாய்

ஓடி நீ வருவாயே உறங்காமல் விழிக்கின்றேன்
தேடி நீ வருவாயே தேவசேனாபதி ஆனவனே
கோடி மலர் தூவி குறைகளைச் சொல்லுகின்றோம்
வாடி வருந்தும் மக்கள் வாட்டத்தைப் போக்கடிப்பாய்.

- தெய்வகிருஷ்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச மருத்துவ அபிவிருத்திச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக 10

சுதேச மருத்துவத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வட மாகாண சபை எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 3 தினங்களுக்கு யாழ்.மாவட்டத்தில் செயலமர்வை நடத்தவுள்ளது.

'சுதேச மருத்துவ அபிவிருத்தி' என்னும் தலைப்பில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் பங்குபற்ற விரும்புபவர்களை யாழ். சுகாதார சேவைகள் பணிமனையில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## 'எங்களுக்காக' சிறுவர் பாடல் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.10

கவிஞர் துரையர் எழுதிய 'எங்களுக்காக' சிறுவர் பாடல் நூல் வெளியீட்டு விழா சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய திருமண மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சி.சிவசரவணபவன் (சிற்பி) தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பேராசிரியர் ப.புஷ்பரத்தினம் வெளியீட்டுரையையும் ந.விஜயசுந்தரம் ஆய்வுரையையும் நிகழ்த்துவர். (203)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக 10

யாழ்.மாவட்டத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (202)


### திருமறைக் கலாமன்றம் நடத்தும் பேச்சுப் போட்டி

தலைப்பு: 'ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியோர்கள்'

முதலாம் பரிசு: 'கலைமுகம்' சஞ்சிகை நன்கொடையாக வழங்கும் ரூ. 10,000.00

இரண்டாம் பரிசு: 'ஆற்றுகை' சஞ்சிகை நன்கொடையாக வழங்கும் ரூ. 5,000.00

(ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்)

**போட்டிக்கான விதிமுறைகள்:**

* 18-25 வயதிற்குட்பட்ட எவரும் இப்போட்டியில் பங்குபற்ற முடியும்.
* ஒருவர் ஒரு பெரியாரைப் பற்றியே பேசலாம்
* பேச்சு 5 நிமிடங்களைக் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்
* போட்டிக்கு விண்ணப்பிப்போர் தமது பெயர், வயது, முகவரி, பேசப் போகும் பெரியார் யார் போன்றவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.
* இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி **25.08.2008 திங்கட்கிழமை ஆகும்.**
* இறுதிச் சுற்றுப்போட்டி 20.09.2008 சனிக்கிழமை நடைபெறும்
* விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**ஊடக இணைப்பாளர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/554089)

### விற்பனைக்கு

50 Kg weight Set, 2 Bench, நல்ல நிலையிலுள்ள P4 ரக கணனி, தொழிற்சாலை பாவனைக்கு உகந்த பெரிய மேசை, துவிச்சக்கர வண்டி என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: திருமதி சிவராஜா
இல.17, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்
தொ.பே.: 077 4210023.
(77069)

### திருமணக் CAR வாடகைக்கு A/C



T.P.: 0777 - 903090
021 - 222 7839
தொடர்பு: ரட்ணம்
22, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது லண்டன் Oxford பல்கலைக்கழகத்தில் பயின்று தற்போது லண்டன் வங்கியில் கடமையாற்றுகின்ற மணமகளுக்கு தகுந்த பட்டப்படிப்பு உடைய மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

லண்டன் தொடர்பு: 0044 7502340714
(77061)

### தவறிவிட்டது

கோபாலபிள்ளை கோகிலன் என்பவருடைய தே.அ.அட்டை (பயிரிக்கூடல், காரைநகர் எனும் முகவரியுடையது இல.892840954V), ஐந்து சந்திக்கும் நீராவியடிப் பிள்ளையார் கோயிலடிக்கும் இடையில் 08.08.2008 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தற்போது A/L பரீட்சை எடுக்கும் மாணவனாவார்.

தொடர்பு: 222 9257, 0714182365
(77066)

### ஐங்கரன் திருமண சேவை

எம்மிடம் USA, கனடா,லண்டன், ஆஸ்திரேலியா, நியூசிலன் ஆகிய நாடுகளில் P.R. உள்ள மணமகன்கள் உள்ளனர். மணமகள் அமையும் வரை எவ்வித சேவைக்கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

மணமகள்கள் ஆங்கில அறிவும், கணனி அறிவும் உடையவராக இருத்தல் வேண்டும். 24 மணிநேரமும் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ளலாம்.

லண்டன் தொடர்பு:
Tel.: 0044 7961139759, 0044 7904535905.
Fax: 0044 208 6810 707

பதிவு இல. A-536276 (77060)


### துயர் பகிருகிறோம்



எமது நிறுவனத்தின் திட்ட ஆலோசகர்
**பரமு தர்மலிங்கம்** அவர்களின்
மூத்த சகோதரர்

**அமரர் பரமு தாமோதரம்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**தியாகி அறக்கொடை நிறுவனம்**
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(77065)

### 23 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 10 - 02 - 1956
விண்ணில்: 10 - 08 - 1985

**திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்**
(ஆசிரியை றோ.க. பாடசாலை, கோப்பாய் தெற்கு)

*ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்*
*இருபத்திமூன்று ஆண்டுகள் உருண்டதம்மா!*
*எங்களின் துயரம் ஆற்ற யாருமில்லை*
*இதயம் உருகிட அஞ்சலி செய்கின்றோம்.*

கிறிஸ்தவக் கல்லூரி முன்பு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

பிரிவால் துயருறும்:
**சுப்பிரமணியம்** (கணவர்),
**சுதர்ஸன்** (மகன்).

(77056)

### நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 11 . 08 . 1943



உதிர்வு: 24 . 07 . 2007

**அமரர் சி.சிவதாசன்**
(பங்காளர், பம்பலப்பிட்டி சரஸ்வதி லொட்ஜ், முன்னாள் முகாமையாளர்- இலங்கை புகையிலைக் கூட்டுத்தாபனம் )
திதி: பூர்வபக்க தசமி (11.08.2008)

**பாசநீயும் அணைந்து ஓராண்டோடியதோ- நின்**
**உறவால் இங்கே நிதமும் வேதனைக் கீற்றால்**
**வெந்து போகின்றோம் ஐயா!**
**அப்பா வருவாரோ, அவரைக் காண்போமா- என**
**உன் பிள்ளைகள் மூன்றும்- இன்றும் ஏங்குதையா!**
**தேற்றும் வழி தெரியவில்லை தேறும் வழியும் தெரியவில்லை**
**நிலைகுலைந்து வாடுகின்றோம் அப்பா!**

C/2/7, அன்டர்சன் தொடர்மாடி,
பார்க் றோட், கொழும்பு-15,
T.P.: 2590951.

உங்கள் பிரிவால் துயருறும்:
[illegible]

(77053)


**JANASHAKTHI**
L E A D E R S



We have a vision – to be the No.1 Insurer in Sri Lanka. The passion with which we pursue this goal is best reflected in our achievements to date. We are the only Insurance company in Sri Lanka to earn an annual revenue of over Rs. 5.2 Billion within the shortest possible time, out-performing all other players in the industry. We've settled tsunami Insurance claims in excess of Rs. 5,000 Mn, the highest by any Sri Lankan Insurer. Our high service standards have earned us the title of the No. 1 Service Brand of the Year at SLIM Brand Excellence 2006. And we are well on course to achieve even greater feats.

It's about passion; the challenge to be No. 1. And the leaders it'll take to get us there. So if you've got what it takes, we've always got a place for you.

**District Sales Manager**
**Jaffna**

We have made great strides in the insurance industry ahead of our competitors within the same period of time, but to reach the pinnacle is what we are aspiring for.

As the head of the Sales Team in the District, you will be the driving force behind the dedicated sales and marketing team. Your team will promote a wide array of General and Life Insurance products including our flagship brands: "Janashakthi Full Option" and "Janashakthi Life Unlimited". Additionally you will be required to administer the activities of the branches in the district under your purview.

The person we have in mind should be a dynamic and self-motivated individual with excellent leadership skills to motivate and direct the sales force to achieve company objectives.

You will be required to posses a sound educational background with at least 5 years experience in sales, which should include 3 years experience at a managerial capacity.

If you feel you fit the bill for the above position, please forward your CV to the address given below or E-mail to viranthi@janashakthi.com within 07 days from the date of this advertisement, together with the names and contact information of two non-related referees.

Please indicate the position applied for on the top left corner of the envelop.

**Manager - Human Resources**
Human Resource Management Department,
**JANASHAKTHI INSURANCE CO., LTD.**
55/72, Vauxhall Lane, Colombo 02.

JANASHAKTHI INSURANCE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழர் கலைகள்



கலைகளும் தொழில்களும் ஒன்றோடு ஒன்று தழுவி உள்ளவை. கலைகள் உயரறிவின் செயல்கள். தொழில்கள் உடம்பின் செயல்கள். உடம்பின் முயற்சிகள். கலைகள் சிறப்பாக விளங்கும்போதுதான் தொழில்களும் சிறப்பாக விளங்கும். முதலில் கலைகள் திறமையானவர்களிட மிருந்து வெளிப்படும். அதன்பின் அவர்கள் காட்டுகின்ற குறிப்புக்களின்படி மற்றவர்கள் அக் கலை நுட்பம் பொருந் தத் தொழில் செய்வார்கள். கலைகளும் தொழில்களும் நாட்டுக்கு இன்றியமையாதன. அவை விளங்கியிருக்கும் நாடே செல்வம் நிறைந்த நாடாம்.

பழந்தமிழ் மக்கள் கலைகளினதும் தொழில் களினதும் இன்றியமையாமையைத் தெரிந்து அவற் றைப் போற்றிப் பெருமை பெற்றனர். அதனால் கலை ஞர்களும் தொழிலாளர்களும் தத்தம் கலையருமை களையும் தொழில் அருமைகளையும் நன்றாகப் பயின்று வந்தனர். இதனாற் கலைகளுக்கும் தொழில் களுக்கும் தனித்தனி மக்கட் பிரிவினர் உருவாகினர். கலைஞர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இருப் பிடமாகத் தனித்தனியாகச் சில சிற்றூர்கள் ஏற் படுத் தப்பட்டன. நகரங்களில் ஒவ்வொரு வகையினருக் கும் தனித்தனி வீதிகள் அமைக்கப்பட்டன.

பழந்தமிழர்களின் கலையுணர்ச்சியின் சிறப்பை அறியத் தமிழ்ச் சொற்பிறப்பு ஆராய்ச்சி துணை புரிகிறது. வள்ளுவர், பெருஞ்சாத்தனார், நெடுங் கண்ணன், பெருங் கொல்லனார் என்பன பண் டைய புலவர்களின் பெயர்கள். இப் பெயர்களால் முறையே அரசியற்கலை, போர்க்கலை, நாடகக்கலை, சிற்பக்கலை என்பவற்றில் சிறந்து விளங்கியவர்கள் தமிழ் நாட்டில் இருந் தனர் என்பது தெரிகிறது. தமிழில் உள்ள மணம் என்னும் சொல்லை ஆராய்ந்தால் மண்ணிலிருந்து மணம் தோன்றுகின்றது என்ற உண்மை வெளிப்படுகின்றது. இதேபோல தமிழில் உள்ள பெயர்களை ஆராய்கில் பண்டைத் தமிழ்நாடு தக்க கலையுணர்வில் சிறந்து விளங்கியது என் பதற்குத் தமிழ் மொழியே சான்றாக விளங்குகிறது. முன்னோர் களது கலை, தொழில் உணர்வுகள் யாவும் தமிழ்மொழியில் நிறைந்துள்ளன.

மெய்யுணர்வுக்கலை, இன்பவுணர்வுக்கலை, மெய்யுணர் வுப் பொருட்கலை, இன்பவுணர்வுப் பொருட்கலை எனக் கலை யினை நான்கு வகையாகப் பார்க்கலாம்.

மெய்யுணர்வுக்கலை என்பது சமயம், மெய்ப்பொருள் ஆகும். இன்பவுணர்வுக்கலை என்பது ஓவியம், சிற்பம் போன்றவை ஆகும். மெய்யுணர்வுப் பொருட்கலை ஐம் முதற் பொருட்கலையின் ஆராய்ச்சியையும் குறிக்கும்.

தமிழ் முன்னோர் கலைகளைக் கூர்மையாக ஆராய்ந்து 64 ஆகப் பாகுபடுத்தியுள்ளனர். அதனாலேயே கலை மகள் 64 கலைகளுக்கும் தலைவி எனக் கூறினர். 64 கலை கள் ஒவ் வொன்றும் தமக்குள் 64 பிரிவுகளை உள்ளடக்கி இருந்தன. எடுத்துக் காட்டாக அரசியற்கலை என்னும் பிரிவில் அக்கர இலக்கணம் முதலாக 64 பிரிவுக் கலைகள் கூறப்படுகின்றன. இவை சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ்நாட்டில் கலையுணர்ச்சி பெருமளவில் பரவி யிருந்தது.********************************

- சு.விஜிதா, தரம் - 8 A, மகாஜனக் கல்லூரி.






## பேராசை மனிதன்

இறைச்சிமீதுபேராசை பிடித்த மனிதனொரு வன் மரணப்படுக்கையில் கிடந்தான். அவன் எதையோ சொல்ல முயற்சிப்பதை கண்ட அவனுடைய மகன், ''அப்பா ஏதாவது சொல்ல வேண்டி இருக்கின்றதா?'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை எனக்கு கண்களை மூட முடிய வில்லையே'' என்றான்.

''ஏன்?'' என்று மகன் கேட்டான்.

''சென்ற வருடம் உன் பாட்டியின் வீட்டுக்கு விருந் துக்குப் போயிருந்தேன். அப்போது மேசையின் மேல் இருந்த பெரிய இறைச்சித் துண்டைச் சாப்பிட முடியாமல் போனது'' என்று சோகத் தோடு கூறினார்.

''ஏன் முடியாமல் போனது'' என்று மகன் கேட்டான்.

''நான் வேறொரு இறைச்சித் துண்டை சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்''

''சரி சாப்பிட்டபின் பெரிய துண்டை எடுத்திருக் கலாமே'' என்று கேட்டான். மகன்.

''அதே நேரம் என் கையில் இன்னொரு துண்டிருந் ததே''

''சரி அதை விழுங்கிவிட்டு பெரிய துண்டை எடுத் திருக்கலாமே'' என்று மகன் கேட்டான்.

''எப்படியடா விழுங்குவது? அதே நேரத்தில் இன்னோர் இறைச்சித் துண்டு தொண்டைக் குள் இருந் ததே!'' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் தந்தை.***

யோ. கலுஷகரன், முத்துத்தம்பி ம.வி.

## உங்களுக்குத் தெரியுமா?

### உலகில் இயற்கையிலேயே மிகவும் முதன்மையானவை

- மிக நீளமான நதி - நைல்நதி
- மிகப்பெரிய தீவு - கிறீன்லாந்து
- மிகப்பெரிய கண்டம் - ஆசியா
- மிகப்பெரிய சமுத்திரம் - பசுபிக் சமுத்திரம்
- மிகப்பெரிய கடல் - தென்சீனக்கடல்
- மிகப்பெரிய பாலைவனம் - சஹாராப் பாலைவனம்
- மிகநீளமான மலைத்தொடர் - அந்திஸ் மலைத்தொடர்
- மிக உயரமான மலை - இமயமலை
- மிக உயரமான மலைச்சிகரம் - எவரெஸ்ட்
- மிகப்பெரிய நாடு - ரஷ்யா
- அதிகமானோர் பின்பற்றும் சமயம் - கிறிஸ்தவம்
- அதிகளவு பெற்றோலிய வளம் கொண்ட நாடு - சவூதிஅரேபியா
- மிக அதிகளவு சனத்தொகை கொண்ட நாடு - சீனா



சி. நிர்மதன், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் - 9 இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

**மாணவர்களே!**

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவி தைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விட யங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண் டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங் கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தர மானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..........................
தரம் :-..........................
பாடசாலை :-..........................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாணவர் தூரிகை




ச.ஜெயந்தினி தரம்-7, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## பொன் மொழிகள்

★ நம்பிக்கை எதையும் துணிந்து செய்கிறது.
அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது.

★ இல்லையென்று ஒரு போதும் சொல்லாதே
என்னால் இயலாது என்று ஒருபோதும் எண்ணாதே.

★ இன்பத்தின் இரகசியம் அடங்கியிருப்பது
நீ விரும்பியதை செய்வதில் அல்ல.
நீ செய்வதை விரும்புவதைத் தான்.

★ நேற்று என்பது சிந்தனை.
நாளை என்பது கற்பனை.
இன்று மட்டுமே நிஜம்.

★ சவாலை எதிர் கொள்ளும் போது,
அதனை தீர்க்கும் வழியை கண்டுபிடி.
தப்பிக்கும் வழியை அல்ல.

சி.ஜீவனா, தரம்-8A, யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.

## நடனமாடும் மயில்



மயிலே நல்ல மயிலே
பார்க்க அழகாய் இருப்பீரே
சிறகை விரித்து காட்டிலே
சேர்ந்து நடனம் ஆடிடுவீரே

ஆடக்கற்றுக் கொடுத்திட்டால்
பட்சணங்கள் நான் தருவேனே
சிறகு இருந்தால் உங்களோடு
அழகாய் ஆட வருவேனே

பறந்து பறந்து இரைதேடி
பசியை ஆற்றிக் கொள்கிறாய்
சிறந்த படிப்பை எங்களுக்கு
செயலில் காட்டி வாழ்கிறாய்

சி.சிவராகவி,
கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை.

## குருவிக்குடும்பம்



முற்றத்திலே ஒரு குருவிக் குடும்பம்
அதன் சத்தத்திலே விழித்தது நம்குடும்பம்
உறங்கிக் கிடந்த பூனையாரும்
பதுங்கிப் பதுங்கிப் பார்க்கிறார்
தம்பி வார்த்த தண்ணீரிலே
குளித்து குடித்து குதித்தது
தங்கை போட்ட தானியத்தை
தன் வாயிற் பொறுக்கிக் கொண்ட
பறவைக் குஞ்சும் அழுதது
பார்த்துத் தாயும் புரிந்தது
ஊட்டி ஊட்டி மகிழ்ந்தது
ஊஞ்சல் ஆடிப்பறந்தது
வீட்டருகே வந்த பாம்பை
விரைந்தோடிப் பார்த்தது
கூடிக்கூடி ஒற்றுமையாய்
கொத்திக் கொத்தி எதிர்த்தது
பாடுபட்டு ஒற்றுமையாய் - தன்
குடும்பம் காத்தது
கொறிக்கும் பழத்தைக் கொப்பில் விட்டு
குதித்து அணிலும் வந்தது
எறிக்கும் வெயில் கொடுமையினால்
குருவி ஏதோ சொல்லிப்பறந்ததே

ச- பானுஜன், தரம் - 8
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## உண்டு என்பதே இங்கு இல்லை

சவூதி அரேபியா நாட்டில் நதிகள் இல்லை
ஆப்கானிஸ்தான் நாட்டில் ரயில்கள் இல்லை
அல்பேனியா நாட்டில் மதங்கள் இல்லை
மண்ணுண்ணிப் பாம்புக்கு கண்கள் இல்லை
சுண்டெலிக்கு வியர்வை இல்லை
பாம்பிற்கும், மீனிற்கும் கண் இமைகள் இல்லை
ஈக்களிற்கு பற்கள் இல்லை
யமுனை நதி கடலில் கலப்பதில்லை
பாலில் இரும்புச் சத்து மட்டும் இல்லை.

வி.கீர்த்தனா,
யா/ வேம்படி மகளிர் உ. பாடசாலை.



## விடுகதை சொல்லப்போறேம்...

1. கண்ணுக்குத் தெரியாதவன் உயிருக்கு உகந் தவன். அவன் யார்?
   - காற்று
2. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான். அவன் யார்?
   - பென்சில்
3. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண் டிருப்பான். அவன் யார்?
   - பூமி
4. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல். அது என்ன?
   - முட்டை
5. கழற்றிய சட்டையைத் திரும்பப் போட மாட்டான். அவன் யார்?
   - பாம்பு
6. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்டநாள் ஆயுள். அவன் யார்?
   - பானை
7. தாவுவதும் அவனே தாக்குவதும் அவனே. அவன் யார்?
   - குரங்கு
8. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அவன் யார்?
   - இளநீர்
9. மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும். வாசனை தந்து நெஞ்சிலே நிறையும். அது என்ன?
   - கடதாசி
10. உரசினாலே உயிரை விடுவான். அவன் யார்?
   - தீக்குச்சி

ஸ்.பிரியா - தரம் 3,
சென் .அன்ரனிஸ் றோ.க.ம. வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

6:2, 4:3, 4:2 பழைய தீராந்திகள், 4:3 முதிரை, 4 அடிக்கு உட்பட்ட புதிய தீராந்திகள், தேக்கம் பலகை, 4 அடிக்கு உட்பட்ட வேம்பு, பலா பலகைகள் மற்றும் நல்ல இன ஆடும் குட்டிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: சே.கிருஷ்ணகுமார்,
விதானை வளவு, பொன்னாலை வீதி,
மானிப்பாய். T.P; 021 222 7802.
(77012)

## திருமண சேவை

சுலபமான மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த சுயதெரிவு முறை முன்னோடி தனிமனித நிறுவுநர் சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுக! தொலைபேசி: 2360488, 2360694, 4873929


## கலைப்பீட மாணவர் ஒன்றியக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக.10

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.
(202)


## காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- மு.ராமதேவன்,
ஊரெழு கிழக்கு, ஊரெழு.
T.P; 0775973240
(77054)

## Machine Minder தேவை

Offset மெசின் வேலை தெரிந்தவர்கள் தேவை.

**ஸ்ரீ சாயி பிறின்டேஸ்**
நந்தாவில் அம்மன் கோயிலடி,
செருக்கப்புலம் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(சி/554063)

## திருமண சேவை

தற்பொழுது திருமண சேவையில் முன்னணி வகிக்கும் இலவச திருமண சேவையாகிய Tamilmatrimony.lk இணையம் இணைய வசதி இல்லாதவர்களையும் அரவணைக்கிறது. உங்களின் விவரங்களை பதிவுசெய்ய விரும்பின் மணமகள்/ மணமகனின் முழுவிவரத்துடன் (விரும்பினால் படத்துடன்) அனுப்பியவரின் தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டுப் பிரதியுடன் மணமகள்/மணமகனிற்கு உறவுமுறையையும் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

TAMIL MATRIMONY
C/O Mr . T. THURAISINGAAM,
8, 5/1 HAMTDEN LANE,
COLOMBO 00600
தொலைபேசி: 0774533600
மின்னஞ்சல்
info@tamilmatrimony.lk
(தொலைபேசி/மின்னஞ்சல்/ கடிதத்தொடர்புகள் மட்டும்)
(76967)

## பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே! G.S.லிங்கநாதன் அன்கோ ஸ்தாபனம்



தேடிவாசுத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய சாறிவகைகள்,
திருமணப் பட்டுப் புடவைகள் (வித்தியாசமான தெரிவுகள்)
விற்பனைக்கு வந்துவிட்டன என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

* நவீனரக புதிய புடவைத் தெரிவுகள்,
* ரெடிமேட் ஆடைவகைகள்,

பான்சி ரகங்கள், வெடிங் கிவ்ற்ஸ், சூட்கேஸ் வகைகள், பேபி நீட்ஸ், ரெஜிபோம் எழுத்துக்களும், வாழ்த்துகளும், பூமாலைகள் அனைத்துப் பான்சி ரகங்களும் பெற்றுக்கொள்ள G.S.லிங்கநாதனின் 3 ஆம் மாடி

சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்தையும் ஒரே இடத்தில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

* சிறுவர் சிறுமிகளுக்கு அன்பளிப்புப் பொருள்கள் இனாமாக வழங்கப்படுகிறது.

### புதிய சாறிகள்

| | | | |
|---|---|---|---|
| 1.Aswini | அஸ்வினி | 19.Nepaly Silk | நேபாளி சில்க் |
| 2.Silver Touch | சில்வர் ரச் | 20.Jamasim | யனசின் |
| 3.Muniaandy | முனியாண்டி | 21.Villu Saree | வில்லு சாறி |
| 4.Anna-Tangi | அண்ணா தங்கை | 22.Mecna Silk | மேக்னா சில்க் |
| 5.Vinay Silk | சில்க் வினே | 23.Sofia Saree | சேபியா சாறி |
| 6.Piriyanka-Saree | பிரியங்கா சாறி | 24.Tulsi Silk | ருல்சி சில்க் |
| 7.Kirazy Silk | கிரேசி சில்க் | 25.Varsaw Silk | வர்சோ சில்க் |
| 8.Kofi Saree | கோபி சாறி | 26.Nelco Saree | நெல்கோ சாறி |
| 9.Raj-Guru | ராஜ் குரு | 27.Gawdwal Saree | கோட் வால் சாறி |
| 10.Kuruvvi | குருவி | 28.Robo Silk | ரோபோ சில்க் |
| 11.Kuselan | குசேலன் | 29.Marma Yogi | மர்ம யோகி |
| 12.Kalpana | கல்பனா சாறி | 30.Yarady Nee Mohini | யாரடி நீ மோகினி |
| 13.Luxary silk | லக்ஸ்சறி சில்க் | 31.Susmita | சுஸ்மிற்றா |
| 14.Pandy Saree | பாண்டி சாறி | 32.Just Marriage | யஸ்ற் மறிச் |
| 15.Henstar Saree | கென்ஸ்ரார் சாறி | 33.Sindoor | சிந்தூர் |
| 16.Kalyani Cotton | கல்யாணி கொட்டன் | 34.Gold Glass | கோல்ட் கிலாஸ் |
| 17.Thasavatharam | தசாவதாரம் | 35.Kolkatta | கொல்கத்தா |
| 18.Namitha Silk | நமிதா சில்க் | | |

அரவிந் மில் - மனிஸ்ஸா ரெறின் 1 மீற்றர் - 225/=
அரவிந் மில் - சகோறி ரெறின் 1 மீற்றர் -275/=
புத்தம்புதிய சுரிதார் தெரிவுகளை திருப்தியாகப் பார்த்து எடுத்துக்கொள்ள ....

**G.S.லிங்கநாதன் அன்கோ**

சாறித் தெரிவுகளுக்கு:-
இல.13,14, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

ஏனைய தெரிவுகளுக்கு:-
இல.47, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/553995)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### முத்தையா பாலச்சந்திரன்



அன்னை அரவணைப்பில்
03.01.1940

அரன் அரவணைப்பில்
11.07.2008

ஒப்பிலாண்டு சர்வதாரி
ஒளிர்மாதம் ஆடியதில்
பத்தொரு நாட் பூண்டதிதி
பூர்வ ஸப்தமியில் - செப்பரிய
"கப்பல்" மாமா வெனும்
பாலச்சந்திரனார் நீத்தார்
இப் பூவுலகை நிமலனடி
சேர்ந்தாரே.

அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

மீசாலை மேற்கு
மீசாலை.
(76961)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### குந்தவி சதாசிவம் மதிவண்ணன் (MD)

அன்னை மடியில்
15.10.1964

இறைவன் திருவடியில்
27.06.2008

27.06.2008 அன்று சிவபதமெய்திய திருமதி குந்தவியின் குடும்பத் தினருக்குத் தொலைபேசி, தபால்மூலம் அனுதாபம் தெரிவித் தோருக்கு எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.08.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

(சி/554092)
தகவல்:
மதிவண்ணன் சதாசிவம் குடும்பத்தினர். Bethesda, MD USA

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14.03.1947



உதிர்வு
10.08.2007

### அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்

[ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - ஊர்காவற்றுறை, பருத்தித்துறை]

வதனமதில் புன்னகையும் உள்ளமதில் அன்பும்
நாவதனில் நகைச்சுவையும் கொண்டவரே
குடும்பத்தில் தலைவனாய் அன்பு நிறை மகனாய்
ஆருயிர் அண்ணனாய் கனிவான கணவனாய்
பிரியமுள்ள தந்தையாய் பாசமுள்ள மாமனாய்
தன்னலமற்ற பணியாளனாய் ஊருக்கு உபகாரியாய்
கிராமத்தின் சேவகனாய் சிறப்புடனே வாழ்ந்தவரே!

அன்பு மொழிபேசி எம்மையணைத்து
பண்புடனே வளர்த்தவரே!
தரணியிலே எமையெல்லாம் தவிக்கவிட்டு
நீங்கள் சென்று ஓராண்டு ஆனாலும்
மாறாது மாறாது எம் நெஞ்சமதில்
உங்களோடு நாம் வாழ்ந்த
பசுமையான நினைவுப் பதிவுகள்.

"துணிகை",
அல்வாய் வடக்கு,
அல்வாய்.
(77013)

ஈரவிழிகளுடன் உங்கள்
நினைவுகளைச் சுமந்தபடி:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கீழே பேச்சுக் குரல்கள் கேட்ட போதுதான் மாலாவுக்குச் சுய உணர்வு வந்தது. இவ்வளவு நேரமும் பலவிதமான யோசனைகளும், களப்போராட்டங்களும்!

கீழே யார் பேசுகிறது? - மாடியி லிருந்தபடியே உற்றுக் கேட்டாள். நடராசனுடைய குரல் தான். வேலைக் காரனின் குரலோடு சேர்ந்து கேட்டது. அவர் வந்துவிட்டார்!.......... அவள் வெகு நேரமாக எதிர்த்திருந்த வேளை வந்து விட்டது! அவள் உடலில் ஒரு பரபரப்பு!

எதிரே இருந்த நிலைக்கண்ணாடியை நோக்கினாள். அதிற் தெரிந்த உருவம்;.... அழகின் சிகரம்! - பூரண திருப்தியின் சாயல் அவள் முகத்திற் தொடர்ந்தது.

வெகு வேகமாக மாடியை விட்டிறங் கினாள். சில வினாடிகளுக்குள் மீண்டும் அவள் அங்கு வந்தபோது அவள் கையில் ஆவி பறக்கும் கோப்பி யிருந் தது.

அவையெல்லாம் ஒரு சில நிமிஷங் களுக்குள் எங்கே போய்விட்டன.

ஏதோ ஒரு வெறுப்பான பாவம்தான் இப்போது அம்முகத்தில் படிந்திருந்தது. கண்ணிற் கடுகடுத்த பார்வை!

மாலாவின் நெஞ்சு 'படபட' வென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. - ஏன் இப்படியிருக்கிறார்?

பிறகும் வெகு நேரம் வரையில் அவள் அந்த அறையிலேயேயிருந்தாள். அவன் கழற்றிப் போட்டிருந்த சட்டையை எடுத்துக் கொண்டு போய்ச் சுவர் ஆணியில் மாட்டினாள். மேசையிற் பரவிக்கிடந்த புத்தகங்களை எடுத்து ஒழுங்காக அடுக்கி வைத்தாள். பிறகு இரண்டொரு கேள்விகள் கேட்டாள்.

எல்லாம் வீண்; விழலுக்கிறைத்த நீர்! அவன் பிறகு அவளைப் பார்க்கவே யில்லை. முகத்தை மேசையிலூன்றிய



''அவன் நெஞ்சம்'' சிறுகதையின் ஆசிரியர் செ.சி.பரமேஸ்வரன் தமது பதினாறாவது வயதில் -1945 ஆம் ஆண்டில் - எழுதத் தொடங்கியவர். ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன் ஆகிய ஈழத்துப் பத்திரிகைகளிலும் ''காதல்'' முதலிய தமிழகச் சஞ்சிகை களிலும் சிறுகதைகள், நாவல்களை எழுதியவர்.

செ. சி. பரமேஸ்வரன், சி.எஸ். பரமேஸ்வரன், மற்றும் ''பரணி'' என்ற புனை பெயரிலும் அவர் எழுதினார்.

''கொந்தளிப்பு'' ''அஸ்தமன வேளை'' ஆகிய அவரது நாவல்கள் ஈழ கேசரியில் வெளிவந்தவை. இவை வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றன.

''பெண் பைத்தியம்'' என்ற அவரது நாவல் தமிழகச் சஞ்சிகையில் வெளிவந்து வாசகர்களின் அபிமானத்தைப் பெற்றது.

''கொந்தளிப்பு'' நாவல் தமிழ்ப் பத்திரிகைத்துறை ஜாம்பவானும் தலை சிறந்த எழுத்தாளருமான எஸ். டி. சிவநாயகத்தின் முன்னுரையுடன் நூல் வடிவில் வெளிவந்தது.

''கல்கி''யின் எழுத்துக்களில் பற்றும் அபிமானமும் கொண்ட அவர் தமது இல்லத்துக்கு ''கல்கி வாசம்'' என்று பெயரிட்டவர்.

இவர் சிறந்த முருக பக்தர். நல்லூர்க் கந்தன் மீது பல பாமாலைகளையும், அராலி கரைப்பிட்டி விநாயகர் திருப்பள்ளி எழுச்சி, மருதடி விநாயகர் திருப்பள்ளி எழுச்சி, கதிரமலைக் கந்தன் மீதான திருமுருகாஞ்சலி ஆகிய பக்திப் பாமாலைகளைப் படைத்தவர்.

இங்கு பிரசுரமாகும் ''அவன் நெஞ்சம்'' சிறுகதை 1954 ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற மூன்றில் ஒன்றாகும். இவர் உதயன் சஞ்சீவியிலும் பல கவிதைகளையும் இலக்கியக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இவர் தமது 72 ஆவது வயதில் அமரரானார்.

# அவன் நெஞ்சம்

## (சிறுகதை)

அவனது அறைக்குள்ளே போய்ப் புகுந் தாள். அவள் நுழைவதற்கும், அவன் ''உஸ் அப் பாடா!'' என்று உட்கார்ந்து தான் கொண்டு வந்த பொருள்களை மேசையில் வைப்பதற்கும் சரியாக இருந்தது.

மேசையில் பார்த்ததும் அவன் முகத் திற் திடீரென்று மாற்றம்............... ' அந்தப் புகைப்படம்!

அதை அதில் வைத்தவள் மாலாவே. சற்று முன்னால் அதையெடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் ஏதேதோ யோசனைகளால் அதை முன்போல உள்ளே வைக்க மறந்து போனாள்.

இப்போதும்கூட அதை அவள் கவனிக்கவில்லை, அவளுக்கு வேறொரு பிரச்சினை இப்போது. அது ஒரு நெருக் கடியான தருணம்............ அவள் எங்கே இதைக் கவனிக்க முடியும்? - மேசை யடியிற் கோப்பியோடு போய் நின்றாள். காலடிச் சத்தம் கேட்டிருக்க வேண்டும்; அவன் நிமிர்ந்து பார்த்தான் - மாலா!.........

அவன் முகத்தில் திடீரென்று ஒரு திகைப்பின் சாயல் படர்ந்தது! கைவிரல் களுக்கிடையிலிருந்த அந்தப் போட்டோ தானாகவே நழுவி மேசையில் விழுந்தது. அவனையறியாமலே கைகள் நீண்டு போய்க் கோப்பியை வாங்கிக் கொண்டன. ஆனால் அவன் கண்கள் இன்னும் அவள் முகத்தை விட்டுத் திரும்பினபாடாக இல்லை.

'நான் போட்ட மருந்து வேலை செய் கிறதோ?' மாலாவுக்குச் சிரிப்பு வந்தது. மெல்லச் சிரித்துக் கொண்டே அவனைக் கண்ணால் பார்த்துவிட்டுக் குனிந்து கொண்டாள். சில நிமிடங்கள்....!

அவள் நிமிர்ந்து மீண்டும் அவனை நோக்கினாள்.

ஆஹா! இதென்ன..........? அவன் முகம் - அதில் மலர்ச்சியோ, அன் புணர்ச்சியோ ஒரு துளி கூட இல்லை.

கைகளாற் தாங்கிப் பிடித்தபடி ஏதோ யோசனையிலாழ்ந்து போயிருந்தான். அவள் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பட்டும் படாமலும் இரண்டொரு சொற்களில் மறுமொழி சொல்லி வைத்தான். அவ்வளவுதான்!

மாலா ஏதோ ஒரு சினிமாப் பாட்டை மெல்ல முணு முணுக்க ஆரம்பித்தாள்.



நல்ல குரலும், இயற்கையான சங்கீத ஞானமும் அவளுக்கிருந்த தால் அந்த முணு முணுப்பும் செவிக்கின்பமாக வேயிருந்தது. ஆனால் அவள் தன் பாட்டை அரங்கேற்றவா பாடி னாள். அவள் எண்ணம் கைகூட வில்லையே?-

பிறகு கொஞ்ச நேரம் பேசாமல் அசை யாமல் ஆடாமல் நின்றாள். இந்த மௌன அஸ்திரப் பிரயோகமும் கூட அவன் தவத்தைக் குலைப்பதாக இல்லை.

அவ்வளவுதான்! - அவளுக்குக் கோபம் வந்துவிட்டது! - இந்த அலட் சியத்தை - அவமதிப்பை அவள் எப்படிப் பொறுப்பாள்? - 'தட தட' வென்று மாடியை விட்டிறங்கிப் போய்விட்டாள்.

அவள் தன் அறைக்கு வந்து சேர்வதற் குள் ஆத்திரம் இருந்த இடம் தெரியாது போய்விட்டது. அது இருந்த இடத்தில் வேதனை குடிகொண்டது. அவள் தன் கட்டிலில் முகம் குப்புறப்படுத்துக் கொண்டாள்.

''இந்தப் பைத்தியக்கார மனிதனைத் திருத்திக் கொள்ளலாம் என்றெண் ணினேனே...........!' - அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது.

- அன்று பகலில் அவள் தன் கணவனு டைய மேசையைத் திறந்து ''அதிலென்ன இருக்கிறது'' என்று ஆராய்ந்து கொண் டிருந்தாள். அப்போதுதான் கலியாணமான பெண். ஆகவே கணவன் - அவனுடைய பொருள்கள் சம்பந்தமான ஆராய்ச்சி கொஞ் சம் கடுமையானதாக இருக்கும் தானே?

அப்போதுதான் - அந்த மேசைக் குள்ளிருந்து சுகந்தாவின் புகைப்படம் அகப்பட்டது.

அவள் கேள்விப்பட்டிருந்த கதை உண் மையானது தான்!

நடராசன் கல்லூரியிற் படித்துக் கொண் டிருந்தபோது சுகந்தாவும் படித்தாளாம். அவள் நல்ல அழகி. எப்படியோ இரு வரும் காதலர்களாய்ப் போனார்கள். விஷ யம் அந்தரங்கத்திலிருந்து மெல்ல மெல் லப் பகிரங்கமாகிவிட்டது. இத்தகைய காதல், கலியாணத்திற் போய் முடி வதற்குப் பெற்றோர்கள் முட்டுக்கட்டை போடுவது வழக்கம். ஆனால் நடராசனுக் கும் சுகந்தாவுக்கும் இடையில் அந்தக் கைங்கரியம் செய்வார் யாரும் இல்லை. அந்த வருடப் பரீட்சை முடிந்ததும் இரு வருக்கும் கலியாணத்தை முடித்து வைத்து விடுவது என்று பெற்றோர்கள் தீர்மானித்து விட்டனர்.

பரீட்சை முடிவடைந்தது. கலியாண ஏற்பாடுகள் மும்முரமாகத் தொடங்கி யிருந்த சமயம்.............

கலியாணத்திற்கு மனிதர்களால் ஒரு தடையும் இல்லாது போகவே எதிர்பாராத வேறொரு தடையையனுப்பி வைத்தது - மலேரியா!

சுகந்தா படுத்த படுக்கையானதும் மூலை முடுக்குகளிலுள்ள கோயில்களிலெல்லாம் பிரார்த்தனைகளும், நேர்த்திக் கடன்களும்! - ஆனால்............ மூன்றாம் நாளே சுகந்தா அந்த மலேரியாவுக்கு இரையாய்ப் போனாள்.

சிலர் கடவுளைத் திட்டினார்கள். மற்ற வர்கள் வேதாந்தம் பேசி ஆறிக்கொண் டார்கள். ஆனால் நடராசன்..........?

''உலகமே இருண்டு விட்டதைப் போல்'' என்று சொல்வார்களே அது அவ னுக்குத்தான் உண்மையிற் பொருத்தமாக இருந்தது.

(10 ஆம் பக்கத் பார்க்க)

## சுபிட்சம்

முன்னர் படித்த குறுங்கதை, மூப்பிலும்
இன்னும் எனக்கு நினைவில் உவ்வது;
வீட்டுநாய் ஒன்றை வெளியே கண்டு
காட்டுநாய் ஒன்று கதைத்துப் பார்த்ததாம்!
''உன்சுகம் எப்படி? உரைத்திடு பார்க்கலாம்!''
''என்சுகம் நிச்சயம் இந்திர போகமே;
உரிய வேளையில் உணவு, தப்பாது
பெரிய பெரிய எலும்பும் இறைச்சியும்
குளிப்பு முழுக்கு குறையாது, மலசலக்
கழிப்புக்கு வெளிவீதி காட்டுவார் எசமான்
பின்னர் வீட்டினுள் பெருஞ்சுகத் தூக்கம்
உன்நிலை கொஞ்சம் உரைத்திடாய் தோழனே!''
''வெய்யிலில், மழையில் மிகுந்த குளிரினில்
ஐயையோ நான்படும் அவலம் கொஞ்சமா?
ஒதுங்க இடமின்றி உலைந்து திரிகிறேன்;
அதுசரி, கழுத்திலோர் அடையாளம்; அது என்ன?''
''கழுத்தில் என்னைக் கட்டி வைப்பதால்
விழுந்த தடயம் வேறொன்றும் இல்லை''
''சீச்சீ! இது என்ன சீர்கெட்ட பிழைப்பு!
தூ! உந்தன் வாழ்வொரு சோபன வாழ்க்கையா?
மற்றவர் விருப்பில் உண்ணுதல், உறங்குதல்
மற்றவர் விருப்பில் வாழ்க்கை நடத்துதல்,
அடிமைப் பயலே என்னடா அலம்பினாய்?
குடிக்க நீரிலாக் கொடுமை வரினும்
கட்டுடல் மெலிந்து கண்பஞ் சடையினும்
விட்டுயிர் பிரியும் வேளை எய்தினும்
இதந்தரும் எல்லாம் இழப்பினும்
சுதந்திரம் ஒன்றே சுபிட்சம் எனக்கே!''

-தனங்கிளப்பு, வ.சின்னப்பா

# ஒருவன் சுற்றத்தைத் தனக்குத் துணையாக்குவானாயின் சுற்றம் அவனுக்குத் தானாகவே ஓடிவந்து துணைதரும்!

சந்தர்ப்பம், சூழ்நிலை, காலத்தின் கட் டாயம் போன்றன. அவ்வவ் வேளைகளில் ஏற்படும் தேவைகளை நிறைவேற்ற வைக் கின்றன. இத்தேவைகள் தற்காலிகத் தேவை கள், நிரந்தர தேவைகளென இனங் காணப் பெற்றனவாகவும் உள்ளன. அத்தேவை களை நிறைவேற்றப் பல வழிகளையும் தேர்ந்து, செய்துவர மக்கள் நிர்ப்பந்திக் கப்பட்டனர். நிர்ப்பந்தங் காரணமாக ஒன் றைச் செய்யும்போது அது அந்தத் தேவைக்கு மட்டுமென்று அமைவதாலே முழுமை யான மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை. அதற்குள்ளே அன்பு, தயை, கருணை போன் றனவும் உடன் சேர்ந்து இது அன்புக்காக, இது கருணையின் நிமிர்த்தம், இது நட்பின் தேவைக்காக, என்றெல்லாம் வரும்போது மனம் முழுமையாகச் செயலில் ஈடுபட்டு நிறைந்த திருப்தி காண்கின்றது. மேலும், தருமத்துக்கான வாழ்வின் பயனிதுவே என்று உலகம் போற்ற வாழ்வில் நிறை வுணர்வு மேலோங்குகின்றது. தாயானவள் தன் முழுநேரத்தையும் தன் குழந்தைக் காகச் செலவு செய்கிறாள் - அதன் தேவையை அக்குழந்தை கேளாதிருக்கவும் உணர்ந்து செய்கிறாள். அதிலே மகிழ்ச்சி காணுகின்றாள். அது சுமையென எண்ணுவதுமில்லை- சுமை யாகத் அவளுக்குத் தெரிவதுமில்லை. ஏன்?

குழந்தையைச் சுமந்த காலை, அவளுற்ற வேதனை, அக்குழந்தையைப் ஈன்று புறந் தந்த போதே, சுமந்த துயரம் தேவையான தென்றும் அந்தத் துயரம் இல்லாதிருந்தால் இப்பொழுதுள்ள மகிழ்ச்சி எனக்கேது? என் பதுணர்ந்து அத்துயரத்துக்காக மகிழ்கிறாள்.

''கற்றோர் கனமறிவார் கற்றோரே கற்றறியா
மற்றோர் அறியார் வருத்தமுறப் - பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறி வானோ நுவல்''

(வந்தி -மலடி; நுவல் - சொல்லும்)

மற்றவர் அறியமுடியாத நோவினைத் தன்னுள் அடக்கித் தன் குழந்தைக்காகத் தாங்குகின்றவள் தாயன்றோ!

''பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம்
பிள்ளை பெறாப் பேதை அறிவாளோ''

- (என்பார் தாயுமானவர்)

ஆதலால், தன் குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டிப் போற்றுகின்றாள். இது அன்பால் எழுந்த பாசம். அது அவளை அவ்வாறு

# உள்ளார்த்தமாகச் செய்யப்படும் கடமை உடம்பை வருத்துவதில்லை

செய்ய வைக்கின்றது. அத்தூண்டுதல் சுமையென்றோ, நிர்ப்பந்தம் என்றோ கரு தாமல் மகிழ்வாகவே ஏற்கின்றாள். அந்த மகிழ்வுகளுக்கெல்லாம் அயலிருப்புக் களும் உறவுகளும் துணை நிற்கும் - நின் றன. இதனாலன்றோ நம் முன்னோர் ''தாயோ அயலோ'' என்றனர்.

### [illegible]

தாய்க்கும் அயலிருப்புக்கும் பேதம் வேண் டாம் என்ற பாங்கில், தாய்க்கும் அயலுக் கும் அத்தகையதோருறவு இருந்தது - இருக்க வேண்டியது; ஆனால் இன்று, அயல் தெரியாமல் வாழ நினைக்கின்றோம். அய லிருப்பைக் கைவிட்டு - அயந் துணை யாகிய சுற்றத்தைக் கைவிட்டு, பணத்தாலே யாவும் நடக்கும் என நினைத்து அயலி ருப்பை, சொந்தங்களை, உறவுகளைக் கூடக் கைவிட அயலிருப்புகளும் ஏனோ தானோ என்று அகன்று விடுகின்ற மையை யும் காணலாம். சுற்றத்தால் சுற்றப் படாத நிலைக்கு ஆளாகின்றோம். இந் நிலை ஏன்? சுற்றந்தழுவாச் செல்வத்தால் ஏது பயன்?!

''சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்'' (குறள்)

சுற்றத்தாரால் சுற்றப்படம் படியாக அவர் களைத் தழுவி அன்பாக வாழ்தல், ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் பெற்ற பய னாகும். உறவுகளையெல்லாம் உரிய நேரங் களில் அணுகிச் சுகதுக்கம் விசாரித்துத்துணை யாக்கி தானும் துணையாக நிற்க வேண்டும். அவ்வாறு நிற்க; சுற்றம் சூழ்ந்து வரும்.

ஒரு வேலையை ஏற்று நிர்ப்பந்திக்கப் பட்டுச் செய்யும் போது அது உடலை வருத் தும் இது என் பிள்ளைக்காக, இது என் கண வனுக்காக, இது என் மாமனுக்காக என்றெல் லாம் உளம் நெகிழ்ந்து உள்ளார்த்தமாக, இது என் கடமையெனச் செய்யப்படும் போது அது உடலை வருத்துவதில்லை. வருத்தாது இவ்வாறு உழைத்துழைத்து மகிழ்ந்தனர் எம் முன்னோர்.

நாம் காட்டிய அன்புச் செயல்களெல் லாம் அர்த்தமில்லாதனவல்ல. அவை எம்முடலை வருத்தவில்லை. மாறாக நிறைவைத் தந்தன என்பர். அக்குடும்பத் தார் ஆதலால் பெறுவதிலும் பேணுவதி லும் அசிரத்தைக் காட்டவில்லை.

### தியாகமெல்லாம் சுழற்சி முறையால் வருவன

அன்பு குழைய ஊட்டி, ஆதரவு காட்டி அதனூடாகப் பரஸ்பரம் அன்பைக் கொடுத் தும் பெற்றும் சிறந்த வாழ்வு கண்டன அத் தாய் வழியினர். இற்றை நாளில் ஐயோ பெருஞ்சுமையாகப் போச்சு; இந்தத் தொல் லையெல்லாம் வேண்டாம் வீட்டு வேலைக்கு ஆள் தேவை - வேலையாள் வேண்டும். நாமெல்லாம் உத்தியோககாரர் எமக்கெல் லாம் ஏது நேரம் என்பார்கள். பணத்துக்காக அலைந்துழன்று நாளெல்லாம் நலிந் துழைத்து - அயலை உறவையெல்லாம் இழந்து, சூழ்ந்திருப்பாரோடு உறவு பாராட்ட ஏது நேரம் என அந்நியப்பட்டு விடுவார்கள்.

புதுமைப் பெண்ணையும், பெண்மை யையும் போற்றிய பாரதி குடும்பவாழ்வை எண்ணுகையில் பொருளை ஓங்கச் செய் பவன் தந்தையென்றும் மற்றெல்லாக் கருமங்களையும் செய்து மனையை வாழ வைப்பவள் பெண்ணென்றும் காட்டி னாரன்றோ! இன்று வாழும் முறை வேறாச்சு.

************************

காப்பியதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் நெஞ்சம்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

சுகந்தாவின் நினைவு அவனை விட்டு ஒரு வினாடிகூட அகலவில்லை. எந்த நேரமும் ஒரே ஏக்கம்!

அவனிடம், சுகந்தாவின் புகைப்படம் ஒன்றிருந்தது. அதை எடுத்தெடுத்து அடிக்கடிப் பார்ப்பானாம்.

சில வருஷங்கள் கழித்துக் கலியாணப் பேச்சுக்கள் மறுபடி தலையெடுத்தன. அவன் சம்மதிக்கவேயில்லை. மாலாவைக் கலியாணம் பண்ணிக் கொள்ளக் கூட அவன் இணங்கவில்லை. ஆனால் அவன் பெற்றோர்கள் எப்படியோ காரியத்தை நிறைவேற்றிவிட்டார்கள். அவர்கள் மனமாவது ஆறட்டும் என்றெண்ணித்தான் இணங்கினானோ - என்னவோ?

மாலா அந்த வீட்டிற்கு வந்து சில வாரங்கள் ஆகிவிட்டன. அங்கே அவளுக்குக் கிடைத்த அனுபவம் அவளை வாட வைத்தது. நடராசனுடைய முகபாவமும் நடவடிக்கைகளும்............! - ''எவனோ ஒரு பைத்தியக்காரனிடம் என்னைத் தள்ளி விட்டார்களே'' என்று அடிக்கடி அவளுக்குத் தோன்றும்.

மாலா அந்தப் படத்தை மறுபடியும் பார்த்தாள். வெகுநேரம் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

ஆம். அந்தச் சுகந்தா அழகிதான்! - அபூர்வ அழகி. அவளை மறக்கமாட்டாமல் நடராசன் பைத்தியம் பிடித்தவனைப் போல் அலைவதில் வியப்பில்லைத் தான்!

மாலா படத்தை மேசையிலேயே வைத்து விட்டு ஆலோசித்தாள்:

சுகந்தாவின் நினைவு இருக்குமட்டும் இவர் இப்படியேதான் இருப்பார். அப்படியானால் என் கதியென்ன? சுகந்தாவை மறக்கச் செய்ய வேண்டும். என் பக்கம் அவர் கவனத்தைத் திருப்பிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் என் வாழ்க்கை பாலைவனம்...........!

தன்னுடைய சினேகிதி ஒருத்தி சமீபத்தில் ''தன் கணவரோடு வாழ்க்கை நடத்த முடியாது'' என்று விவாகரத்துப் பெற்றுக் கொண்டது இப்போது அவளுக்கு நினைவு வந்தது............ அப்படி நானும் செய்துகொண்டால்..............?

............. சீ ! கூடாது! எப்பாடு பட்டாவது இவரை என் பக்கம் திருப்பிக் கொள்ளவே வேண்டும்! -

''அவரைப் பிரிகிறது'' என்ற எண்ணமே கசப்பாக இருந்தது அவளுக்கு.

சரி, எப்படி அந்த அழகியிடமிருந்து அவரைப் பிரிப்பது? - இதுவே அவள் யோசனை; ''பளிச்'' சென்று ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ''தான் என்ன அழகிற் குறைந்தவளா'' என்று. இல்லையே? பிறகேன் தயங்க வேண்டும்?

மணி மூன்றடிப்பது கேட்டது.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் ....... அவர்........ வந்துவிடலாம். அதற்குள் பூரண அலங்காரமும் பண்ணிக் கொள்ள வேண்டும். இவ்வளவு நாளும் அதில் அசிரத்தையாகத் தானிருந்து விட்டேன்'' இப்படியெண்ணிக் கொண்டு அலங்காரத்தை ஆரம்பித்தாள்.

அதிலேயே வெகுநேரம் சென்றுவிட்டது. எத்தனை தடவை குங்குமப் பொட்டைத் திருத்தினாலும் திருப்தியே ஏற்படுகிறதாக இல்லை.

கடைசியில் மணி நாலரை அடித்தது. அப்போதுதான் ஒருவிதமாக அவள் அலங்காரத்தை முடித்துக் கொண்டாள்.

நிலைக்கண்ணாடிக்கு முன்னால் போய் நின்றாள். அதிற் தெரிந்த அவள் உருவம்!........ ஆஹா! அழகின் சிகரம்!

அவளுக்குத் திருப்தியேற்பட்டது. அதைத் தொடர்ந்து ஒரு பெருமிதப் புன்னகை!

சற்று முன்னால் எடுத்துப் பார்த்த அந்தச் சுகந்தாவின் படம் அவள் நினைவுக்கு வந்தது, மறுபடி கண்ணாடியை நோக்கினாள். சுகந்தாவையும், தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்தது அவள் இதயம்.............

மீண்டும் அந்த வெற்றிப் புன்னகை!

ஆம், மாலாவின் அழகிற்கும், அந்தச் சுகந்தாவின் அழகிற்கும் வெகு தூரம்! மாலா பௌர்ணமிச் சந்திரன்! சுகந்தா எங்கேயோ தள்ளி நின்று மினுமினுக்கும் ஒரு சின்ன நட்சத்திரம்!

அவளை நினைத்து நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தாராமே மறக்க மாட்டாமல் இந்த நடராசன்? இவர் என்னைப் பார்த்ததும் என்ன பாடுபடுவார்?...........

நிச்சயமாகத் ''தூண்டிற் புழுவினைப் போற்'' தான் ஆவார்!

மாலா தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். ''பாவம்! அந்த மனிதரை இப்படியெல்லாம் பைத்தியமாய் அடிக்கக் கூடாது!'' என்றுகூட அவளுக்குத் தோன்றி விட்டது.

அவளையறியாமலே அவள் கண்கள் கண்ணாடியை நாடிச் சென்றன - ஆஹா! தன் அழகு? அந்த அழகி சுகந்தாவையும் மிஞ்சிவிட்ட அபூர்வ அழகு! இன்றைக்கு என்னைப் பார்த்த பிறகும் சுகந்தாவின் நினைவு அவர் மனதிலிருக்க முடியுமா? இல்லை! இல்லை! என் உருவமே குடிகொண்டுவிடும். அவர் நெஞ்சில் நான்......... அப்புறம்!..........

மகிழ்ச்சிக் கற்பனையில் இருந்த அவள் உள்ளத்தில், சற்று முன்னர் அவன் காட்டிய 'புறக்கணிப்பு' நினைவுக்கு வந்தது.

'எவ்வளவு கஷ்டப்பட்டு என்னை அலங்கரித்தேன்..... அவர் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லையே...!.... ஓர் அன்பான வார்த்தை கூடப் பேசவில்லையே!....'

நினைக்க நினைக்க மாலாவுக்கு வேதனை அதிகமாகி வந்தது. இனிச் செய்யக் கூடியதென்ன இருக்கிறது? விவாகரத்து வழக்கு!.......... சீ !.........

நிலைமை அளவை மீறியும்கூட அவளுக்கு அவனோடு சேர்ந்து வாழ வேண்டுமென்ற ஆசை விட்டுப்போன பாடாக இல்லை. விம்மல்தான் மறுபடியும் பொத்துக் கொண்டுவந்தது. அதைத் தாங்க மாட்டாமல் முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டாள் அவள்.

எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தாளோ அவளுக்கே அது தெரியாது. தன் இரண்டு கன்னங்களையும் இரண்டு கைகள் தொட்டு முகத்தை நிமிர்த்திய போதுதான் அவளுக்கு உணர்ச்சி வந்தது.

அந்தக் கைகள்.......? நிமிர்ந்து பார்த்தவள் திகைத்தே போனாள் - அவனேதான்!

''மாலா! இதென்ன அழுகிறாயா? எதுக்காக?'' என்று நடரா[illegible] கேட்டான் தலையணையிற் கண்[illegible] ஊறியிருப்பதைப் பார்த்துவி[illegible]டு.

மத்தியான வேளையிற் சூரியன் தகித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று குளிர் இளம்பூந்தென்றல் வந்து தழுவுவதுபோல் அவளுக்குப் பட்டது. அவள் உள்ளம் சிலிர்த்தது.

ஆனால் அவளுக்குக் கோபம் வந்து விட்டது. பொய்க்கோபம்! வெடுக்கென்று அவன் கைகளைத் தள்ளிவிட்டு மீண்டும் முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டாள்.

''என்ன மாலா! சொல்லேன்!'' என்றான் அவன் அன்பொழுக.

''அப்போது நான் உங்கள் கண்ணிற் படவில்லையாக்கும். போங்கள்! போய் அந்த அழகு ராணியின் படத்தை பார்த்துக் கொண்டிருங்கள், இந்த அவலட்சண இராட்சசியை விட்டு விட்டு'' என்று பொருமினாள் மாலா.

''ஓ! இதற்குத்தானா இவ்வளவு அமர்க்களம்? நான் இனி அந்தப் போட்டோவையே பார்க்கவில்லை சரி தானே?''

அவள் இப்போதுதான் முகத்தைக் கொஞ்சம் தலையணையிலிருந்து நிமிர்த்தினாள். ஓரக்கண் பார்வை அவன் மீது விழுந்தது.

''இப்ப இவ்வளவு சொல்கிறீர்களே அப்போது ஏன் புகைந்து புகைந்து கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

அவன் சில நிமிஷங்கள் பேசாமலிருந்தான். பிறகு சொன்னான் ''உன்னைக் கண்டதும் எனக்குக் கொஞ்சம் எரிச்சல் வரத்தான் செய்தது. ஏன் தெரியுமா - உன்னுடைய அழகைக் கண்டதும் நான் ''தேன்குடித்த நரி மாதிரி'' ஆவேன் என்று நீ எண்ணுவதாக எனக்குத் தோன்றிற்று........'' என்று நிறுத்திக் கொண்டு அவள் முகத்தைப் பார்த்தான். ''என்ன, அப்படி நீ எண்ணவில்லையா?'' என்று கேட்டான்.

அவளுக்குப் பதில் ஒன்றும் சொல்ல வரவில்லை. எப்படி வரும்? தலை கூட அல்லவா குனிந்து போகிறது!......... பிறகு ''சரிதான்! அந்தச் சுகந்தாவின் அழகிற்கு அடி பணியலாம்! பாதபூசை செய்யலாம்! ஆனால்........'' என்று ஆரம் பித்துப் பதில் கூறாமலே சமாளித்துக் கொண்டாள்.

அவன் சிரித்தான். ''மாலா! அவள் அழகிதான்! ஆனால் நான் அந்த அழகுக்காக அவளை எண்ணி உருகவில்லை. அவள் என்மேல் எவ்வளவு அன்பாக இருந்தாளென்பது உனக்குத் தெரியாது. அந்த நாளையில் என்னைவிட அழகு, படிப்பு, பணம் எல்லாவற்றிலும் மிகவும் சிறந்த ஒரு பெரிய பட்டதாரிக்கும் அவளுக்கும் கலியாணம் பேசப்பட்டது. அவள் அந்தப் பாக்கியத்தை உதறித்தள்ளி விட்டாள். இது தெரியுமா உனக்கு?'' என்றான்.

அவள் 'இல்லை' யென்று தலையாட்டினாள்.

''அந்த அன்புதான் இன்றும் என் நெஞ்சை உறுத்துகிறது. அவள் அழகை - பணத்தை நாடுபவளாயிருந்தால் எங்கள் கலியாணம் குலைந்து போயிருக்கும். ஆனால் அவளுக்கு நான் வேண்டும். எனக்கு அவள் வேண்டும். கோபிக்காதே! உண்மை! - ''விட்ட குறை வந்து தொட்டச்சாச்சு;'' என்பார்களே அப்படித்தான் ஏதோ ஒன்று எங்களுக்கிடையிலிருந்தது''

மாலா, மௌனியாகவேயிருந்தாள்.

''மாலா! நீயும் அழகிதான்! அவளைக் காட்டிலும் ஒப்பற்ற அழகி! ஆனால் என்மீது நீ உண்மையில் அன்பு கொண்டிராவிட்டால் உன் அழகை ஒரு துளியும் நான் விரும்பமாட்டேன். ஒருகணமும் உன்னைப்பற்றி நினைக்கமாட்டேன்.....''

அவன் அவள் முகத்தைப் பிடித்து நிமிர்த்தி அவள் கண்களை உற்றுப் பார்த்தான். ''என்னை - என்மீது நீ அன்பு வைத்திருக்கிறாய் தானே?''-

ஓரங்களில் நீர் துளிர்த்த அக்கண்கள் ஒரு பொருள் பொதிந்த பார்வையை அவன்மீது வீசிவிட்டு படபடத்து மூடிக் கொண்டன. அப்போது ''அவ்விதம் உண்மை அன்பில்லாவிட்டால், ஏதோ பைத்தியக்காரனைப் போலிருந்த உங்களை என் அழகைப் பிரயோகித்தாவது என்பக்கம் திருப்ப முயன்றிருப்பேனா?'' என்று அக்கண்கள் கேட்ட கேள்வியை அவன் விளங்கிக் கொள்ள மாட்டானா என்ன?

*(நன்றி:சுதந்திரன் சிறுகதைகள்)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 22

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | |
| | ■ | 12 | | | ■ | | ■ |
| ■ | 13 | | | ■ | 14 | | 15 |
| 16 | | | ■ | 17 | | | |
| 18 | | | | | | ■ | |
| 19 | | | ■ | | ■ | 20 | |

அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### மேலிருந்து கீழ்

1. உழவன்.
2. காட்டி.
3. கடலோரத்தில் மீனவர் அமைக்கும் தொழிலகம்.
4. சரசம்.
5. காலைப்பாட்டு.
6. கூடும்.
8. கல்தோன்றப் பின்தோன்றியது.
11. இலக்கைப் பிடிக்கவிரிப்பது இதனை.
12. இந்தக் கொடியும் திரண்டால் மிடுக்கே.
13. வெளியேற்ற.
14. தானியங்களை இடிக்கப் பயன்படும் கருவி.
15. விளக்கம்.
16. ஆரம்பம் இல்லாதது.
17. எனவே.

### இடமிருந்து வலம்

1. எஜமான் மீது வேலையாள் வைப்பது.
5. நெல்லின் வெளிப்பகுதி.
7. வட்டத்தட்டு.
8. வீதிக்குக் குறுக்கே நீர் பாய்வது இதன் ஊடாக.
9. பூமரம் வளர்ப்பது இதில்.
10. அழகு.
12. நாதியற்ற பெண்.
13. பிடிவாதம்.
14. உதவும் நோக்கோடு செய்யப்படுவது.
16. உள்ளே உள்ளது.
17. தொடக்க....
18. நான்கு பக்கங்களைக் கொண்ட வடிவம்
19. வலு.
20. தங்களுடையது.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*

*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*

*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*

*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*

*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 22**

**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**

**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (20.08.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.22 இல் வெற்றிபெற்றோர் விவரம் 24.08.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 20 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பாதுகாப்பு. (5) எது. (7) தணிவு. (8) வதனம். (10) தகனம். (12) வில்வம். (13) இல். (14) தரு. (15) படு. (16)முதுகு. (18) உருக்கு. (20) தசமி. (22) கண் (23) குடும்பி. (24) தண்டு.

**மேலிருந்து கீழ்**

(1) பாதம். (2) துணி . (3) காவுதல். (4) புவனம். (5) என. (6) தும்மல். (9) தம். (11) கவலை. (12) விருது. (13) இடுக்கண். (14) தழுக்கு. (15)பரு. (17) குதம். (18) உமி. (19) குண்டு. (21) சமி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 20இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**ப.அனற்பவுஸ்ரினா,**
*யா/புனிதயோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்.*

**2 ஆம் பரிசு**
**சண்முகநாதன் ரவிசங்கர்,**
*வைத்தியர் வளவு, இடைக்காடு.*

**3 ஆம் பரிசு**
**சு.ருசிதா,**
*சோழங்கன் கிணற்றடி, புலோலி தெற்கு.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

**(1) இ.ஸ்கந்[illegible],**
புள்ளிவிபரக்கிளை,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

**(2) திருமதி.த.றோஸ்ஜெகதீஸ்வரி,**
நுகவில்,
கரணவாய் கிழக்கு
கரவெட்டி.

**(3) க.சுதாகரன்,**
பொன்னகம், விளாக்வீதி
சங்கானை.

**(4) எஸ்.கே.அஸ்ரவிதாஸ்,**
கூழாவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.


**(5) ஷரண்யா சற்குணநாதன்,**
நாவற்குழி கிழக்கு,
அம்மன் கோவில் வீதி,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களினதும் இந்து சமயத்தினதும் தொன்மையை எடுத்தியம்பும் மேற்கிலங்கைச் சிவாலயங்கள்



காலி மீனாட்சி சுந்தரேஸ்வரம்



மருதானை பிள்ளையார் கோயிலும் கைலாசநாதன் சிவனும்

இலங்கையின் மேற்குப்பகுதி பாரம்பரியமாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்து வரும் பிரதேசம் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் பல உள்ளன.

பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்பே மேற்கிலங்கை இந்துசமயம் நிலை பெற்றிருந்த பிரதேசம் என்பது வரலாற்று ரீதியில் உறுதியாகத் தெரிகின்றது.

இலங்கையைத் திசைவாரியாகப் பிரித்து மேற்கிலங்கை என்னும்போது மன்னார், புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி மாவட்டங்கள் அதனுள் அடங்குகின்றன. இவற்றுள் மன்னார் வடபகுதியில் அடங்குவதுபோன்று காலி தென்பகுதியில் அடங்குகின்றது.

மன்னாரினுள்ள திருகேதீஸ்வரத்தையும், காலியில் உள் மீனாட்சி சுந்தரேஸ்வரத்தையும் இரு எல்லைகளாகக் கொண்ட இடைப்பட்ட பகுதியை மேற்கிலங்கையாகக் கொள்ளலாம். இவ்விரு சிவாலயங்களுக்கிடைப்பட்ட பகுதிகளான சிலாபம், கொழும்பு, இரத்மலானை ஆகிய இடங்களிலுள்ள முறையே முன்னேஸ்வரம், சோமசுந்தரேஸ்வரம், நந்தீஸ்வரம் ஆகிய மூன்று பழமையும், வரலாற்றுச் சிறப்பு'ம் கொண்ட சிவாலயங்கள் இந்துத் தமிழர்களின் பண்டைய இருப்பை உறுதிப்படுத்தும் வரலாற்றுச் சான்றுகளாகும்.

**இராமபிரான் வழிபட்ட முன்னேஸ்வரமும் திருக்கேதீஸ்வரமும்**

திருக்கேதீஸ்வரமும், முன்னேஸ்வரமும் பஞ்சேஸ்வரங்களென்று குறிப்பிடப்படும் ஐந்து பழம்பெரும் சிவாலயங்களில் இடம்பெறுகின்றன. 2500 ஆண்டுகளுக்கு முன் அதாவது கி.மு.237 ஆம் ஆண்டு புத்த சமயம் இலங்கையில் புகுத்தப்பட்ட காலத்திற்கு இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன் விஜயனுடன் இலங்கையில் கரையொதுங்கிய உபதிஸ்ஸன் என்ற பிராமணன் சென்று வழிபட்ட பழம் பெரும் சிவாலயங்கள் ஐந்தில் திருக்கேதீஸ்வரமும், முன்னேஸ்வரமும் அடங்குவதாக மகாவம்சம் என்ற புத்த துறவிகள் எழுதிய நூலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராமபிரான் சென்று வழிபட்ட சிவத்தலங்களாக இவ்விரு சிவாலயங்களும்



முன்னேஸ்வரம்

கொள்ளப்படுவதால் இதிகாச காலமான இரா மாயண காலத்தைச் சேர்ந்த பழமை கொண்டவை என்பது தெளிவுறுத்தப்படுகின்றது.

**காலிநகர் மீனாட்சி சுந்தரரேஸ்வரம்**

அதேபோன்று காலி நகரிலுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரம் தென்னிலங்கையில் தமிழ் அரசர்களான பாண்டியரின் செல்வாக்கு மேலோங்கியிருந்த ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது. காலிநகர் மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் வாயிற்றூணில் பாண்டிய அரசர்களின் இலச்சினையான மீன்சின்னம் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இங்கு வீற்றிருக்கும் மீனாட்சி அம்மன் சமேத சுந்தரேசப் பெருமான் மீது ஊஞ்சல் பாட்டுப் பாடியுள்ளார். அழகிய உயர்ந்த கோபுரத்துடன் விளங்கும் இச் சிவாலயத்தில் மிகப் பெரிய நந்தியின் திருவுருவம் சிறப்பானதாகவுள்ளது.

புத்தளம் மாவட்டத்தின் சிலாபம் நகரிலிருந்து கிழக்கே ஒருமைல் தொலைவில் முன்னேஸ்வரம் அமைந்துள்ளது. இச் சிவாலயம் அமைந்துள்ள கிராமமும் முன்னேஸ்வரம் என்றே அழைக்கப்படுகின்றது. இதிகாச காலமான இராமாயண காலத்திற்கு முற்பட்டதாகக் கொள்ளப்படும் இச் சிவாலயத்தில் இராமபிரான் வழிபட்டதாகக் கூறப்படுவதன் மூலம் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இருப்பு உறுதி செய்யப்படுகின்றது. மூர்த்தி, தலம் தீர்த்தம் ஆகிய மூன்றையும் கொண்ட இச் சிவாலயத்தில் தீர்த்தமாக விளங்கிய மாயவன் ஆறு இன்று தெதுறு ஓயா என்று பெயர் மாற்றி வழங்கப்படுகின்றது.

வடிவாம்பிகை சமேத முன்னேஸ்வரப் பெருமான் என்ற திருப்பெயர் கொண்ட இறைவன் உறையும் இவ்வாலயத்திற்கு கி.பி.5 ஆம் நூற்றாண்டில் சோழ அரசனான



பொன்னம்பலவானேஸ்வரம்

குளக்கோட்டு மன்னன் பல்வேறு திருப்பணிகள் செய்ததாகப் பதிவுகள் உள்ளன. அதேபோன்று 15 ஆம் நூற்றாண்டில் (1412-1467) வரை ஆட்சிசெய்த 11ஆம் பராக்கிரமபாகு மன்னன் இவ்வாலயத்திற்குப் பல காணிகளை மானியமாக்கி திருப்பணியும் செய்வித்து நித்திய, நைமித்திய பூசைள் ஒழுங்காக நடைபெற வழிசெய்தான் என்று கூறும் கல்வெட்டொன்றுள்ளது.

1578 இல் போர்த்துக்கேயப்படை முன்னேஸ்வரத்தை அழித்துச் சூறையாடியது. 18 ஆம் நூற்றாணில் கண்டி அரசனான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் இந்தியாவிலிருந்து சிற்பாசாரியர்களை வரவழைத்து புனர் நிர்மாணம் செய் வித்து 1753 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய் வித்ததாக வரலாற் றுப் பதிவுள்ளது.

63 நாயன்மார்களுக்கும் எழுந்தருளி விக்கிரகங்கள் உள்ள இக்கோயிலைச் சூழ காளிகோயில், பிள்ளையார் கோயில், முருகன் கோயில், விஷ்ணு கோயில், ஐயனார் கோயில் எனப் பல இந்துக் கோயில்கள்உள்ளன.

வரலாற்றை நோக்கும் போது பல சிங்கள அரசர்கள் இவ்வாலயத்தை ஆதரித்து, வளர்த்ததை சாசனங்கள் மூலம் புலப்படுகின்றது. இந்துத் திருத்தலமான முன்னேஸ்வரம் இன்று இந்துக்களுக்கு மட்டுமல்ல பௌத்தர்களும் வழிபடும் புண்ணிய யாத்திரைத்தலமாக விளங்குகின்றது.

**முத்து விநாயகர் ஆலயமாக மாறிய சோமசுந்தரேஸ்வரம்**

கொழும்பு மாநகரிலே இன்று முத்து விநாயகர் ஆலயமொன்று சிறப்புப்பெற்று விளங்குவது. பண்டைய சோமசுந்தரேஸ்வரம் என்ற சிவாலயமாகும். இன்றும் மூல மூர்த்தியாக சிவலிங்கம் விளங்கும் இவ்வாலயத்தில் அடுத்த மூல மூர்த்தியாக விநாயகப்பெருமான் காட்சி தருகின்றார்.

ஆங்கிலே[illegible] வைப்பதற்கு [illegible] அதாவது 1792 ஆம் ஆண்டில் கடலுக்கு முத்துக் குளிக்கச் சென்றவர்களுக்கு கடலில் இருந்து கிடைக்கப் பெற்றது ஒரு விநாயகர் திருவுருவம். முத்துக் குளிக்கச் சென்றபோது கிடைக்கப்பெற்றதால் முத்து விநாயகர் என்ற திருப்பெயர் பெற்ற விநாயகப் பெருமான் சோமசுந்தரேஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். அன்று முதல் பழம் பெரும் சோமசுந்தரேஸ்வரம் முத்து விநாயகர் கோயிலாகப் பெயர்பெற்றுள்ளது.

**சிங்களக் காவியத்தில் பாடப்பெற்ற இரத்மலானை நந்தீஸ்வரம்**

கொழும்பு மாவட்டத்தின் தெற்கில் – இரத்மலானையின் மேற்கில் கடற்கரைக்கண்மித்ததாகவுள்ளது நந்தீஸ்வரம். போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்ட இச் சிவன் கோயில் பற்றி கி.பி.1415முதல் 1467 வரை ஸ்ரீஜெயவர்த்தனபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கோட்டை இராச்சியத்தை ஆட்சி செய்த 6 ஆம் பராக்கிரமபாகு காலத்தில் எழுதப்பட்ட காவியமொன்று கூறுகின்றது. சிங்கள மொழியில் தொடகமுவே ஸ்ரீராகுல தேரர் என்ற பௌத்த துறவியினால் 1454 ஆம் ஆண்டில் "சலஹினி சந்தேசய" என்ற காவியம் எழுதப்பட்டுள்ளது.

அதிலேயுள்ள பாடல்களில் ஈஸ்வரன் கோயில் தொடர்பான வழிபாட்டு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் மிகவும் விருப்புடன் தமிழ் மொழியில் பாடும் தோத்திரங்களால் மனதைக் கவரும் ஈஸ்வரன் கோயில் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இற்றைக்கு 554 வருடங்களுக்கு முன்னர் அதாவது போர்த்துக்கீசர் இலங்கைத் தீவில் அடியெடுத்து வைப்பதற்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையின் மேற்குக் கரையில் தமிழ் மொழியும், இந்து சமயமும் சிற்புடன் திகழ்ந்தமையும், இந்துத் தமிழரின் பண்டைய இருப்பும் வெளிப்படுத்தப்பட்டு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## முன்னேஸ்வரத்தைக் கீர்த்தி ராஜசிங்கன் 1753 இல் புனருத்தாரணம் செய்வித்து கும்பாபிஷேகமும் கண்டான்

1518 இல் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்ட ஆலயம் 1717 இல் இரத்மலானை கதிர்காமக்கந்தன்ஆலயமாகப் புனரமைக்கப்பட்டது. 1984 இல் இக்கோயில் காணியை அகழ்ந்தபோது ஒரு அளவில் பெரிய ஆவுடையாரும், அந்த ஆவுடையாருக்குப் பொருந்தாத சிறிய சிவலிங்கத்தின் மேற்பகுதியும், பல கருங்கற்களாலான கோயில் தூண்களும், கற்களும்கிடைக்கப் பெற்றன. அந் நாள்களில் அப்பகுதிப் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த காலஞ் சென்ற அமைச்சர் லலித் அத்துலத் முதலி அங்கு வாழும் சிங்கள மக்களிடம் "இலங்கைத்தீவின் கடலையண்டிய பிரதேசங்களில் பண்டைய நாள்களில் பல ஈஸ்வரன் கோயில்கள் இருந்தன. இங்கு காணப்படும் ஈஸ்வரன் கோயில் இடிபாடுகளைக் கொண்டு கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், இராமேஸ்வரம் போன்று பழமையும், பெருமையும் கொண்டதாக இந்த ஈஸ்வரன் கோயில் இருந் துள்ளது என்பது உறுதியானது" என்று எடுத்துக்கூறி இவ்வாலயத்தின் பழமையும் பெருமையையும் அம்மக்களுக்கு உணர்த்தியதாக அவ்வாலய தர்ம கர்த்தாவான காமினி பெர்ணான்டோ கூறுகின்றார்.

இத் திருநந்தீஸ்வரர் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 1997 இல் இச் சிவாலயத்திற்கு அண்மையிலுள்ள காணியை அகழ்ந்த போது 2 அடி 7 அங்குல உயரமும் 7 அங்குல அகலமும் கொண்ட பார்வதி சிலை [illegible]டது. இச் சிலையானது. [illegible] நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த தென அன்றைய தொல்பொருள் திணைக்கள உதவி ஆணையாளர் செனரத் திசாநாயகவால் சான்றிதழ் வழங்கி உறுதிப் படுத்தப் பட்டுள்ளது. இச்சிலை கொழும்பு நூதன சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அதேபோல் மொறட்டுவ மாநகர எல்லைக்குள் 500 ஆண்டுகளுக்கு முன்னரான வரலாறு கொண்ட பத்தினி அமமன் ஆலயம் இருந்தமையும் அவ்வாலயக் காணி 1998-01-08 ஆம் திகதிய 1009/14 இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி அரசால் சுவீகரிக்கப்பட்டு மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தெகிவளை வெங்கடேசப் பெருமாள் கோயிலும் பழமைகொண்டதென்பதற்கு இத் திருக்கோயில் புனரமைப்பின்போது நிலத்தினடியில் காணப்பட்ட போர்த்துக்கேயர் காலத்து நாணயங்கள் சான்றாகின்றன.

இவற்றுடன் 16 ஆம் நூற்றாண்டில் சீதாவாக்கையை ஆட்சி செய்த 1 ஆம் இராஜசிங்கனால் தல்துவ என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிவாலயமும், ஹங் வெல்லவிலுள்ள திருக்கோயிலும், நவகமுவ என்னும் இடத்திலுள்ள பிரசித்தி பெற்ற பத்தினியம்மன் கோயிலும் பண்டைய சீதாவாக்கை இராச்சியத்தில் இந்துக்களின் இருப்பின் சான்றுகளாகும்.

களுத்துறை மாவட்டத்தில் சீனிகம என்னும் இடத்திலுள்ள அம்மன் கோயிலும், பேருவளையில் உள்ள கந்தவிகாரை என்னும் இடத்திலுள்ள விஷ்ணு கோயிலும் பிரசித்தி பெற்றவை.

இன்று மேற்கிலங்கையில் பரவலாகப் பல இந்து ஆலயங்கள் சிறப்புடன் விளங்குகின்றன. அவற்றில் கொழும்பு மாவட்டத்திலுள்ள பொன்னம்பலவானேஸ்வரர், அருணாச்சலேஸ்வரம், கப்பித் தாவத்தை கைலாசநாதர் சிவன்கோயில் ஜிந்துப்பிட்டி, கொம்பனித்தெரு, பம்பலப்பிட்டி, முகத்துவாரம், செட்டியார்தெரு, கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை எனப் பல இடங்களில் சிவாலயங்களும் அம்மன் கோயில்களும், பிள்ளையார், முருகன், திருமால் கோயில்களும் சிறப்பாக விளங்குகின்றன.

நீர்கொழும்பு, உணுப்பிட்டி ஆகிய கம்பஹா மாவட்டப் பகுதிகளிலும், களுத் துறை நகரிலும், தோட்டப் பகுதிகளிலும், புத் தளம் மாவட்டத் தின் பல பகுதிகளிலும் பல இந்துக் கோயில்கள் உள்ளன.

மேற்கிலங்கையில் தமிழர்கள் வந்தேறு குடிகள் என்று கூறப்படும் வாதத்தை முறியடித்து, நிராகரித்து, இலங்கைக்குள் எந்தவொரு சமயமும் புகுவதற்கு முன்பே எந்தவொரு மொழியும் உருவாவதற்கு முன்பே இந்து சமயமும், தமிழர்களும் வாழ்ந்தமையை அறுதியிட்டு உறுதிப்படுத்தப் பல்வேறு சான்றுகளுள்ளன. அவற்றை வரலாற்று ஆய்வாளர்கள் உரிய முறையில் பயன்படுத் தாமலிருப்பதே பெருங் குறை மட்டுமல்ல வரலாற்றுத் தவறுமாகும்.

***



த. மனோகரன்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணுலகில் 13.10.1968

விண்ணுலகில் 27.06.2008

அமரர்

## கந்தசாமி பிரபாகரன் (பிரபா)

(முன்னாள் ஊழியர் யாழ்.மாநகரசபை, டிலக்சன் மோட்டோஸ் உரிமையாளரும்)

மலையொன்று சரிந்து மடிந்ததுவோ- மண்மீது
சிலையாகி நிற்கின்றோம்
சிந்துகின்றோம் கண்ணீரைச் செந்நீராக்கி
நிலவில்லாத நிலவானம் போல் தவிக்கின்றோம்
நித்தம் உங்கள் நினைவில் படம் பார்த்து -அப்பா
என்று பிள்ளைகள் கூப்பிட என் உள்ளம் தீயாய் வேகுது ஐயா!
பிள்ளைகளின் மழலைப் பேச்சைக் கேட்காமல்
எங்கே போய் விட்டீர்கள்
அம்பு பட்ட மான் போல் எம் உள்ளம் துடிக்கிறதே
ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன?
உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
வேடங்கள் போடும் தேசத்தில் நீதியும் தூங்கிப் போனதோ!
தெய்வங்களும் ஊமையாகிப் போனதோ!
உங்கள் ஆத்மா சாந்தி பெற
கண்கள் சிந்தும் கண்ணீர்ப் பூக்களால் தினம் பூஜிக்கின்றோம்.

இன்று (10.08.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

52/2, வைமன் றோட், நல்லூர். குடும்பத்தினர்.

(சி/554093)

MANOJ EXPRESS

யாழ். - கொழும்பு விமானசேவை



16.08.2008, 22.08.2008 8000/=

ஒரு வழிப் பயணச் சீட்டு

மேலும் தொடர்ந்து வரும் சேவைகளுக்கு கழிவுகள் வழங்கப்படும்.

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்

தொடர்பு:

Ram Com

06/04, Hospital Road, Jaffna. T.P : 021 222 8428


# மரண அறிவித்தல்

## போடியார் முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி

(பங்கர் அப்பா)

(ஊறணி-வல்வெட்டித்துறை)

வல்வை புடைவை மாளிகை முன்னாள் முதலாளியும் தற்போதைய Ocean wealth (ஓசன்வெல்த்) உரிமையாளரும் Marine wealth ( Sri Lanka) Marine wealth. ING (Canada) ஆகிய ஸ்தாபனங்களின் ஸ்தாபகரும் ஆவார்.



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், ஊறணி வல்வெட்டித்துறையை வசிப்பிட மாகவும் கொண்ட போடியார் முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி (பங்கர் அப்பா) அவர்கள் 06.08.2008 புதன்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.08.2008 புதன்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஊறணி, வல்வெட்டித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.


(77080)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுரிமைகளை இழந்து தவிக்கும் வன்னி மக்கள்; வசிப்பிட உரிமை, உணவு உரிமை எல்லாமே காற்றில்!

அனைத்துலகச் சட்டங்கள் "வாழ்வு" என்ற சொல்லை விரிவாக விளக்க மிகவும் சிரமப்படுகின்றனர். "வாழ்வு" என்ற பதமானது மனித நடத்தையுடன் தொடர்புபடுகின்ற ஒரு விடயமாகிறது.

மனித நடத்தை என்பது ஒவ்வொரு தனி மனிதர்களினதும் தனி நடத்தை, பொது நடத்தை, அரசியல் நடத்தை என்பவற்றை ஒன்று சேர்க்கின்றது. வாழ்வுரிமையானது "வெறும் மிருக வாழ்க்கை என்ற அள



விற்கோ அல்லது உயிர் வாழ்வது என்ற அளவிற்கோ கட்டுப்படுத்தப்படக் கூடாது".

ஆனால், இன்று வன்னி மக்களைப் பொறுத்த வரையில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் மிருகவாழ்க்கையிலும் பார்க்க மிகவும் கேவலமான முறையில் நடத்தப்படுகின்றது. அனைத்துலக சட்ட விதிமுறைகளுக்கு மாறாக வன்னி மக்கள் மீது விமானத் தாக்குதல், ஷெல் வீச்சுக்கள் மற்றும் கிளைமோர்த் தாக்குதல்கள் மூலம் உயிர்வாழ முடியாத சூழ்நிலையே உருவாகி வருகின்றது.

பொதுவாக, வாழ்வுரிமையானது "அது மனித மாண்புடன் வாழும் உரிமையையும் உள்ளடக்கியிருக்கிறது என்பதுடன், அத்தோடு சேர்ந்த இதரவற்றையும் கொண்டுள்ளது".

மனித வாழ்வுக்கு, அவசியமான சத்துணவு, ஆடைகள், ஏனைய வசிப்பிடம் போன்றவற்றோடு படிக்க, எழுத, வாசிக்க வசதிகள், பல்வேறு வடிவங்களில் ஒருவர் தனது கருத்துக்களை வெளியிடுதல், சுதந்திரமாகச் சுற்றித் திரிந்து வருதல், சக மனிதர்களிடம் கலந்து கொள்வது, ஒன்றிணைந்து வாழும் உரிமை ஆகியவை அவசியமானதாகும். இந்த அவசியமான உரிமைகள் வாழ்வுரிமைகள் என்கிறது ஸ்ரீலங்கா ஜனநாயகம். ஆனால், வன்னி மக்களைப் பொறுத்த வரையில் இவை இன்று மறுக்கப்படுகின்றவையாக மாறுகின்றது.

"வாழ்வு" என்ற சொல்லின் பொருள் "தரமாக வாழ்வது" என்பதைக் குறிக்கின்றது. தரமாக வாழ்வதற்கு பின்வரும் வாழ்வுரிமைகள் அத்தியாவசியமாகின்றது.

**உரிமைகள்**

1. மனித மாண்புடன் வாழும் உரிமை
2. "கொத்தடிமை" என்பதற்கு இலக்காகாதிருக்கும் படியான ஒரு மனித உரிமை.
3. நியாயமற்ற வேலை நிலைமைகளுக்கு எதிரான உரிமை.
4. விடுதலை செய்யப்பட்டவுடன் ஒரு கொத்தடிமைப் புனர்வாழ்வு பெறுவதற்கான உரிமை.
5. சட்டவிரோதமில்லாத, ஒழுக்கக்கேடில்லாத வாழ்க்கைத் தேவைக்கான உரிமை.
6. கண்ணியமான சுற்றுச் சூழல் மற்றும் பொருத்தமான குடியிருப்புக்கான உரிமை.
7. நல்ல ஆரோக்கியத்துக்கான உரிமை.
8. மருத்துவ வசதிக்கான உரிமை.
9. சட்ட உதவிக்கான உரிமை.
10. சுதந்திரமாகச் சுற்றித் திரிந்து சக மனிதரோடு கலந்து கொள்ளும் உரிமை.
11. உணவு, குடிதண்ணீர், தக்கசுற்றுச் சூழல், கல்வி, மருத்துவக்கவனிப்பு மற்றும் குடியி ருப்புக்கான உரிமை.
12. மரபு, கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களுக்கான உரிமை.
13. சாலை வசதிக்கான உரிமை.
14. உணவுக்கான உரிமை.
15. கல்விக்கான உரிமை.
16. தகவல் அறியும் உரிமை.
17. கண்ணியமான சவ அடக்கத்திற்கான உரிமை.
18. ஒரு சுத்தமான நகரில் வாழும் உரிமை.
19. பகிரங்க விசாரணைக்கான உரிமை.
20. மாசுபடாத இலவசநீர் மற்றும் காற்றிற் றிற்கான உரிமை.
21. மரியாதையுடனும் முறையான கண்ணியத்துடனும் நடத்தப்படுவதற்கான பெண்கள் உரிமை.
22. சாகுபடி செய்வதற்கான விவசாயிகளின் உரிமையும், வாழ்க்கைத் தேவைக்கான அவர்களின் பகுதியான அடிப்படை உரிமையும்.
23. துரிதமான விசாரணை மூலம் வழக்குகளை விரைவில் முடிக்க உரிமை.
24. கைதிகளுக்குப் போதுமான சத்துணவு, துணி, வசிப்பிடம், படிக்க, எழுத, அவருடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுடன் நேர்காணல் உள்ளிட்ட குறைந்த பட்ச தேவைக்கான உரிமை.

**தனிமைக்கு உரிமை**

தற்போதைய சூழ்நிலையில் வன்னி பெரும் நிலப்பரப்பில் வாழ்கின்ற மக்கள் எந்தளவுக்கு மேற்படி உரிமைகளை நுகர்ந்து அனுபவிக்கின்றனர் என்பதை நோக்கும் போது,

ஒரு குடிமகனுக்கு தனிமை உரிமையுள்ளதா? என்பது இன்றுவரையும் பிரச்சினைக்குரியதாகின்றது. தனிநபர் சுதந்திர உரிமையானது அவனுடைய செயல்பாடுகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் இருந்து அவனை விடுவிக்கும் உரிமையை மட்டுமல்ல, அவனுடைய தனிப்பட்ட வாழ்வின் மீதான ஆக்கிரமிப்புக்களில் இருந்து அவனை விடுவிக்கும் உரிமையையும் பெறுகின்றது.

இன்று வன்னியில் வாழ்கின்றவனும் குறிப்பாக இடப்பெயர்வில் சிக்கி வாழ்கின்றவனுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் இந்தத் தனிமை உரிமை பறிக்கப்பட்டு, அகதி வாழ்க்கை வாழ்கின்றான்.

இன்று வன்னியில் வாழ்கின்ற குடிமக்களின் தொலைபேசி உரையாடல்கள் யாவும் ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவால் ஒட்டுக் கேட்கப்படுகின்றது.

**என்.சுந்தரமூர்த்தி**
**(முதுதத்துவமாணி)**

"தொலைபேசி உரையாடல் என்பது ஒரு மனிதனுடைய தனிப்பட்ட வாழ்வின் ஒரு முக்கியமான முகத்தோற்றமாகும்".

அவருடைய வீட்டில் அல்லது அலுவலகத்தில் அல்லது தொலைத் தொடர்பு நிலையத்தில் தனிமையில், எவ்வித குறுக்கீடும் மின்றி தொலைபேசியில் உரையாடுவதைத் 'தனிமைக்கு உரிமை' என்று நிச்சயமாகக் கோரமுடியும்.

தொலைபேசியை ஒட்டுக்கேட்பது என்பது தனிமைக்குள் ஒரு கடுமையான ஊடுருவல் ஆகும். ஒரு குடிமகன் தன்னுடைய, தன்குடும்பத்தினுடைய திருமணம், குழந்தைப்பிறப்பு, தாய்மை, குழந்தை வளர்ப்பு மற்றும் கல்வி போன்றவற்றில் தனிமையைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கின்றான்.

மேலும், அவருடைய சம்மதம் இன்றி மேலே குறித்த விடயங்களில் உண்மையாகவோ அல்லது வேறு விதமாகவோ மற்றும் புகழ்ச்சியாகவோ அல்லது விமர்சித்தோ எதையும் வெளியிடக்கூடாது.

குறிப்பாக, இன்று அகதி வாழ்வும், நிம்மதி அற்ற சூழல் வாழ்வும் வன்னி மக்களுக்கு எங்கே தனிமைக்கு உரிமையை வழங்கப் போகின்றது.

**உறையுள் உரிமை**

வாழ்வுரிமை என்பது "வசிப்பிட உரிமை, குடியிருப்பு உரிமை மற்றும் நிரந்தரமாகத் தங்கிவிடும் உரிமையையும் உள்ளடக்கியது".

"மனித ஜீவனுக்குரிய வசிப்பிடம் என்பது அவருடைய உயிரையும், உடலையும் மட்டும் பாதுகாப்பதற்காக அல்ல. உடல் ரீதியாக, அறிவு பூர்வமாக மற்றும் ஆன்மீகமாக வளர வாய்ப்புள்ள வீடு அது.".

ஆகையால் வசிப்பிட உரிமையென்பது வாழ்வதற்குப் போதுமான இடம், பாதுகாப்பு மற்றும் கண்ணியமான கட்டடம், சுத்தமான மற்றும் கண்ணியமான சூழ்நிலைகள், போதுமான வெளிச்சம், சுத்தமான காற்று மற்றும் நீர், மின்சாரம், சுகாதாரம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

இன்று மன்னார், வவுனியா, மணலாறு, முகமாலை போன்ற யுத்தக்களமுனைகள் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் மரநிழல்களில் எவ்வித ஆதார வசதிகளும்மின்றி வாழ்வியல் சூழ்நிலைகளுக்கு மாறான பிரதேசங்களில் குடியேறியுள்ளனர்.

ஒரு ஜனநாயக அரசாங்கமானது அதனுடைய அமைப்புக்கள் மூலம், வீடுகட்டும் திட்டங்கள் மூலம் மனித ஜீவனுக்கான உறைவிடத்தைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

யுத்தம் செய்து வன்னி மக்களை விடுவிக்கப் போகின்றோம் என்று சொல்லும் மகிந்த அரசாங்கம் இன்று வரையும் இந்த மக்களுக்கு வாழ்வியலுக்கான உறைவிட வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை.

இன்று உறைவிட வசதிகளை வன்னி மக்களுக்காகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உட்பட பல அரசசார்பற்ற நிறுவனங்கள் ஓரளவுக்குச் செய்து கொடுத்து வருகின்ற போதிலும், அவை தெரிவு செய்த அமைவிடங்கள், அமைக்கப்பட்ட உறைவிடங்கள் பருவ மழைக்குத் தாக்குப் பிடிக்குமா? என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒரு விடயமாகின்றது. இதனை சம்மந்தப்



பட்ட திட்டமிடும் அதிகாரிகள் நன்கு அவதானிக்க வேண்டும். பெயரளவில் உறைவிடம் அமைப்பதில் ஒரு பிரயோசனமும் இல்லை.

ஆகையால் வசிப்பிட உரிமையென்பது ஒருவர் தலைக்கு மேல் ஒரு கூரைக்கான வெறும் உரிமை அல்ல ஒரு மனித ஜீவனாக அவர்கள் வாழ்வதையும், வளருவதையும் சாத்தியப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்புக்கான உரிமை என்பதாகும்.

**சாலையைப் பயன்படுத்தும் உரிமை**

இன்று வன்னி மக்கள் சாலையைப் பயன்படுத்தும் உரிமையை இழந்துவிட்டனர். ஏ-9 மற்றும் சாலைகள் யாவும் மூடப்பட்டு விட்டன.

இன்று வன்னிச் சாலைகள் புழுதி வாரித் தள்ளும் சாலைகளாகவும், குன்றும் குழியுமான சாலைகளாகவும், மக்களின் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் சாலைகளாகவும் காணப்படுகின்றன. கிரவல் மண் நன்றாக நிரம்பிய சாலை வழியாகச் செல்லும் மனிதன் கிரவல் மனிதனாக மாறிவிடுகின்றான்.

சாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இது சம்பந்தமான முன்னைய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் 'ஒதுக்கப்படும் பணம் முழுவதையும் சில்லறைகளாக மாற்றிச் சாலையில் போட்டால் கூட சாலை நன்றாக இருக்கும்' என ஆதங்கப்பட்டுள்ளார்.

ஆகவே, சாலை உரிமை என்பது "இயற்கையை இரசித்துக் கொண்டு அன்றாடப் பணிக்கு சுலபமாகத் தொடர்பு கொள்ளக் கூடிய சாலைகள் போன்ற நகர சம்பந்தமான வசதிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்".

வாழ்வுரிமையானது, வாழ்வில் உயிரோடு இருத்தலை மட்டுமல்ல, தரமான வாழ்க்கையைப் பற்றியும் கூறுகிறது. வன்னிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சாலைத் தொடர்பு வசதி என்பது வாழ்க்கை என்பதற்கான அடிப்படைத் தொடர்பு மாகும்.

இத்தகைய நிர்ணயிப்புக்கள் உறுதியாக்கப்பட்ட விடயங்களாகும். அதன்படி ஸ்ரீலங்கா அரசியல் சட்டக்கட்டளையைக் காணும் பொழுது தகவல் தொடர்புக்கு நல்ல நிலைமைகளில் சாலைகள் இருக்க வேண்டும் என்பதாகும்.

அந்த உரிமையை மறுப்பதென்பது, ஜனநாயக அரசியல் சட்ட வரம்புக்குள் செழுமையாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்ளப்பட்ட வாழ்க்கையை மறுப்பதாகும்.

**உணவு உரிமை**

உணவிற்கும் பசியிலிருந்து விடுதலை பெறுவதற்குமான வாழ்வுரிமை சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்திலும் (UDHR) பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீதான சர்வதேசப் பொருத்தப்பாட்டிலும் அடங்கியுள்ளது.

ICESR இன் உறுப்புரிமை 11 (1) ஒவ்வொருவருக்கும் போதியளவு உணவுக்கான உரிமையை அங்கீகரிக்கின்றது. மேலும், கடுமையான வாசகத்தைக் கொண்ட உறுப்புரை 11 (2) பசியில்லாதிருப்பதற்கான ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமையை ஆட்சியாளர்கள் அங்கீகரிக்க வேண்டுமென விதந்துரைக்கின்றது. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அடிப்படை என்ற சொல் வளங்களுடன் ஊக்குவிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கும், அவசியமான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும் ஆட்சியாளர்கள் மீது உடனடிக் கடப்பாடு ஒன்றை சுமத்துகின்றது.

வன்னிப் பெரும் நிலப்பரப்பில் இன்று வரையும் பட்டினிச் சாவுகள் நிகழ்ந்ததாக எந்தவிதமான தகவல்களும் வெளியாகவில்லை. பொருண்மியக் கட்டமைப்புக்கள் சிறப்பாகச் செயற்படுவதே இதற்கான காரணமாகும். ஆனால் சத்துணவு மட்டம் மிகவும் கீழ் நிலையிலேயே உள்ளது. இது வாழ்வுரிமையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியான உணவுக்கான உரிமை என்பது மீறப்பட்டுள்ளது என்பதையே எடுத்துக்க காட்டுகின்றது.

உணவுக்கான உரிமை என்பதில் அதி முக்கியமானது எதுவென்றால் சத்துணவுப் பட்டினி ஆபத்திலுள்ள வயதான, பலவீனமான, ஊனமுற்ற, நிராதரவான பெண், நிராதரவான ஆண்கள் மற்றும் கர்ப்பிணிகள் மற்றும் பால்கொடுக்கும் தாய்மார்கள், நிராதரவான குழந்தைகள், அதிலும் குறிப்பாக அவர்களோ அல்லது அவர்கள் குடும்ப உறுப்பினர்களோ அவர்களுக்கு சத்துணவு அளிப்பதற்குப் போதுமான நிதியில்லாத இடங்களுக்குச் சத்துணவு வழங்கப்பட வேண்டும் என்பதே.

இந்த நியதியின் அடிப்படையிலேயே உலக உணவுத்திட்டம் பல்வேறு வடிவங்களில் உணவு வழங்கல் செயற்திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றது.

எனினும் அச்செயற்றிட்டங்கள் வன்னி பெரும் நிலப்பரப்பில் "யானைப் பசிக்கு சோளம் பொரி" போட்ட கதையாகவே தான் இருக்கின்றது. 2008 ஆம் வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு மிகப்பெரியளவில் வெட்டப்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ************

*(நன்றி: புள்ளி (ஆடி 2008)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவில் ஓராண்டு...



மண் மகிழ் 16 . 07 . 1936

கண் நெகிழ் 23 . 07 . 2007

திருமதி

## வயிரமுத்து தங்கம்மா

திதி: நவமி

ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயர்
ஆயிரம் உறவுகள் அவனியிலிருந்தும்
அன்னையவளுக்கு ஈடாகுமா?
அவனியிலே நாம் சிறப்புடன் வாழ
அன்புடன் வழிகாட்டி நின்றாய்
அம்மா உன் இனிய நினைவுகள்
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்காது.

நி.மு.: மாவை கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
த.மு.: அப்பையா வீதி,
கோக்குவில் மேற்கு, கோக்குவில்.

உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

(77070)

## மரண அறிவித்தல்



### யோசேப் யேசுதாசன்

**(அன்னராசா பரியாரி)**

அச்சுநகர், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் யேசுதாசன் (அன்னராசா) நேற்று (09.08.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் (பரியாரி) - எலிசம் தம்பதியரின் அன்பு மகனும் லற்றீசியாவின் (புஷ்பராணி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிங்கராசா - றோசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அமிர்தநாதன் மற்றும் தங்கமணி (கண்டி), எமிலியா (அன்னம்), மரியநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெறாட் (நோர்வே), ஜோன்சன் (கனடா), தர்சினி (கனடா), ஜெறினாலதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் றமணி (நோர்வே), செல்வி (கனடா), சந்திரன் (கனடா), சுரேஷ் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனும் நிலூஷா, லேனாட் யேசுதாசன், லக்ஷா, டெபி, யோகா, யோசுவாஸ் அபி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.08.2008) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை வீதி,
அச்சுவேலி. (77079)

தகவல்:
**மனைவி.**

## நீங்கா நினைவலைகள்

2ஆம் ஆண்டு நிறைவு | 5ஆம் ஆண்டு நிறைவு





அமரர் வேலுப்பிள்ளை தியாகராசா
தோற்றம் : 12-01-1935
மறைவு : 23-06-2006
திதி: அபரபக்க திரயோதசி

திருமதி தியாகராசா பாக்கியம்
தோற்றம் : 01-10-1939
மறைவு : 06-08-2003
திதி: பூர்வபக்க நவமி

**தந்தை:**
தாயால் எமக்குக்
கிடைக்கப்பெற்ற வரம்

**தாய்:**
ஆண்டவனால் எமக்கு
கிடைக்கப்பெற்ற வரம்

நிரந்தர முகவரி: பலகாடு, காரைநகர்.
தற்காலிக முகவரி: சிவலிங்கப் புளியடி,
யாழ்ப்பாணம். (77077)

அமரர்களின்
குடும்பத்தினர்.


## வாடகைக்கு

நெல்லியடி, 'மருதம்' கடைக்கு அருகில் 2 சிறுகடைகள் வாடகைக்கு உண்டு. ஒரே கடையாகவும் பாவிக்கலாம்.
தொடர்புக்கு: கு.குலவீரசிங்கம்,
திருமகள் சோதி வீதி (தெக்கிலி),
கரணவாய் மத்தி, கரவெட்டி.
தொ.பே.: 077 9152628 (77082)

## உடன் தேவை

இயங்கக்கூடிய நிலையில் உள்ள கோழிப்பண்ணை தேவை.
தொடர்பு: ஓமக்ஸ் ஹோட்டல்
372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 9926 (77087)


## தவறிவிட்டது

மகாலிங்கம் சுரேஸ்குமார், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய தேசிய அடையாள அட்டை (752983461V) நல்லூர்ப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையில் உள்ள விலாசத்திற்கு ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## விஞ்ஞானபீட மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,ஓக.10

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் 2ஆம், 3ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. ஆரம்ப அறிமுக விழாவில் மாணவர்களைப் பங்குபற்றுமாறு பீடாதிபதி பேராசிரி யர் இ.குமாரவடிவேல் கேட்டுள்ளார்.

(202-119)

## கோப்பாய் லயன்ஸ் கழக ஒன்றுகூடல்

நல்லூர்,ஓக.10

கோப்பாய் லயன்ஸ் கழக ஒன்றுகூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் சி.விஜயநாதனும் கௌரவ விருந்தினர்களாக லயன் எஸ்.ராகவன், யாழ்.மேலதிக அரச அதிபர் லயன் அ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினராக முன்னாள் கல்விப்பணிப்பாளர் ஈ.சிவானந்தனும் கலந்துகொள்வர்.

(202-111)

## கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த சி.எச்.ஏ. நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,ஓக.10

வசதி குறைந்த கர்ப்பிணித் தாய்மாரின் சுகநலன் மேம்பாட்டுக்காக ''ஜீவாகாரம்'' சத்துணவுப் பொதிகளை சி.எச்.ஏ. நிறுவனம் வழங்கி வருகின்றது என்றுநிறுவனத்தின் மாவட்ட பதில் இணைப்பாளர் யே.ஏ.அனுஷன் தெரிவித்தார்.

மூன்று மாதப் பாவனைக்குரிய 5 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதி யான 6 ஆயிரம் சத்துணவுப் பொதிகள் வட பிராந்திய சுகாதார பணிமனைக்கு வழங்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(202-302)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் கமநலசேவை நிலைய ஊழியர்
பொ.பூரணலிங்கம் அவர்களின் அன்புத் தாய்
**பொன்னுத்துரை செல்லம்மா**
அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர், ஊழியர்கள், அனைத்து சம்மேளனங்களும்
**கமநலசேவை நிலையம், உரும்பிராய்.** (77086)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவன்
த.ரவிநாதன் அவர்களின் அன்புத் தந்தை
**கந்தையா தங்கத்துரை**
அவர்கள் 07.08.2008 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு, அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
**யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.** (சி/554099)

## மரண அறிவித்தல்



### திருமதி முத்தாச்சி கனகரத்தினம்

கோப்பாய், கிளுவானை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தாச்சி கனகரத்தினம் அவர்கள் 08.08.2008 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பு - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் செல்லப்பா - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுவாமிநாதர் (உடுவில்), சதாசிவம் (புதுக்குடியிருப்பு), அமுதமணி (கொழும்பு), நாகரத்தினம் (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சோதிப்பிள்ளை, திருமதி நேசமலர், அருணாசலம் ஆகியோரின் மைத்துனியும் இராமநாதன், மனோகரநேரு (நேரு மாஸ்டர்), விக்னராசா (ரஞ்சன்), தவேந்திரன் (ரங்கன்), சண்முதாசன் ஆகியோரின் அன்புத் தாயும் மதிவதனா, புனிதவதி, மலர்வதனி, நாகேஸ்வரி, ஜீவகி ஆகியோரின் அன்பு மாமியும் அபிராமி, அகல்யா, பிரணவன், உமேசன், ஸ்ரீகணன், கிரித்திக்கா, அபர்ணா, கபிலன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
**பிள்ளைகள்.**
24, மூர் வீதி, கொழும்பு - 06.
2503852

(சி/55410)


## கலாலயா

பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

### விடுமுறைக் கால புதிய வகுப்புக்கள்

(11-08-2008 தொடக்கம் 31-08-2008 வரை)

பாடசாலை ஆசிரியைகள், மாணவிகள் மற்றும் மகளிருக்குமானது.

- கூந்தல் அலங்காரம் : பலவகையான கொண்டைகள் போடுதல்
- அடிப்படை Facial அழகுக்கலை மற்றும் மணப்பெண்கள் அலங்காரங்கள்
- பப்றிக் வர்ணம் தீட்டுதல் : கைக்குட்டை, தலையணை உறை, கண்ணாடி மற்றும் சேலையில் (Saree Painting) வர்ணம் டுதல்.
- பூ வேலை, கைவேலை
- சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்
- தையல் தெரியாதவர்களுக்கான அடிப்படைத் தையல்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 11-08-2008 திங்கள் காலை 9.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அண்ணன் அரசாண்டால் தம்பி சண்டப் பிரசண்டன்!

'தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்'- என்றொரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

அதனை நடைமுறையில் இலங்கை மக்கள் இப்போது நேரடியாகவே கண்டறிந்து பட்டுணர்ந்து வருகின்றார்கள்.

அண்ணன்-தம்பி இருவர் மாத்திரமல்லர். நான்கு சகோதரர்கள் அணியே நாட்டை நாசப்படுத்தித் துவம்சம் செய்து வருகின்றமையைக் காண்கிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் உட்பட நாட்டின் முழு ஆட்சி அதிகாரமுமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம். பெயருக்கு நாடாளுமன்றமும் அமைச்சரவையும் வரவு-செலவுத் திட்டத்தின் கீழான எழுபது வீத நிதியைக் கையாளும் பொறுப்பு மஹிந்த ராஜபக்ஷவிடமும், ஏனைய ராஜபக்ஷ சகோதரர்களிடமுந்தான் உள்ளன.

நல்லாட்சி, நீதியை நிலைநாட்டுதல், பக்கச் சார்பற்ற நிர்வாகம், ஊழல்-முறைகேடுகளை ஒழித்தல் போன்ற நன்னோக்கு இலக்குகளை அடையும் எண்ணத்தில் அரசமைப்புக்கு 17 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. நல்லாட்சியை நெறிப்படுத்துவதற்காக அந்தத் திருத்தத்தின் மூலம் பல்வேறு ஆணைக் குழுக்களை அமைக்க வழியும் செய்யப்பட்டது. நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் எல்லாக் கட்சிகளினதும் இணக்கத்துடனேயே அந்தஅரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. அது நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்தார். அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரச் சிறகுகளை வெட்டுவதாக அந்த அரசமைப்புத் திருத்தம் இருந்ததால், அதனை அப்போதே முழுமூச்சில் ஆதரித்து வரவேற்றார் ராஜபக்ஷ.

ஆனால் இன்று அவரே ஜனாதிபதி. இச் சமயத்தில் அந்த அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் தமது அதிகாரம் செல்வாக்கு வெட்டப்படும், தனது சர்வாதிகார போக்கின் வீரியம் குறைக்கப்படும் என்ற காரணத்தால் அத்திருத்தத்தை நடைமுறைப் படுத்தவிடாமல் இடக்குப்போட்டு அதனை முடக்குகின்றார் அவர்.

அரசமைப்பு கவுன்ஸில் ஒன்றை ஸ்தாபிக்கும் படி அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் வலியுறுத்துகிறது. அப்படி அரசமைப்புக் கவுன்ஸில் இயங்கத் தொடங்கினால் தேர்தல், நீதித்துறை, காவல் (பொலிஸ்) துறை, அரச கணக்காய்வுத்துறை ஆகியவை தொடர்பான வழிகாட்டு அதிகாரங்கள் சம்பந்தப்பட்ட துறைசார்ந்த சுயாதீன ஆணைக்குழுவிடம் போய்விடும். இந்த நான்கு துறைகளினதும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளை நியமித்து அவர்களை வழிகாட்டும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருந்து பறிக்கப்பட்டுவிடும். இதனால் இத்துறைகளை தம் விருப்பப்படி நடத்திச் சீரழிக்கும் வாய்பை ஜனாதிபதி இழந்துவிடுவார்.

இதன்காரணமாகவே அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு ஆள்களை நியமித்து அதனை முறைப்படி இயங்கவைக்காமல் காலத்தை இழுத்தடித்து வருகிறார் ஜனாதிபதி.

ஜனாதிபதியின் இந்த விட்டேத்தியான போக்கை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. முதல் தடவையாக, ஜனாதிபதி ஒருவரின் பெயர் குறிப்பிட்டு, அவரை பிரதிவாதியாகப் பிரேரித்து தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளதோடு, ஜனாதிபதிக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பிக்கவும் உத்தரவிட்டிருக்கிறது.

நீதிமன்றத்துக்கான விண்ணப்பம் மூலம், நியாயம் நிலைநாட்டப்பட்டு, அதன் வாயிலாக அரசமைப்புக் கவுன்ஸில் இயங்க வைக்கப்படுமாயின், அதனால் ஜனாதிபதியின் சர்வாதிகாரத்தில் கணிசமான இடிவிழ வாய்ப்புண்டு.

அப்படி இல்லாதவரை 'மஹிந்த அண்ட் பிறதர்ஸ்' கூட்டுக் கம்பனியின் நாட்டை குட்டிச்சுவராக்கும் திட்டம் வெற்றிகரமாகவே தொடர்ந்து அரங்கேறும்.

தென்னிலங்கையில் சகல ஒப்பந்த வேலைகளை யும் திட்டங்களையும் தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதி மஹிந்தவின் மூத்த சகோதரர் அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம்.

கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்கள் என்ற பெயரில் சகல நிதிச்செலவினங் களையும் கையாளும் அதிகாரம் இளைய சகோதரரும், ஜனாதிபதியின் ஆலோசகரும், எம்.பியுமான பஸில் ராஜபக்ஷவிடம்.

பாதுகாப்பு, யுத்தம் ஆகியவற்றின் பெயரால் நாட்டைச் 'சுத்தும்' அதிகாரமும் பொறுப்பும் மற்றொரு தம்பியான கோத்தபாய ராஜபக்ஷவிடம்.

இப்படி சகோதரர்களின் சர்வாதிகாரம் நாட்டையே அதல பாதாளத்தில் தள்ளிவிடும்.

அதிலும் பாதுகாப்புத் துறையில் கோத்தபாயவும், அரசியலில் பஸிலும் பண்ணும் அதிகாரத்தனத்துக்கு அளவே இல்லை.

போதாக்குறைக்கு, இந்தச் சகோதரர்கள் அணிக்கு காவடிதூக்கியபடி மேர்வின் சில்வா போன்ற தரப்புகள் பண்ணும் அட்டகாசங்கள்.

இந்த அரசியல் அராஜகங்களைப் பார்க்கும் போது 'தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்ற முதுமொழி 'அண்ணன் அரசாண்டால் தம்பி சண்டப்பிரசண்டன்!' என்று மாறிவிட்டதோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இந்த அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தும் அரசியல் வரன்முறைகளை நடைமுறைப்படுத்த - விரைந்து செயற்படுத்த - இலங்கை தவறுமானால் நாடு முற்றாகச் சீரழிவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

# விவசாய, விலங்கு வேளாண்மை கண்காட்சி செவ்வாய் முதல் மூன்று இடங்களில்

யாழ்ப்பாணம், ஓக. 10

விவசாய திணைக்களத்தின் விரிவாக்கம், ஆராய்ச்சி ஆகிய பிரிவுகளுடன் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் ஆகியன இணைந்து நடத்தும் 'விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி - 2008' நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக் கிழமை வரை நடைபெறுகின் றது.

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம் ஆகிய மூன்று இடங்களில் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

காலை 9மணி முதல் மாலை 4.30 மணிவரை இக்கண்காட்சி நடைபெறும்.

12ஆம் திகதி நடைபெறும் ஆரம்ப வைப வத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.பல்கலைக் கழக விவசாய பீடாதிபதி கலாநிதி திருமதி சி.சிவச் சந்திரன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே. தி.செல்வரத் தினம், பிரதி விவசாயப்பணிப்பாளர் (ஆராய்ச்சி) எஸ். கே.அரசகேசரி, கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்த லிங்கம், வேல்ட் விஷன் நிறுவன மாவட்ட இணைப் பாளர் ரி.எம். வசந்த நாயகம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் கலந்து கொள்வார்கள். (50)

# சங்கக்கார சதம் அடித்து அசத்தினார்; இலங்கைஅணி வலுவான நிலையில்



கொழும்பு, ஓக. 10

இலங்கை- இந்திய அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இரண்டாம் நாளான நேற்று சங்கக்கார சதம் அடித்து இலங்கை அணியை வலுவான நிலைக்கு கொண்டு சென்றார்.

இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கும் போது ஒரு விக்கெட்டை இழந்து 14 ஓட்டங்களுடன் இருந்த இலங்கை அணி ஆட்ட நேர முடிவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தியா முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றிருந்தது

மூன்றாம்நாள் ஆட்டம் இன்று தொடர்கிறது. (1)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக 10

நீர்வேலி ஸ்ரீ கணேச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப 1.30 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் அதன் தலைவர் ச.க.முருகையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கிறார். (1)

* * *

வலிவடக்கு, ஓக 10

யாழ்ப்பாணம் குருநகர் சென்.றோக் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாண உதைப்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தி வரும் 07பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப4.00 மணிக்கு சென்றோக் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

* உரும்பிராய் சென்மைக்கல் வி.க. அணி எதிர் சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் வி.க. 'ஏ' அணி.

* யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்.நீக்கிளஸ் வி.க. 'ஏ' அணி எதிர் ஞானமுருக்ன் வி.க. 'ஏ' அணி. (1-86)

* * *

மந்திகை, ஓக. 10

மாலிசந்தி, மைக்கல் விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்திவரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட் டங்களின் விவரம் வருமாறு:-

* பி.ப 3.30மணி - வாதிரி டயமன்ஸ் வி.க. எதிர் கொற்றாவத்தை சிவானந்தா வி.க.

* மாலை 4.30மணி - வதிரி பொமோர்ஸ் வி.க. எதிர் நவிண்டில் கலைமதி வி.க.

* * *

யாழ்ப்பாணம், ஓக 10

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தால் வீ.டி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் வி.க. வும் பற்றீஸியன் வி.கவும் மோதுகின்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளருமான பி.ஏ. அருமை நாயகம் கலந்து கொள்வார். (1)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 27 | 11.08.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ. 08.39 வரை |
| நட்சத்திரம் : | கேட்டை முழுவதும் |
| சுபநேரம் : | 12.04 - 01.34 |
| ராகுகாலம் : | 07.34 - 09.04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில தினவிழா

'பிரிட்டிஷ் பிஸ்னஸ் ஸ்கூல்' இன் ஆங்கில தினவிழாவும் கலை விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளன. யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழிப் பகுதிப் பீடாதிபதியும் விரிவுரையாளருமான எஸ்.சுந்த ரேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும். (202)

# முகாமைத்துவ பீடத்தின் வகுப்புக்கள் நாளை ஆரம்பம்

தொல்புரம், ஓக. 10

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சகல ஆண்டுகளுக்குமான வர்த்தக, முகாமைத்துவ பீடங்களுக்கான இரண்டாவது அரையாண்டிற்கான வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. (202-119)

# பண்டத்தரிப்பில் 31 மீனவக் குடும்பங்களுக்கு சி.எச்.ஏ.நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,ஓக10

மீன்பிடித்தடை காரணமாக பண்டத்தரிப்பில் தொழில் இழந்துள்ள 31 குடும்பங்களுக்கு சி.எச்.ஏ.அமைப்பு வாழ்வாதார உதவியை வழங்கி வருகின்றது.

கோழி வளர்ப்பதற்கான உதவிகள் 11 குடும்பங்களுக்கும் ஆடு வளர்ப்பிற்கான உதவிகள் 5 குடும்பங் களுக்கும் பசு வளர்ப்பிற்கான உதவிகள் 6 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

8 குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களும் ஒரு குடும்பத்திற்கும் குடிசைக் கைத்தொழில் செய்வதற்கான நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளன என நிறுவனத்தின் பிராந்திய இணைப்பாளர் தெரிவித்தார். (202-302)

# கணிதபாட செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக 10

யாழ்.வலயப் பாடசாலைகளின் தரம் 11 மாணவர்களுக்கான கணித பாட விசேட செயல்திட்டம் தொடர்பான கந்துரையாடல் இன்று பி.ப 2மணிக்கே நடைபெறும் என வலயக் கல்வி அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடல் காலை 9 மணிக்கு நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (202)

# தரம்-5 மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக 10

யாழ்.வலயப் பாடசாலைகளின் தரம் 5புலமைப்பரிசில் மாதிரி முன்னோடிப் பரீட்சை இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

விடைத்தாள் மதிப்பீடு நாளை திங்கட் கிழமை இடம்பெறும் என வலயக்கல் விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

# இறைவனின் தனிப்பெரும் கருணை

நடுக்கடலில் நடந்து வரும் யேசு சீடர்களின் கண்களுக்குப்படுகிறார். அச்சம் மேலிட்டவர்களாய் சீடர்கள் அலறுகின்றார்கள். ஏற்கனவே அலைகளோடு போராடிய களைப்பு, காற்றால் அலைக்களிக்கப்பட்ட சோர்வு அனைத்தும் சேர்ந்து அவர்களை ''ஐயோ பேய்'' என்று அலற வைக்கின்றது. ''அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்பார்கள். இது சீடர்களின் இக்கட்டான சூழ்நிலையை மட்டுமல்ல நம் ஒவ்வொருவரின் வாழ்வுச் சூழலை உணர்த்துகின்றது.




வாழ்விலும் துன்பக்கடலில் பலர் சிக்குண்டு தவிக்கின்றனர். வறுமை, அறியாமை, செல்வாக்கு இன்மையால் நிராகரிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் அச்சம், பீதி, மரணப்பயம், அச்சுறுத்தல்கள், கடத்தல்கள்... போன்றவற்றால் சாதாரண ஒரு ஜீவப்பிராணியாகக் கூட வாழ இயலவில்லை. அச்சமும், இருளும் சூழ்ந்த வாழ்விலே ''அஞ்சாதீர்'' என ஒரு குரல் எழும்புகின்றது. அக்குரலின் சொந்தக்காரன் தான் இயேசு. ஆனால் அழுத்தப்பட்டும், நெரிக்கப்பட்டும் வாழும் மக்களுக்குஅச்சம் தவிர்க்க வரும் குரலும் அடிக்கவரும் குரல்போல் தோன்றுகிறது.

இயேசு ''துணிவோடிருங்கள் நான்தான்'' என்கிறார். எனினும் பேதுரு அது யேசுதானா என்று அறிய விரும்பி கடல்மேல் நடக்க விரும்புகிறார். இயேசுவும் அவரைக் கடல்மீது நடந்துவர அழைக்கிறார். அலைகளைக் கண்டு அஞ்சவே இயேசு கையை நீட்டி காப்பாற்றுகிறார். சிறு பிள்ளைத்தனமான ஆசையாக இருந்தாலும் பேதுருவின் அச்சத்தைப் போக்க அனுமதித்தார்.

''என் ஆயன் ஆண்டவர். எனக்கென்ன குறை! இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் தீமையானது எதற்கும் அஞ்சேன், ஏனெனில் நீர் என்னோடு இருக்கின்றீர். உமது கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன.'', இயேசு நம்மிடமும் உறவு கொண்டாட விரும்புகிறார். நாமும் அவரது அன்பினை சுவைத்து உணர்ந்திருக்கின்றோமா? ''ஆண்டவர் எவ்வளவு இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்.

- நசரேன்.

# ஷெல் வீச்சில் காயமுற்ற முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு

முல்லைத்தீவு ஆஸ்பத்திரி வளாகம் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்ட ஷெல்தாக்கதலில் காயமடைந்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமார் மேலதிக சிகிச் சைக்காக நேற்று கொழும்பு சென்றுள்ளார்.

ஷெல் சிதறல்கள் அவரது கையில் தாக்கியதால் ஏற்பட்ட காயத்துக்கு மேலதிக சிகிச்சை பெற்றுக்கொள்ளவே அவர் கொழும்பு சென்றதாகக் கூறப்பட்டது.

அவர் இன்று கொழும்பு சென்றடைந் ததும் உடன் சிகிச்சை பெறவிருக்கிறார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் வீச்சு தொடர்பாக அவர் அரச உயர் அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பார் என்று முல்லைத்தீவு செயலக வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

வெளிநாட்டில் பணியாற்றும் அவரது கணவர் எஸ்.சுகுமார் மனைவியின் உடல் நிலையை கண்டறிவதற்காக இன்று கொழும்பு விரைவதாகவும் ஒருதகவல் தெரிவித்தது.

## மருமாதா அன்னை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு வைக்கப்பட்டி ருந்தது.

மன்னார் ஆயர் அதிவண.ராயப்பு ஜோசெப் ஆண்டகையும் குருமுதல்வர் வண. விக் டர் சூசையும் திருச்செருபத்தை மடுத்திருத்தலத் துக்கு நேற்று மாலை எடுத்துச் சென்றனர்.

நாளை திருத்தலத்தில் இடம்பெறும் புனிதப்படுத்தல் சடங்கின் பின்னர் வழி பாடுகள் நடைபெறும்.

எவ்வாறாயினும் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவேண்டிய வருடாந்தத் திரு விழா நடைபெறமாட்டாது என்று யாழ். ஆய ரின் செயலாளர் வண. றொசான் அடி கள் நேற் றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (அ-1)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளி, சனிக்கிழமைகளில் நடை பெற்ற கடும் மோதல்கள் குறித்து விடுத லைப்புலி கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:

வவுனியா வடக்கில் உள்ள பால மோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் வரை யான பகுதிக ளில் மூன்று முனைகளில் சிறிலங்காப் படை யினர் வெள்ளி மற்றும் சனிக்கிழமை மேற் கொண்ட முன்நகர்வுகள் தமிழீழ விடு தலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள் ளன. இதில், 15படையினர் கொல்லப்பட் டுள்ளனர். 29பேர் காயம டைந்துள்ளனர்.

பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் வரையான பகுதிகளில் சனிக்கிழமை காலை 7.10 மணிமுதல் மாலை 6 மணி வரை மூன்று முனைகளில் சிறிலங்காப் படையி னர் செறிவான எறிகணைச் சூட் டாதரவுடன் முன்நகர்வுநடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் தீவிர எதிர்த் தாக்குதல்களின் மூலம் அந்த முன்நகர்வு கள் முறியடிக்கப்பட்டன.

இதில், 11படையினர் கொல்லப்பட்டுள் ளனர். 20படையினர் காயமடைந்துள்ளனர். படையினரிடமிருந்து படைப்பொருள்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இப்பகுதியில் நேற்று முன்தினம் (வெள் ளிக்கிழமை) மூன்று முனைகளில் படையி னர் மேற்கொண்ட முன்நகர்வுகள் விடுத லைப்புலிகளால் முறியடிக்கப்பட்டன.

இதில், நான்கு படையினர் கொல்லப் பட் டனர். ஒன்பது பேர் காயமடைந்தனர். - என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - படைத்தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை நோக்கி முன்னேறும் படையின ருக்கும் விடு தலைப் புலிகளுக்கும் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) காலை முதல் கடும் மோதல்கள் இடம்பெற்றன. இந்த மோதலில் புலிகளின் இரண்டு முன்னரங்குகளை படை யினர் கைப்பற்றினர். தொடர்ந்து படையினர் முன்னேறிச் சென்றுகொண்டிருக் கின்றனர்.

தென்னாயன் குளம், மல்லாவி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். ஒன் பது படையினர் காயமடைந்தனர்.

இந்த மோதல்களில் 20 புலி உறுப்பி னர்கள் கொல்லப்பட்டனர் - என்று உள்ளது. (அ-1)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத் தாக்குதலில் 12 வீடுகள் சேதம டைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு ஆஸ்பத்திரி வளாகப் பகுதி மீது மேற் கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் குழந்தை ஒன்று மரணமானதும் அரச அதி பர் உட்பட 18 பேர் காயமடைந்ததும் தெரிந் தவையே.

இதேவேளை-

புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய இடங் களில் விமானப்படையினர் வான் தாக்குத ல்களை மேற்கொண்டனர் என்று படைத்த ரப்பு தெரிவித்தது.

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள விடு தலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முகாமை நேற்று காலை 9.55 மணியள வில் தாக்கி அழித்ததாகவும்-

அதன்பின் விசுவமடுவில் உள்ள பிர தான விடுதலைப் புலிகளின் விநியோக முகாம் தாக்கி அழிக்கப்பட்டதாகவும் படைத் தரப்பு மேலும் தெரிவித்தது. (அ-1)

## 'டாடா' காரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தின் பேரில் விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்கள் எனக் கூறப்படும் சிலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினமும் மேலும் 6 இலங் கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருமங்கலம் பகுதியில் வாகனச் சோத னையில் ஈடுபட்ட பொலிஸார் 'டாடா சுமோ' ரகக் காரில் பயணம் செய்து கொண் டிருந்த 6 இலங்கைத் தமிழர்களைக் கைது செய்துள்ளனர்.

அவர்களைத் தீவிர விசாரணை நடத் திய பொலிஸார் அவர்களுக்கும் விடு தலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்பு இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து வரு கின்றனர் என்று பொலிஸ் தரப்பில் தெரி விக் கப்பட்டது. (அ-1)

## எமது படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக விரைவில் இந்த நாட்டில் நிலவும் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்து விடுவோம். விடுதலைப்புலிகளு டன் சமரிட்டு வரும் எமது படையினர், அவர்களை தடுமாற செய்திருக்கின்றனர். தீர்க்கமான முடிவு ஒன்றை மேற்கொள்ள வேண்டிய இந்தக் காலகட்டத்தில் அரசுக்கு ஆதரவளிக்க வேண்டியது ஒவ்வொரு பிரசையினதும் கடமையாகும் - என்றார்.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டு அங்கு மரணமானார்.

அவர் திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து வன்னேரியில் வசித்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் குடியிருப்புக்களை நோக்கி படையினர் மேற் கொண்ட ஷெல் தாக்குத லில் மக்களின் உடைமைகளும் சேதமா கின. (1)

## குடும்பி மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் அங்கு தரையிறங்கிய ஹெலி மூலம் சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப் பட்டனர் என்றும் - விடுதலைப்புலிகள் அறிவித் துள்ளனர்.

இதேவேளை -

இந்த தாக்குதலினால் ஏற்பட்ட சேதம் தொடர்பாக எந்த அறிவிப்பும் படைத்தரப் பில் இருந்தும் வெளியாகவில்லை.

எனினும், நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பாவடிக் கொடிச்சேனைப் பகுதியில் தேடு தல் நடத்திய படை யினர் 15 கிலோ நிறையுடைய குண்டு ஒன்றையும் 22 கிர னேட்டுக்களை யும் 19,500 ரி56 ரவை களையும் மற்றும் பொருள்களையும் மீட்டுள்ளனர் எனப் படைத்தரப்புத் தெரி வித்துள்ளது. (அ-1)

# பண்டிதர் மயில்வாகனனார் நேற்றுக் காலமானார்

யாழ்ப்பாணம், ஓக.10

யாழ்ப்பாணத்தின், மதுரைப் பண்டிதர் பரம்பரையைச் சேர்ந்த மற்றொரு புல மையாளரான வட்டுக்கோட்டையூர் பண் டிதர் க.மயில்வாகனனார் நேற்றுத் தமது 89 ஆவது வயதில் காலமானார்.

சிறந்த இலக்கியப் பணியாற்றிய அவர், அதன் பல அங்கங்களிலும் மிகுந்ததேர்ச்சி பெற்றவர். இலக்கியக் கட்டுரை நூல்கள், மாணவர்களுக்கான சைவ மற்றும் தமிழ் பாட நூல்கள், தல புராணங்கள், ஊஞ்சல், அம்மானை, பிள்ளைத்தமிழ் ஆகிய இலக் கிய வடிவங்களைக் கொண்ட முப்பதுக் கும் மேற்பட்ட செய்யுள் இலக்கியங்க ளைப் படைத்தவர். திருக்குறள், திருவருட் பயன், கந்தர் கலிவெண்பா ஆகிய நூல்க ளுக்கு உரை கண்டவர்.

நாட்டின் பல இடங்களிலும் ஆசிரிய ராகவும் அதிபராகவும் பணியாற்றிய இவர் சிறந்த பேச்சாளருமாவார்.

உதயனின் வார இதழ் சஞ்சீவியில் 'சிகண்டியார்' என்ற புனைபெயரில் இலக் கிய பத்தி ஒன்றை தொடராக எழுதி வந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை வட்டுக்கோட்டை மேற் கில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெறும். (அ)

## மக்கள் நலனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண் டும் என்று அவர் கேட்டுக் கொண் டார்.

ஜனாதிபதி என் மீது வைத்துள்ள நம் பிக்கைக்குப் பத்திரமாகச் செயற்பட்டு, மக் களின் வாழ்க்கை நிலையை உயர்த்த உழைப்பேன். மக்களின் நலனுக்காக எந்த வித சவாலையும் எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அவர்களின் வாழ்வை மேம் படுத்துவதே எனது முக்கிய நோக்கமாகும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-01)


ELITE
School of Technology
Computer Training Center
கணனி பயிற்சி நிலையம்



புதிய பிரிவுகள் ஆரம்பம்

New Bathes Start From : 16, 17- 08 - 2008 Ist Batch
: 23, 24 - 08 - 2008 IInd Batch
: 30, 31 - 08 - 2008 IIIrd Batch

Diploma in Microsoft Office 2003
(Word, Excel, Power Point, Access)
Diploma in Desk Top Publishing
(Paint, Photo Shop, Page Maker, Coral Draw)
Multimedia Application
(Premier PRO, After FX, Sound Forge Pinnacle Studio Plus, Cool 3D)
Computer Hardware & NET Working
(PC Hardware & Software Trouble Shooting, Peripherals trouble Shooting)
WEB Designing
(HTML Script, Dreamweave, Flash Max, Front Page, Gif Animator)
மேலதிக விபரங்களுக்கு:
More Information:
ELITE
School of Technology
Main Street, Atchuvely
Mob: 0777173725. WWW.elitelanka.com



சுடர் ஒளி
THE SUDAR OLI
வாரமலர்
ஆகஸ்ட் 03-09,2008

இப்போது விற்பனையாகிறது

- விடுதலைப் புலிகளைத் தடை செய்வித்த அரசு இன்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் மாட்டியுள்ளது.
- 'சார்க் மாநாட்டை ஒட்டி வெட்டப்பட்ட வன்னித் தொலைபேசி - நோக்கம் என்ன?
- 2000 இல் புலிகள் அறிவித்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம்
- தமிழகத்தில் பா.ம.க. - தி.மு.க. மீண்டும் மோதல்
- மனிதனுக்குள் ஒரு மிருகம் (பிரபல தமிழக எழுத்தாளர் மதன் எழுதுவது)
- ஈழத் தமிழ் பத்திரிகை உலகின் தன்னிகரற்ற ஜாம்பவான் எஸ்.டி. சிவநாயகம் எழுதிய 'நான் கண்ட பாரதி' தொடர் கட்டுரை
- எதிர்பார்ப்பை தூண்டியுள்ள ரஜனியின் 'குசேலன்'
- பரமார்த்த குரு கதைகள் (தொடர்)
- புலிவேட்டைக்குப் போய் புதைந்துபோன வரலாறு (பழ.நெடுமாறன் எழுதியது)

மற்றும் வழமையான பல்சுவை அம்சங்கள்
உங்கள் உதயன் முகவரிடம் கேட்டு வாங்குங்கள்
விமானக் கட்டண விலை: ரூபா 35/=



THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY - 2010
புதிய பிரிவு ஆரம்பம்
உயிர்பல்வகைமை
ஆரம்பம் - 11.08.2008
Mon. - 2.30 - 4.00 p.m.
சு.பொன் திவாகரன்



காணி விற்பனைக்கு

சிவன்கோயிலடி, தும்பளை வீதியில் 3/4 பரப்பு காணியுடன் கட்டிய குறை யில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: சு.நந்தகுமாரன்
தும்பளை வீதி, பருத்தித்துறை.
T.P. 0773146059, 2263664.



அட்சயா
மகளிருக்கு ஓர் அரியவாய்ப்பு
[அரவிந் ஸ்ருடியோவிற்கு அருகில்]
சலுகைக் கட்டணத்தில்

பயிற்சி நெறிகள் இரு பிரிவுகளாக
ஆரம்பம்:- 1) 20.08.2008 2) 23.08.2008

Facial, Bridal Make up, Hair Style (தலைமுடி சுருட்டுதல், தலை முடி அயன் பண்ணுதல்), Cake Icing (30விதமான ஐசிங் பூக் கள்), பெயின்டிங்(3 விதமான சாறிவேக்), கைவேலை (டெலி பியர் பொம்மை, நாய்க்குட்டி செய்தல்), பூவேலை(பூச்செண்டு அமைத்தல்)

மேலதிக விவரம் நேரில். 20.08.2008 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்து கொள்ளும் மகளிருக்கு
கவர்ச்சிகரமான கட்டணச் சலுகை வழங்கப்படும்.
பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
அட்சயா அழகுக் கலை பயிற்சியகம்
461, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



வெளிவந்து விற்பனையாகிறது



சைவ சித்தாந்தமும் கலையும்
பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் A/L இந்து நாகரிகம், இந்து சமயம் கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உகந்தது.

சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்,
ஆசிரியர் செல்வி தயாளினி நவநீதகிருஷ்ணன்
B.A.(Hons)., Jaffna,
M.A.(Tamil University, Thanjavur),
Dip.in Saivasiddhanta (Annamalai University),
P.G.Dip.in Temple Arts(Karakkudi Alagappa University).
விலை 300.00

கிடைக்கும் இடங்கள்:
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்
சுப்பிரமணியம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
Book Lab - பரமேஸ்வராச் சந்தி
நர்மதா புத்தகசாலை - சுன்னாகம்
செல்லாச்சி புத்தகசாலை - பருத்தித்துறை
சிதம்பரப்பிள்ளை புத்தகச்சோலை - நெல்லியடி
மங்கோ புத்தகசாலை - கொக்குவில்
நயகபாலன் புத்தகசாலை - மானிப்பாய்


## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண பொது நிர்வாக செயலகத்தில் உதவிச் செயலாளராகக் கடமையாற்றும்
பா.ஜெயகரன்
அவர்களின் தந்தை
மாசிலாமணி பாலசுந்தரம்
அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக் குகிறோம்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

நண்பர்கள்:
ச.பாலரூபன், ம.அ.ஜெயசிங்கம்,
அ.கிருபாகரன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I







விசேட பரீட்சை வெளியீடு - 06

ஆசிரியர்:-
திரு.சண்.சுதர்சன்
(குறிஞ்சி வெளியீடு),
மதீனா தேசிய பாடசாலை, கண்டி.

Model Examination For Grade Five Students for Selection to School and for the Award of Bursaries, August 2008

...வர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஒகஸ்ட் 2008

## வினாத்தாள் - I

மாணவர் சுட்டெண்:- ............................ நேரம்:- 45 நிமிடங்கள்

01. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை அவற்றின் இயல்புக்கு ஏற்ப மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.





இக்கூட்டங்களை சரியாகக் காட்டும் விடை
1) B, D / A, F / C, E    2) A, D / C, E / B, F    3) A, E / B, C / D, F


02. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை அவற்றின் இயல்புக்கு ஏற்ப மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக்கூட்டங்களை சரியாகக் காட்டும் விடை
1) A, E / B, D / C, F    2) D, E / A, F / B, C    3) A, C / D, F / B, E

3ஆம், 4ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று ஏனையவற்றிலிருந்து வேறுபடுகிறது. வேறுபடும் உருவின் கீழ்க் கோடிடுக.

03. 


04. 


5ஆம், 6ஆம் வினாக்களில் திருத்தமான கருத்தை தரும் வாக்கியத்தை தெரிவு செய்துக.

05. 1) பெண்கள் அறுவடை செய்த நெல்லை சூடு மிதித்தனர்.
2) பெண்கள் சூடுமிதித்த நெல்லை அறுவடை செய்தனர்.
3) நெல்லை சூடுமிதித்து அறுவடை செய்தனர் பெண்கள்.

06. 1) மின்மணி பயன்படுத்தும் பொருட்களும் மின்காந்தமும் ஒன்றாகும்.
2) மின்மணியும், மின்காந்தமும் பயன்படுத்தும் பொருட்களுள் ஒன்றாகும்.
3) மின்காந்தமும் பயன்படுத்தப்படும் பொருட்களில் மின்மணியும் ஒன்றாகும்.

07. வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்கள் விரும்பும் நிறங்கள் தொடர்பான விவரம் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன்படி சரியான கூற்றைத் தெரிவு செய்க.




1) நீல நிறத்தை விரும்பும் மாணவர்களின் 2 மடங்கினர் பச்சை நிறத்தை விரும்புகின்றனர்.
2) மஞ்சள் நிறத்தையும், நீல நிறத்தையும் சம எண்ணிக்கையாக மாணவர்கள் விரும்புகின்றனர்.
3) அதிகமான மாணவர்கள் சிவப்பு நிறத்தை விரும்புகின்றனர்.

08.
```
A  B
A  B
   B
-----
B  B
```
தரப்பட்டுள்ள கூட்டல் செய்கையில் எண்களுக்குப் பதிலாக ஆங்கில எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. A, B ஆகிய எழுத்துக்கள் குறிக்கும் எண்கள் முறையே
1) 2, 5    2) 3, 6    3) 4, 5

09. பன்னசாலை எனப்படுவது,
1) பழமை வாய்ந்த பொருட்களை சேகரித்து வைக்குமிடம்.
2) பொருட்களை, பண்டங்களை சேகரித்து வைக்குமிடம்.
3) இலை, குழைகளால் வேயப்பட்ட குடிசை.

10. எனது வகுப்பு மாணவர்களில் பெரும்பாலானவர்கள் துவிச்சக்கரவண்டி ஓடக்கூடியவர்கள். இதன்படி கூறக்கூடிய சரியான கூற்று
1) எனது வகுப்பில் துவிச்சக்கரவண்டி ஓடத் தெரியாத மாணவர்களும் உள்ளனர்.
2) எனது வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் துவிச்சக்கரவண்டி ஓடக் கூடியவர்கள்.
3) எனது வகுப்பில் உள்ள மாணவர்களில் சிலர் மோட்டார் சைக்கிள் ஓடக் கூடியவர்கள்.



கிரிக்கற், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய மூன்று போட்டிகளும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட நாட்கள் தொடர்பான விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| முதல் 2 நாட்கள் | - கிரிக்கட் |
| அடுத்த 3 நாட்கள் | - கரப்பந்தாட்டம் |
| இறுதி 2 நாட்கள் | - உதைபந்தாட்டம் |

11. உதைபந்தாட்டம் நடைபெற்ற இறுதி நாள் புதன்கிழமை எனின், கிரிக்கட் நடைபெற்ற இரு நாட்களும் முறையே
1) புதன், வியாழன்.    2) வியாழன், வெள்ளி.    3) செவ்வாய், புதன்.

12. கிரிக்கட் நடைபெற்ற முதலாவது நாள் 20ஆம் திகதி எனின், உதைபந்தாட்டம் நடைபெற்ற இறுதிநாள் எத்தனையாம் திகதி ஆகும்?
1) 26ம் திகதி.    2) 27ம் திகதி.    3) 28ம் திகதி.

கீழே தரப்பட்டுள்ள பொருட்களின் விலைகளின் உதவியுடன் 13ஆம், 14ஆம் வினாக்களுக்கு விடைதருக.

| | |
|---|---|
| அடிமட்டம் | 2 |
| கொப்பி | 1 |
| விலை | 52.00 |

| | |
|---|---|
| அடிமட்டம் | 1 |
| கொப்பி | 1 |
| விலை | 37.00 |

13. அடிமட்டம் ஒன்றின் விலை யாது?
1) ரூபா 12.00.    2) ரூபா 18.00.    3) ரூபா 15.00.


14. 3 அடிமட்டமும் 2 கொப்பியும் வாங்கத் தேவையான பணம் யாது?
1) ரூபா 89.00.    2) ரூபா 79.00.    3) ரூபா 74.00

15ஆம், 16ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட இரு சொற்களுக்கிடையிலான தொடர்பை அவதானித்து மூன்றாவது சொல்லுக்குரிய சோடிச்சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.


15. | கரையோரச்சமவெளி - குடா | அண்சமவெளி - ..........................
1) களப்பு.    2) முனை.    3) எச்சக்குன்றுகள்.

16. | நதி - களனி | மின்னேரியா - ..........................
1) நீர்வீழ்ச்சி.    2) குளம்.    3) நீர்தேக்கம்.

17. இவ்வுருவை மடித்து ஒட்டுவதால் பெறப்படும் திண்ம வடிவம் யாது?




குடும்ப உறவுமுறை வரிப்படம் ஒன்று அருகே தரப்பட்டுள்ளது.





18. C யின் பேரனாக இருக்கக் கூடியவர் யார்?
1) M    2) T    3) Z

19. K யின் மருமகனாக இருக்கக் கூடியவர் யார்?
1) Z    2) R    3) T

20. எனது உண்டியலில் மூன்று வகையான 18 நாணயங்கள் இருந்தன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 46 ஆகும். உண்டியலில் இருக்கும் நாணயங்கள் எவை?
1) ரூபா 5 நாணயங்கள் 5, ரூபா 2 நாணயங்கள் 7, ஒரு ரூபா நாணயங்கள் 6.
2) ரூபா 5 நாணயங்கள் 6, ரூபா 2 நாணயங்கள் 5, ஒரு ரூபா நாணயங்கள் 7.
3) ரூபா 5 நாணயங்கள் 6, ரூபா 2 நாணயங்கள் 4, ஒரு ரூபா நாணயங்கள் 8.

21. உருவில் உள்ள அடைப்பிற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





22. கலாஜோதி ஆனந்தகுமாரி செய்த சேவைகளில் ஒன்றைத் தெரிவு செய்க.
1) கொழும்பு பௌத்த வாலிபர் சங்கத்தை அமைத்தவர்.
2) பாகிஸ்தானிய இலங்கைக்கான தூதுவராக கடமையாற்றினார்.
3) மத்திய கால சிங்கள கலைகள் என்ற நூல் மூலம் இலங்கை கலைபற்றி உலகறிய செய்தார்.

23. பிள்ளை ஒன்று தான் கல்விச்சுற்றுலா சென்றமை பற்றிக் கூறிய விடயங்கள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன. இதனை ஒழுங்கு முறையாகத் தரும் விடையை தெரிக.

A - பின்னவல யானைகள் சரணாலயத்தில் மாலைவேளை யானைகள் குளிப்பதை பார்த்தோம்.
B - பேராதனை பூங்காவில் காலை ஆகாரம் உண்டோம்.
C - பாடசாலை நோக்கிவரும் போது எமக்கு பெரும் கவலையாக இருந்தது.
D - நண்பகல் நாங்கள் எம்பக்க தேவாலயத்தில் நின்றோம்.
E - பாடசாலையில் இருந்து மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி புறப்பட்டோம்.

1) E,B,D,A,C    2) E,A,B,D,C    3) E,B,A,D,C


24. நிழற்றிய உருவின் பரப்பளவு 24 சதுர cm எனின், A யின் பரப்பளவு யாது?




1) $8cm^2$    2) $16ccm^2$    3) $20cm^2$



25. தரப்பட்டுள்ள உருவை அம்புக்குறி காட்டும் திசை வழியே பார்க்கும்போது தோன்றும் உருவைத் தெரிவு செய்க.




26. யாதாயினும் ஓர் எண்ணை நினையுங்கள். அதனை இரண்டால் பெருக்குங்கள். மேலும் அதனுடன் 32 ஐக் கூட்டுங்கள். வரும் விடையை இரண்டால் பிரியுங்கள். நீங்கள் நினைத்த எண்ணை கழியுங்கள், இப்போது உங்களுக்கு கிடைக்கும் விடை
1) 14.    2) 16.    3) 20.

27. அருகில் காணப்படும் உருவுடன் தொடர்புடைய மன்னன்.



1) தாதுசேனன்.
2) காசியப்பன்.
3) பண்டுகாபயன்.

28. தரப்பட்டுள்ள உருவை நன்கு விவரிக்கும் சொற்கள் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.



1) மகிழ்ச்சி - தேசிய விளையாட்டு - சுறுசுறுப்பு.
2) உடற்பயிற்சி - 16 பேர் - பொழுதுபோக்கு.
3) மகிழ்ச்சி - முரளிதரன் - 11 பேர்.

29. மரகதம் என்ற சொல்லை குறிக்க பொருத்தமான குறியீட்டை தெரிவுசெய்க.


1) △□○❋⌘    2) ⌘△○⌘△    3) □○▣❋□

30. சிறு வயதில் பழகும் பழக்கம் பெரியவரானாலும் நிலைத்திருக்கும் என்பதற்கு பொருத்தமான பழமொழி.
1) சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.    2) வளரும் பயிரை முளையிலே தெரியும்.
3) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.

31. மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் போல பேருந்திற்கு.
1) டீசல்.    2) பெற்றோல்.    3) ஒயில்.

32. பாடசாலைக்கு அதிபர் போல வங்கிக்கு.
1) தலைவர்.    2) முகாமையாளர்.    3) காசாளர்.

33. மாகாணம் - மாவட்டம் - நகரம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுக.




34. கீழே உள்ள சட்டக் காந்தங்களில் தள்ளும் தன்மை கொண்ட காந்தங்கள் அடங்கிய விடையின் கீழ் கோடிடுக.

1) | S N | N S |    2) | S N | S N |

3) | N S | N S |

35 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

35. | ப து ய ம் ம / எ க ரா வி க் | இங்குள்ள எழுத்துக்களை பயன்படுத்தி இலங்கையில் உள்ள கலைத்துவப் படைப்பு ஒன்றின் பெயரை எழுதுக. (..............................)

36. பின்வரும் புதிரில் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.
விடிவில் உண்டு வடிவில் இல்லை
வேசியில் உண்டு புவியில் இல்லை
கலையில் உண்டு மலையில் இல்லை
கம்பியில் உண்டு கப்பியில் இல்லை
(..............................)

37. இங்கிலாந்து நேரம் மு.ப 1.00 மணியாக இருக்கும் போது இலங்கை நேரம் மு.ப 7.00 மணியாகும். இலங்கை நேரப்படி மு.ப 6.00 மணிக்கு புறப்பட்ட விமானம் ஒன்று 6 மணித்தியாலங்களின் பின்னர் இங்கிலாந்தை சென்றடைந்தது. எனின், விமானம் இங்கிலாந்தைச் சென்றடைந்தபோது இங்கிலாந்து நேரம் யாது? (..............................)

38. 8 வாழைப்பழங்கள் வாங்கும் விலைக்கு 6 மாம்பழங்கள் வாங்கலாம். 12 மாம்பழங்கள் வாங்கும் விலைக்கு 8 தோடம் பழங்கள் வாங்கலாம். எனின், ஒரு தோடம்பழம் வாங்கும் விலைக்கு எத்தனை வாழைப்பழங்கள் வாங்கலாம்?
(..............................)

39. வினாக்குறி (-?-) இடப்பட்டுள்ள இடங்களில் வரவேண்டிய எண்கள் எவை?

| | | | | |
|---|---|---|---|---|
| 32 * | 8 | # | 11 | |
| 9 | # | 12 * | 3 | |
| 60 * | ? | # | ? | |

(..............)    (..............)

40. உரிய முறையில் சொற்கள் பிரித்து எழுதப்படாத வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. இவ் வாக்கியத்திலுள்ள சொற்களை உரிய முறையில் பிரித்து எழுதிக் காட்டுக.
மாண    வர்கள்மைதா    னத்தி    ல்விளையா    டிக்கொண்டிருக்கி    றார்கள்.
..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

மாணவர் சுட்டெண்:- ............................ நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

**01. பாடலின் உதவியுடன் 01 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

அ) கல்லும் மலையும் குதித்து வந்தேன்
பெரும் காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

ஆ) காலம் நிலத்தழல் ஆற்றி வந்தேன் - அதில்
கண்குளிரப் பயிர் கண்டு வந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் - அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்.

01) இப்பாடலில் எது தன் கதையை கூறுவதாக அமைந்துள்ளது? ..............
02) இப்பாடலில் உள்ள அடுக்கு மொழித்தொடரை எழுதுக. ..............
03) பாடலில் உள்ள தன்மை ஒருமை வினைச்சொல் ஒன்று தருக. ..............
04) ஆசை தீர விளையாடிய இடம் எது? ..............
05) பாடலில் உள்ள தன்மை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று தருக. ..............
06) மலை என்பதன் ஒத்தசொல் தருக. ..............
07) கண் குளிரப்பயிர் கண்டு வந்தேன் என்பதிலே உள்ள தோன்றா எழுவாய் யாது? ..............
08) பாடலில் உள்ள அடைமொழிச் சொல் ஒன்று தருக. ..............
09) வந்தேன் என்பதன் எதிர்கால வடிவம் யாது? ..............
10) எங்கு தவழ்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது? ..............

**02. பின்வரும் தொடர்களினால் உணர்த்தப்படும் கருத்தை எழுதுக.**
01) கண் ஹேத்தல் - ..............
02) சிட்டாய்ப் பறத்தல் - ..............

**03. இடைவெளிக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**
01) தொழிற்சாலை .................. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
(ஊளியர்கள், ஊழியர்கள், ஊழியர்கள்)
02) தாவர வளர்ச்சிக்கு .................. அவசியமானது.
(சூரியஒளி, சூரியஒலி, சூரியஒழி)
03) கிராம மக்கள் .................. யை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.
(மண்ணெண்ணெய், மன்ணெண்ணெய், மண்ணொண்ணெய்)

**04. சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**
01) யாவும் / சுற்றுகின்றன / கோள்கள் / நீள்வட்டப் / சூரியனை / பாதையில்
..............
02) மஞ்சள் / தாம் / வேண்டும் / ஊடாக / கோட்டின் / வீதியை / கடக்க
..............

**05. பின்வரும் தொடர்களின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக.**
01) காடுகளை அழித்து செய்யப்படும் பயிர்ச்செய்கை - ..............
02) பழமை வாய்ந்த பொருட்களை சேகரித்து வைக்குமிடம் - ..............

**06. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச்சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**
01) மதிய உணவு - ..............
02) சூரியன் - ..............

**07. ஆங்கில சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச்சொற்களை எழுதுக.**
01) Garden - ..............
02) Mosquito - ..............

**08. பின்வரும் சிங்கள சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**
01) ஆயுபோவன் - ..............
02) வதுர - ..............



**09. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) இலங்கையைப் போர்த்துக்கேயர் கைப்பற்றிய ஆண்டு எது?
1) 1815. 2) 1796. 3) 1505 4) 1734.

02) ஆசியஜோதி என்னும் நூல் மூலம் புத்தரின் வாழ்க்கையைக் காவியமாகத் தந்தவர்
1) அழ. வள்ளியப்பா. 2) சோமசுந்தரப்புலவர்.
3) அப்துல்லா புலவர். 4) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

03) நான்கு சோடிக் கால்களைக்கொண்ட பிராணியைத் தெரிந்து கோடிடுக.
1) தேள் 2) நண்டு. 3) கரப்பான். 4) நுளம்பு.

04) அருகில் காட்டப்பட்டுள்ள தேசியத்தலைவர் செய்த சேவைகளில் ஒன்றைத் தெரிந்து கோடிடுக.




1) மத்திய கால சிங்கள கலைகள் நூலின் ஆசிரியர்.
2) பாகிஸ்தானிய இலங்கைக்கான தூதுவராகக் கடமையாற்றியவர்.
3) சிங்கள அகராதியின் ஆசிரியர்.
4) இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியவர்.

05) இவ்வாண்டு சீனாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றும் இலங்கை குத்துச்சண்டை வீரர் யார்?
1) பிரதீப்குமார. 2) அனுருத்த ரத்னாயக்க. 3) சுசந்திலகரட்ன. 4) சிந்தனகே.

06) வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) அல்பனா. 2) கொலாஜ். 3) முத்திரை பதித்தல். 4) ஸ்டென்சில்.

07) கட்டாயச் சுற்றுவட்டம் என்பதைக் குறிக்கும் குறியீட்டை தெரிவு செய்க.




08) வளியின் இயல்பாகக் கொள்ள முடியாதது எது?
1) நிறை உண்டு. 2) திடமான வடிவம் உண்டு.
3) இடத்தை நிரப்பும். 4) வெப்பமேற்றும்போது விரிவடையும்.

09) சார்க் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை யாது?
1) 7 2) 8 3) 10 4) 12

10) கடவுச்சீட்டு ஒன்றை பெற்றுக்கொள்ள நாம் செல்ல வேண்டிய இடம் எது?
1) ஆட்பதிவுத் திணைக்களம். 2) கிராம சேவகர் அலுவலகம்.
3) குடியகல்வு, குடிவரவு திணைக்களம். 4) பிரதேச செயலகம்.


11) பனிக்கட்டிகளை நீரில் போட்டால் தோன்றும் விதம் யாது?



12) கைகளையும், கால்களையும் பயன்படுத்தி விளையாடும் விளையாட்டு எது?
1) கிரிக்கட். 2) நகர். 3) கரப்பந்தாட்டம். 4) எல்லே.

13) "வானத்தில் இருந்து விழும் ஒரு துளி நீரையும் கடலை சென்றடைய விடமாட்டேன்" என்ற உணர்வுடன் செயற்பட்ட மன்னன்.
1) மகாசேனன். 2) பண்டுகாபயன். 3) பராக்கிரமபாகு. 4) வசபன்.

14) அருகில் காணப்படும் உடுத்தொகுதி எது?
1) துலா.
2) கலப்பை.
3) விருச்சிகம்.
4) சிஷபம்.



15) விசர் நாய் தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர்,
1) ஆர்.C.சினாக். 2) லூயிபாஸ்டர். 3) ஐசாக் நியூட்டன். 4) கார்பென்ஸ்.

**10. உருவில் உள்ள ஒவ்வொரு தாவரத்தின் பெயரையும் அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.**
( குப்பைமேனி, நன்னாரி, கறிவேப்பிலை, நெருக்கி, ஆடாதோடை, முடிதும்பை, அகத்தி )



1) .............. 2) .............. 3) .............. 4) ..............

**11. உருவில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விளையாட்டினதும் பெயரை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக.**



( கரப்பந்து, நகர், எல்லே, நீச்சல், பனிச்சறுக்கல், டெனிஸ், உதைபந்து )




1) .............. 2) .............. 3) .............. 4) ..............

**12. பின்வரும் கணித வினாக்களுக்குரிய விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

01) மூன்று தேங்காய்களின் விலை ரூபா 72 எனின், ஐந்து தேங்காய்களின் விலை யாது? ..............

02) 5kg தேயிலை 250g பொதிகளில் அடைக்கப்பட்டது. எனின் அடைக்கப்பட்ட பொதிகளின் எண்ணிக்கை யாது? ..............


03)



இவ்வுருவின் சுற்றளவு யாது? ..............


04) கண்ணனினதும், ரவியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 35 ஆகும். கண்ணனின் வயதைப்போல் நான்கு மடங்கு ரவியின் வயது எனின், கண்ணனின் வயது யாது? ..............

05)



உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணில் தருக? ..............

06) பிற்பகல் 9 மணி 50 நிமிடம் என்னும் நேரத்தை நியம நேரத்தில் அருகிலுள்ள கடிகார முகத்தில் காட்டுக.



07) 609 மாம்பழங்களை வியாபாரி ஒருவர் மூன்று கூடைகளில் சம அளவாக பிரித்தார் எனின், ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? ..............

08) கழிக்க. $\frac{4}{5} - \frac{1}{4} =$ ☐

09) வெற்று அடைப்புகள் இரண்டுக்கும் பொருத்தமான இலக்கங்களை அடைப்பினுள் எழுதுக.

$$\begin{array}{r} \square\,5 \\ -\;4\;\square \\ \hline 2\;0 \end{array}$$

10) 2850ml ஐ லீற்றர், மில்லிலீற்றரில் தருக? .......... l .......... ml

**13. மாகாண மட்ட விளையாட்டுப்போட்டி ஒன்றில் கலந்துகொண்ட வீரர்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டரீதியாகக் காட்டப்பட்டுள்ளது.**

| மாவட்டம் | ஆண் | பெண் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 38 | 26 |
| கிளிநொச்சி | 27 | 19 |
| முல்லைத்தீவு | 24 | 24 |
| வவுனியா | 35 | 31 |
| மன்னார் | 28 | 30 |

1) வவுனியா மாவட்டத்தில் கலந்துகொண்ட வீரர்களின் எண்ணிக்கை யாது? ..............
2) போட்டியில் கலந்துகொண்ட ஆண் வீரர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............
3) எந்த மாவட்டத்தில் இருந்து கலந்துகொண்ட வீரர்களின் எண்ணிக்கை அதிகமாகும்? ..............
4) எல்லா வீரர்களையும் மூன்று குழுக்களாகப் பிரித்தால் ஒரு குழுவில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை யாது? ..............
5) போட்டியில் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட பெண் வீரர்களுக்கு 71 500ml குளிர்பானம் சம அளவாக வழங்கப்பட்டது எனின், ஒருவருக்கு வழங்கப்பட்ட குளிர்பானத்தின் அளவு எத்தனை மில்லிலீற்றராகும்? ..............

**14.** உமது வகுப்பில் கற்கும் மாணவன் கண்ணன் ஒழுங்காக பாடசாலைக்கு சமூகந்தருவதில்லை. வகுப்பு வேலைகளையும் சரிவரச் செய்வதில்லை. புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ள காலம் அண்மித்துள்ளமையினால் ஏழை மாணவனான கண்ணனுக்கு நீ வழங்கக்கூடிய அறிவுரைகளை ஆறு வாக்கியங்களில் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இருக்க வேண்டும்)
..............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org